

KALKI 29-4-84 ரூ1·20
ரசிகர் மன்றங்களா?
ரகளைக் கும்பல்களா?
கல்கி

வியர்க்குருவினின்று நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.







நைஸில் உபயோகியுங்கள்

வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.

நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம் பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவதனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.


1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது. 3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

2 தினுசு டப்பாக்களில் கிடைக்கிறது. 'நீலம்', சந்தனம்'.

உடல் நலத்தின் உறைவிடம்

க்ளாக்ஸோ

HTB-GLL/88G6




ஆப்கன் பிரச்னை

ஆதம்கானின் அப்பா


"அவர்கள் அப்பாவிகள். சூது வாது அறியாதவர்கள். மிகவும் ஏழ்மையான. நாட்டில் வேளாண்மை, கால்நடைகள் இவற்றை மட்டுமே நம்பி வாழ்கிறவர்கள்" என்று ஆப்கானியர்களைப் பற்றிச் சொன்னார் தாமஸ் இ. குட்டியர்.

பத்து ஆண்டுக்காலம் ஆப்கானிஸ்தானத்து மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களின் உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டவர் கல்வியாளரான இந்த அமெரிக்கர். அண்மையில் இவர் சென்னை வந்திருந்தார்.

சோவியத் நாட்டின் இராணுவப் பிடியில் அகப்பட்டுள்ள ஆப்கன் நிலவரம் பெருவாரியான ஆப்கன் மக்களுக்கு உடன்பாடில்லை. "எங்களுக்குச் சுதந்திரம் தான் வேண்டும்" என்கிற ஒரே சிந்தனையுடைய பலர் ஆப்கான் நாட்டை விட்டு இரவோடு இரவாக அகதிகளாக வெளியேறி விட்டார்கள். அண்டை நாடான பாகிஸ்தானுக்கு மட்டும் முப்பது லட்சம் அகதிகள் வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஆகிற மறுவாழ்விப்புச் செலவில் பாதிக்கு மேல் அமெரிக்கா ஏற்கிறது என்பதைத்தவிர இவர்களுக்கு ஆயுத உதவி எதையும் செய்யவில்லை என்கிறார் குட்டியர்.



✖ ஆப்கானிஸ்தானில் குதுப் மினார் போன்றதொரு கோபுரம்



✖ ஆப்கானிஸ்தானில் புரட்சியாளர்கள்.

இன்னும் பத்து இருபது ஆண்டுகள் இதே நிலவரத்தில் போகுமானால் ஆப்கானிஸ்தானம் இருக்கும், ஆனால் ஆப்கானிய மக்கள் இருக்க மாட்டார்கள் என்கிறார் இவர். லதா மங்கேஷ்கரின் இசை மழையில் மனதைப் பறி கொடுத்துக் கொண்டு பக்கீஸா போன்ற இந்தியத் திரைப்படங்களை ரசித்துக் கொண்டிருந்த ஆப்கானியர்களால் அங்கே தினசரி பெய்கிற குண்டு மழைகளைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. தப்பியோடுகிறார்கள்.

அமெரிக்க அமைதிப் படைத் தொண்டராகவும், ஆப்கன் அமைச்சரவையின் கல்வித் துறை ஆலோசகராகவும், பாஸ்கெட் பால் கோச் ஆகவும் கூட ஆப்கானிஸ்தானத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றிய குட்டியர், இன்றைய ஆப்கானிஸ்தானத்தின் நிலையைப் பற்றி வேதனையுடன் மேலும் பல தகவல்களைச் சொன்னார்.

ஆப்கன் நாட்டின் காபூலி பெர்ஸியன் மொழியான தாரியில் கவிதைகளும் எழுதக் கூடிய அளவுக்குப் புலமை பெற்றிருக்கும் இவர் அரபிக், பிரெஞ்ச், ஜெர்மன், லத்தீன், ருஷ்ய மொழி, ஸ்பானிஷ், என்று ஏழு மொழிகளில் திறமை பெற்றவர். இப்போது 44 வயது.

ஆப்கன் மக்கள், பண்பாடுகளால் கவரப்பட்ட குட்டியர் தம்முடைய மகனுக்கு ஆதம்கான் என்றே பெயரிட்டழைக்கிறார்.

ஆப்கன் சுதந்திர நாடாக இருந்த காலத்தில் யு.எஸ்., சோவியத் தவிர பல சிறு நாடுகளின் உதவிகளும் அவர்களுக்குக் கிடைத்தன. பழங்களையும், பருப்புவகைகளையும் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துகொண்டு மகிழ்ச்சியாகத்தான் இருந்தார்கள். கூட்டுச் சேரா நாடுகளின் ஒரு அங்கமாக ஆப்கானிஸ்தானம் இருந்து வந்தது.

காபூலுக்கும் சோவியத்துக்கும் 1960-ஆம் ஆண்டில் சாலை அமைத்துக் கொடுத்து, இராணுவ உதவி, வேளாண்மை உதவி என்று சோவியத், ஆப்கான் நாட்டுக்கு உதவி புரிந்த போதிலும், இப்போது முழு அளவில் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் அதைக் கொண்டு வந்திருப்பதை யாருமே விரும்பவில்லை.

இதுவரை இரண்டுலட்சம் சிவிலியன்களுக்கு மேல் கொல்லப்பட்டு விட்டார்கள். யுத்தத்துக்கு முன்பு ஒன்றரைக் கோடி மக்கள் இருந்த ஆப்கானிஸ்தானத்தில் வெளியேறியவர்கள் உட்பட நாலில் ஒரு பங்கு எண்ணிக்கை குறைந்து விட்டது என்கிறார் குட்டியர்.

கிரனடா, விவகாரத்தில் என்ன நடந்தது? ஏழாயிரம் பேரை மட்டும் அமெரிக்கா அனுப்பியது. ஆனால் அவ்வளவு பேர்களையும் ஒருவர் பாக்கியில்லாமல் திரும்பப் பெற்று விட்டது. ஆனால் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானத்தை விட்டு வெளியேற மறுக்கின்றன. தினசரி விமானங்கள் குண்டு வீசித் தாக்குகின்றன. இஷ்டலிப் என்கிற பகுதி தொடர்ந்து இரண்டு வாரங்கள் குண்டு வீசித் தாக்கப்பட்டதில் 230 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த விஷயத்தில் பாரதம் உதவ முன்வர வேண்டும் என்பது குட்டியரின் கருத்து. கூட்டுச்சேரா நாடுகளின் தலைவர் என்கிற முறையிலும் பாரதப் பிரதமர் தன்னுடையசெல்வாக்கைப் பயன்படுத்தி சோவியத் படை விலகலுக்கு உதவ முடியும். இப்படிச் செய்து ஆப்கானிஸ்தானத்தில் அமைதி மலரச்செய்வதன் மூலம் அவருடைய செல்வாக்கு உயர்வது மட்டுமின்றி, அமைதிக்கான நோபல் பரிசைப் பெறுகிற வாய்ப்பும் கிடைக்கக் கூடும் என்கிறார் இவர்.

மனம் திறந்து உரையாடுகிறார் குட்டியர். வியத்நாம் பற்றிய குறிப்பு வந்த போது 'அந்த நிகழ்ச்சி



✕ நார்மன் டி. குட்டியர்

விசனிக்கத் தக்கது. அமெரிக்காவில் தேர்தல் முடிவுகளைப் பாதித்தது' என்கிறார்.

உலகம் முழுவதும் போர் ஆரவார அபாயங்கள், ஆக்கிரமிப்பு மிரட்டல்கள் எல்லாம் இல்லாமல் அமைதியான மனித நேய உணர்வு நிலை பெறவேண்டும் என்கிற ஆசையை குட்டியரிடம் காண முடிகிறது.


—நிருபர்

வாடா மருதப்பா

எட்டயபுரம் மன்னர் மருதப்ப பூபதியால் போற்றிப் புகழப்பட்டவர் கடிகை முத்துப் புலவர். ஒருசமயம் பூபதியைக் கண்ட புலவர், 'வாடா மருதப்பா' என்று கூறி வரவேற்றார். பூபதி ஒரு கணம் திடுக்கிட்டார். அடுத்தபடியாக புலவர் வாயிலிருந்து, ''வாடியிருக்கிறேன் பார்த்தாயா?'' என்ற வார்த்தைகள் வந்தன. பூபதி சிலேடை உணர்ந்து முகமலர்ந்து புலவர்க்கு வேண்டுவன கொடுத்தார்.

—பனசை சாமிநாதன்.





விற்பனை

விற்பனைப் பிரிவுகள்
ஏராளமாய் வளர்ந்து விட்டன...
அப்பா மகளை விற்கிறார்
சம்பந்தியிடம்...
மகள் கனவுகளை விற்கிறாள்
கணவனிடம்...
குழந்தை அன்பை விற்கிறது
அடுத்த வீட்டுக்காரர்களிடம்....
தலைவர்கள் வாக்குறுதிகளை
விற்கிறார்கள் மக்களிடம்...
சில கவிஞர்கள் சோகங்களை
விற்கிறார்கள் பதிப்பகத்தாரிடம்....

பொன். சந்தானகிருஷ்ணன்.

குடும்பப் பெண்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு!

சோளி, பெட்டிகோட், புதுரக நிர்மல் கைச்சட்டை, சிறு குழந்தைக்கு கால் சட்டையும் ஜட்டியும், Aலைன் டிரஸ் (சிறு பெண்களுக்கு) 6 வயது முதல் 7 வரையிலான குழந்தை ஆடை, 5 முதல் 6 வயது வரையுள்ள குழந்தைக்கு பிப்புடன் (Bib) கூடிய கவுன், சிறுவர்களுக்கு அரை நிஜார் புஷ்கோட் போன்ற 13 விதமாக துணிகளை வீட்டிலேயே தைக்கவோ, அவைகளை தைக்கும் முறைகளை எளிதாக கற்றுக் கொள்ளவோ ஒரு அரிய வாய்ப்பு.

சமீபத்தில் வெளியிட்ட **"நிர்மலா தேசிகனின் 10 எளிய பாடங்களில் தையல்"** புத்தகத்தின் மூலம் தையல் கற்றுக் கொள்ள இதோ ஓர் வாய்ப்பு.



உலகப் புகழ் பெற்ற சிங்கர் தையல் மெஷின் கம்பெனிக்காக ஆங்கிலத்தில் தயாரித்த இப்புத்தகம் பல ஆயிரம் பிரதிகள் விற்பனையாகின. இதோ தமிழ் புத்தகம் எளிய நடையில் எழுதப்பட்டு விருவிருப்பாக விற்பனையாகிறது. சில மாதங்களில் தையல் கூலி மிச்சத்திலேயே இப்புத்தகத்தின் விலையை எடுத்து விடலாம். 10 எளிய பாடங்களில், தைக்க தெரியாத பெண்கள் கூட வீட்டிலேயே உட்கார்ந்து தையல் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 30/- தபால் செலவு உட்பட. திருமணங்களுக்கு அளிக்கும் அரிய பரிசும் கூட. உங்கள் தேவைக்கு உடனே ரூ. 30/- அனுப்புங்கள்.

இதுவரை எந்த ஒரு தமிழ் தையல் புத்தகத்துடனும் எளிதாக புரியக் கூடிய வகையில் வரை படங்கள் கொடுத்ததில்லை.

இவ்வரை படங்களில் குறித்த குறிப்புகளை பின்பற்றினால் வெகு எளிதில் உங்களுக்கு தேவையான உடை உடனே தயார்.

இன்றே கீழ்க்கண்டுள்ள கூப்பனை பூர்த்தி செய்து ரூ. 30/- (தபால் செலவு உட்பட) DD மூலமாகவோ / P. O. / அல்லது M. O. மூலமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

ஸ்பெஷாலிடி பதிப்பகம், 22, II மெயின் ரோடு, கஸ்தூர்பா நகர், சென்னை-600 020

இயா,

எனக்கு நிர்மலா தேசிகன் அளிக்கும் "10 எளிய பாடங்களில் வீட்டிலேயே தையல் கற்றுக் கொள்ளுங்கள்." புத்தகத்தை ரெஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். இத்துடன் ரூ. 30/-க்கு மணியார்டர் / ட்ராப்ட் / போஸ்டல் ஆர்டர் இணைத்துள்ளேன்.

கையொப்பம்.

பெயர் : ______________________

முகவரி : ______________________

____

____

____

இன்று தமிழ்நாட்டில் எந்த சிற்றூருக்குப்போனாலும், தப்பாமல் நாம் காணக் கூடிய சாராயக் கடை கள்ளுக்கடை, இவற்றுடன் நடிக, நடிகையர்க்கான ரசிகர மன்றங்களையும் பார்க்கலாம். ஹீரோவாய் நடிக்கிறவருக்குத் தான் என்றில்லை. திரையில் தோன்றி விட்ட அனைவருக்குமே எங்காவது ஒரு மூலையில் ஒரு ரசிகர் மன்றம் முளைத்து விடும்.

சங்கம் மன்றமாகியது.

முன்பெல்லாம் சென்னை சினிமா ரசிகர்கள் சங்கம், மதுரை சினிமா ரசிகர்கள் சங்கம், சேலம் சினிமா ரசிகர்கள் சங்கம் என்று ஒட்டு மொத்தமாய்ப் பெரிய ஊர்களில் இருக்கும். இவை மக்களிடையே சினிமா ரசனையைவளர்த்து, ஆண்டுதோறும் சிறந்த படம், சிறந்த நடிகை, சிறந்த நடிகர், என்றெல்லாம் தேர்ந்தெடுத்து, பரிசும், பாராட்டும் கொடுத்துக் கௌரவித்து வந்தன. நாளடைவில் அப்படிப்பட்ட அமைப்புகள் மறைந்து தனிப்பட்ட முறையில் நடிக நடிகையர்களுக்கு மன்றங்கள் செயல்பட ஆரம்பித்தன.

பாகவதர், என்.எஸ்.கே.:

தமிழ்த் திரையுலகில் கொடி கட்டிப் பறந்த தியாகராஜ பாகவதர் லட்சக்கணக்கில் ரசிகர்களைத் தான் பெற முடிந்ததே தவிர, ரசிகர் மன்றங்களைப் பெற முடியவில்லை.



✕ தியேட்டர் வாசலில் ரசிகர் மன்ற பேனர்கள்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனுக்குக் கூட, ரசிகர்கள், அவர் பெயரில் படிப்பகங்கள் வைத்திருந்தனரே தவிர ரசிகர் மன்றங்கள் ஆரம்பிக்கவில்லை. அப்படியெனில் யார்காலத்தில் ரசிகர் மன்றங்கள் முதலில் ஆரம்பிக்கப்பட்டன?

எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆருக்குத்தான் தீவிரமான ரசிகர்கள் நிறைய அளவில் உருவாயினர். காரணம் அவர் படங்களில் ஏற்று நடித்த ராபின் ஹுட் பாத்திரங்களே. எம். ஜி. ஆர். ரசிகன் என்று சொல்லிக் கொள்வதே (குறிப்பாக அவர் முதல்வரானவுடன்) ஒரு ஃபாஷனாகியது. எம். ஜி. ஆர். சினிமாவில் நடித்துக் கொண்டிருந்த போது, தமிழகத்திலும், மற்றும் பிற மாநிலங்களிலும் சுமார் 18,000 எம். ஜி. ஆர். ரசிகர் மன்றங்கள் இருந்தன. தவிர அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற அயல் நாடுகளிலும் எம். ஜி. ஆருக்கு ரசிகர் மன்றங்கள் உண்டு. ஆனால் எம். ஜி. ஆர். சினிமாவிலிருந்து விலகிய பின் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றங்கள், எம். ஜி. ஆர். நற்பணி மன்றங்கள் என்று புதுப் பெயர் சூட்டிக் கொண்டன. இன்று அகில உலக எம். ஜி. ஆர். மன்றங்



✕ திரையுலகுடன் 45 வருடம் தொடர்பு கொண்ட திரு. ரத்தினம், இக்கட்டுரைக்கான பல தகவல்களைத் தெரிவித்தார்.



✕ நடிகர்களுடன் ரசிகர்மன்றத் தலைவர்



✕ ஸில்க் ஸ்மிதா ரசிகர் மன்ற அறிவிப்பு

ரசிகர் மன்றங்களா?



டி.எம்.எஸ்ஸுடன் மன்றத் தலைவர் எஸ். ஆர். சுப்பிரமணியம்



✕ ரஜினிகாந்த் மன்றத்தலைவர் முத்துமணி

களின் தலைவர் முசிறிப் புத்தன்.

சிவாஜி மன்றங்கள்:

கிட்டத்தட்ட தமிழ்நாடு மற்றும் வெளி மாநிலங்களில் 9000 சிவாஜி ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. சிவாஜிக்கு ஆரம்ப காலத்தில் அனைத்துக்கட்சியிலிருந்தும் ரசிகர்கள் இருந்தனர். ஆனால் தற்போது சிவாஜியின் ரசிகர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் தான். தளபதி சண்முகம்தான் இதன் தலைவர். பொதுச் செயலாளர் திரு. ராஜசேகரன்.

மன்றம் ஏன் ஆரம்பிக்கிறார்கள்?

ஒரு நடிகரின் (அ)நடிகையின் நடிப்பில் கவரப்பட்ட ஒரு சிலர் ரசிகர் மன்றங்களை ஆரம்பிப்பதாகக் கூறுகின்றனர். இது பெரும்பாலும் சரியே. சமயத்தில் இது வேறுபடவும் கூடும். உதாரணமாக, மதுரைக் கருகில் உள்ள ஒரு கிராமத்திற்கு ஒரு படப்பிடிப்பு கோஷ்டி வருகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த படத்தில் நடிக்கும் கதாநாயகனோ அல்லது கதாநாயகியோ அந்த கிராமத்தில் இருக்கும் பெரிய பணக்காரரின் வீட்டில் தங்குவார். படப்பிடிப்பு முடிந்து கோஷ்டி ஊரைக் காலி செய்து கொண்டு போய் விடும். ஆனால் இந்தப் பெரிய பணக்காரர் தமக்கும் அந்தப் படத்தில் நடிக்க கதாநாயக நடிகருக்கும் அல்லது நடிகைக்கும் உள்ள தொடர்பைத் தொடர்ந்து கொள்ள ரசிகர் மன்றம் ஆரம்பித்து விடுவார். பிறகு சென்னை வந்து நடிகரின் பங்களாவில் பி. ஏ. விடம் ''கிராமத்துக்கு அண்ணன் வந்த போது நம்ம வீட்ல தான் தங்கியிருந்தாங்க.... மன்றம் ஆரம்பித்திருக்கிறோம்...'' என்று பல்லைக் காட்டி கொண்டு நிற்பது சகஜம்.

ரகளைக் கும்பல்களா?

''கவர்ச்சி'' மன்றங்கள்

இவை கவர்ச்சி நடிகையைப் பயன்படுத்திக் கொண்ட சிலரால் தோற்றுவிக்கப்படும் மன்றங்கள் தானே தவிர, கவர்ச்சி நடிகையின் நடிப்பாற்றலைக் கண்டு வியந்து ஆரம்பிக்கப்படும் மன்றங்கள் அல்ல.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒய் விஜயா என்ற நடிகையின் வீட்டிற்குச் செல்ல வேண்டி இருந்தது. ஒரு சில படங்களே நடித்து முடித்திருந்தார் அந்த நடிகை. ஆனால் அவர் வீட்டில் இருந்த வரவேற்பு அறையில் 'அகில இந்திய ஒய் விஜயா ரசிகர் மன்றத்தின்' சார்பில் வாசித்தளிக்கப்பட்ட வரவேற்பிதழ் என்று ஃபிரேம் போட்டு மாட்டியிருந்தது. சில படங்களே நடித்த இந்த நடிகைக்கு அகில இந்தியாவிலும் ரசிகர்கள் இருக்கிறார்களா என்று வியப்பு மேலிட்டது.

இதே போல ஜெயமாலினி, விஜயஸ்ரீ, விஜயலலிதா, 'சில்க்' ஸ்மிதா, அனுராதா மன்றங்களைக் குறிப்பிடலாம். ஆனால் 'சில்க்' ஸ்மிதா மட்டும் சற்று வித்தியாசப்படுகிறார்.

'சில்க்' மன்றங்கள்

தமிழ் படங்களில் கிளப் டான்ஸ் பாடல் காட்சிகள் சற்று டல்லடித்த சமயம் 'சில்க்' திரையுலகத்திற்கு வந்தார். சற்று உஸ்.... புஸ்ஸென்றும் 'ஆ'...., ஊ'வென்றும், கண்டி-

✕ அண்ணாவின் மறுபிறவியான எம்.ஜி.ஆர். மன்றம்



யிழுக்கும் குரலுடன் (உபயம்: ஜானகி) விகாரமான நடன முத்திரைகளோடு 'சில்க்' ஆடிய ஆட்டம் தென் மாவட்ட மக்களை மின்சாரம் போல் தொட்டது. அதனால்கவரப்பட்ட அந்த ரசிகர்கள் தாமாகவே தொடங்கினார்கள் ரசிகர் மன்றங்களை. இன்று 'சில்க்' ஸ்மிதாவுக்கு எந்த ஒரு சமீபத்திய நடிகைக்கும் இல்லாத அளவில் மன்றங்கள் உள்ளன. சில ரசிகர்கள் இந்தக் கவர்ச்சி நடிகைகளின் ரசிகர் மன்றங்களை ஆரம்பிப்பதோடு திருத்திக் கொள்வதில்லை. கொஞ்சம் 'ஓவராகவே' போகிறார்கள். தற்போது திரையில் பிரபலமாகிக் கொண்டிருக்கும் ஒரு நடிகை சற்று வெறுப்புடன் சொன்னார்: ''சமீபத்தில் கோயமுத்தூர் மாவட்டத்திலிருந்து சிலர் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் மிகுந்த பணக்காரர்போலத் தோற்றமளித்தார். கூட வந்திருந்த மற்றவர்கள், 'அவருக்குத் தோப்பு இருக்கிறது. தொழிற்சாலை இருக்கிறது' என்று எனக்குப் பட்டியல் போட்டுக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் விடைபெறும் போது மற்றவர்கள் சென்று விட்டனர். இவர் மட்டும் தனியாக என்னிடம் தாம் தங்கியிருக்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் பெயர், ரூம் நெம்பர் ஆகியவற்றை அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்துக் கொண்டே சொன்ன போது எனக்கு அந்த ஆளைக் கட்டையால் அடிக்கலாம் போல இருந்தது.''

ஆரம்ப கால கட்டத்தில் இந்த மாதிரியான சந்தர்ப்பங்களை நடிகைகள் மற்றும் கவர்ச்சி நடிகைகள் சந்திப்பது மிகவும் சகஜமான ஒன்று. ஆனால் சற்றுப் பிரபலமானவுடன் இந்த விஷயங்கள் நடக்காது.

மன்றம் ஆரம்பிப்பது எப்படி

ஒரு கிராமத்தில் ஒரு நடிகரின் மன்றம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், ஆரம்பிப்பவர் நேரிடையாகத் தலைமை மன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும். ரசிகர் மன்றத்தைப் பதிவு செய்து கொள்ள ஐந்து ரூபாயோ அல்லது பத்து ரூபாயோ அனுப்ப வேண்டும். பணம் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாகத் தலைமை மன்றத்திலிருந்து ரசீது வந்தவுடன் மன்றத்தை ஆரம்பித்து விடலாம். எம். ஜி. ஆர். சிவாஜி, கமல், ரஜினி, பாக்கியராஜ் போன்றவர்களுக்கு தலைமை ரசிகர் மன்றங்கள் சென்னையிலேயே இருக்கின்றன. சந்திரசேகர், விஜயகாந்த் பாண்டியன் போன்றவர்களுக்கு மதுரையில் தலைமை ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன.

பாடகர், இசையமைப்பாளர் மன்றங்கள்.

இளையராஜா, எம். எஸ். விஸ்வநாதன், சங்கர் — கணேஷ், டி. ராஜேந்தர் போன்றவர்களுக்குத் தமிழ் நாட்டில் மன்றங்கள் உண்டு. டி. எம். எஸ்., 'மலேசியா வாசுதேவன்' எஸ். பி. பாலசுப்பிரமணியம், சசீலா, ஜானகி போன்ற பாடகர்களுக்கும் மன்றங்கள் உண்டு. குறிப்பிட்ட நபரின் இசையிலோ அல்லது குரலிலோ கவரப்படுபவர்கள்தான் இந்த மன்றங்களில் உறுப்பினர் ஆகிறார்கள். தங்கள் ஊரில் யாராவது இவர்களின் இசைக் கச்சேரியை நடத்த வேண்டுமென்றால் இந்த மன்றங்களின் மூலம் சம்பந்தப்பட்டவர்களை அணுகினால் அனுமதி சுலபமாகப் பெறலாம்.

அரசியல்

நடிப்பால் தான் உருவாக்கிக் கொண்ட புகழை அரசியலுக்கு ஒரு நடிகர் பயன்படுத்தும் போது தான் ரசிகர்கள் பலியாகிறார்கள். 1972–1977 கால கட்டங்களில் எம். ஜி. ஆர். ரசிகர்கள் பட்ட பாடு சொல்லி முடியாது. ஆனால் சிவாஜி ரசிகர்கள் அந்த அளவுக்குக் கஷ்டப்பட்டு இருப்பார்களா என்பது சந்தேகமே! ஜெய்சங்கர், கலைஞர் படங்களில் நடிக்க ஆரம்பித்த போது தி. மு. க. சாயம் அவர் மீது பூசப்பட்டது. பிறகு நடிகர் சந்திரசேகர் இவ்வாறு பாதிக்கப்பட்டார். ஆனால் சிவாஜி எம். ஜி. ஆர். போல ரசிகர்களை அரசியலில் தங்கள் முன்னேற்றத்துக்கு பயன்படுத்திக் கொண்டவர்கள் தமிழ் நாட்டில் வேறு யாரும் இல்லை. இந்த இருவரின் ரசிகர்களும் தங்கள் அபிமான நடிகர் எந்த கட்சியில் இருக்கிறாரோ அதில் தான் இருப்பார்கள். 'காங்கிரஸில் சிவாஜி இல்லாவிட்டால் நாங்கள் விலகி விடுவோம்' என்று சொல்லும் ரசிகர்கள் 99 சதவீதம். எம். ஜி. ஆர். நடித்த ஒவ்வொரு படமும் கட்சிக் கொடியை, தலைவரை கொள்கைகளைப் பிரதிபலித்தது. இது தி. மு. க. வளர்வதற்கு மிகவும் உதவியது. பின்னர் அ. தி. மு. க. விற்கு அதுவே அஸ்திவாரமாகியது.

'தவக்களை' மன்றம்

முந்தானை முடிச்சு படத்தில் நடித்துப் புகழ்பெற்ற தவக்களை என்ற சிட்டிபாபு தமது குள்ளமான உருவத்தையும் கவர்ச்சி இல்லாத முகத்தையும் வைத்துக் கொண்டு, பாக்கியராஜின் ஆபாச வசனங்களைப் பேசிப் பிரபலமானவர். இவருக்கும் ரசிகர் மன்றமா? இதே கேள்வியை மதுரையில் தவக்களை ரசிகர் மன்றம் வைத்திருக்கும் இ. க. சந்திரசேகரிடம் கேட்ட போது அவர் சொன்னார்: 'தவக்களை' உருவத்தில் தான் சிறியவர். ஆளைப் பார்த்து அறிவை எடை போடக் கூடாது. பரமாத்மா கூட வாமன அவதாரமெடுத்துத் தான் உலகுக்கு வந்தார். பிறகு விண்ணுக்கும் மண்ணுக்குமல்லவோ விஸ்வ

ரூபம் எடுத்தார்! என்றைக் தமே செயலை செய்கிறவர் சிறியவரா, பெரியவரா என்று பார்க்கக் கூடாது. செய்யப்படுகிற செயல் இன்பம் தரக் கூடியதாக இருக்கிறதா என்று தான் பார்க்க வேண்டும். (தத்துவங்கள் போதுமா. இன்னும் கொஞ்சம் வேண்டுமா!?)

நற்பணிகள்:

பெரும்பாலான ரசிகர் மன்றங்கள் தங்கள் அபிமான, நடிக, நடிகையரின் புகழ் பரப்புவதோடு பல சமூகப் பணிகளும் செய்து வருகின்றன. தண்ணீர்கஷ்டத்தில் போது தண்ணீர் சப்ளை, வெள்ளத்தின்போது உதவி, இரவுப் பாடசாலை, மருத்துவ உதவி, படம் ரிலீஸாகும் போது ஏழைகளுக்கு உணவு போன்ற செயல்களைச் செய்து வருகின்றன. கமலின் ராஜபார்வை படம் ரிலீஸான பிறகு, கமலின் ரசிகர்கள் பலர் தம் கண்களைத் தாம் இறந்த பின் பார்வையற்றவர்களுக்குஉபயோகப் படுத்திக்கொள்ளலாம் என்று எழுதி வைத்து விட்டனர். ரஜினி தம் வீட்டிலேயே நியாயவிலைக் கடை நடத்துகிறார். மதுரையில் உள்ள இவர் ரசிகர்கள் ஏழைப் பெண்களுக்குத் திருமணம்செய்து வைக்கிறார்கள். ஆனால் சாதாரண விஷயங்களைக் கூட 'தொண்டுகள்' என்ற பெயரில் பிட் நோட்டீஸ் அச்சடித்து வெளியிடுவது வேடிக்கையாக இருக்கிறது. மதுரை மாவட்ட சிவாஜி ரசிகர் மன்றத்தினர், ரசிகர் மன்றத்தின் செயற்குழு கூட்டத்தை நடத்தியதைக் கூடத் 'தொண்டு' என்கின்றனர்.!

புறம்போக்கு மன்றங்கள்:

ஒரு வட்டாரத்தில் அ.தி.மு.க. அல்லது இ. காங்கிரஸ் புள்ளி அல்லது பேட்டை 'தாதா' ஒருவர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன், புரட்சித் தலைவர் ரசிகர் மன்றம்' என்றோ அல்லது 'திரிசூலம் சிவாஜி நற்பணி மன்றம்' என்றோ போர்டை தொங்க விட்டு நாலைந்து கீற்றுக்களை வைத்து புறம்போக்கு நிலத்தில் குடிசை போட்டு விடுவார். நாளாவட்டத்தில் யாரும் கண்டு கொள்ளாவிட்டால் (அநேகமாக யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள்) அந்த இடத்திலேயே 'பக்கா'வாகக்கட்டிடம் எழுப்பிக் கொள்ளுவார். பிறகு போர்டுகள் பேருக்குத் தான் இருக்குமே தவிர அந்தப் புள்ளி தமது உபயோகத்துக்கு இடத்தைப் பயன்படுத்துவார் — உதாரணமாக சைக்கிள் கடை பெட்டிக்கடை போன்றவற்றை வைத்து விடுவார்.



பேசாத வார்த்தைக்கு நீ எஜமான். பேசிய வார்த்தை உனக்கு எஜமான்.

—ஆங்கிலப் பழமொழி.
எஸ். சசிகலா.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பணம் எங்கிருந்து வருகிறது?

சில நடிகர்கள் தம்படங்களின் முதல் காட்சியை ரசிகர் மன்றங்களின் நிதிக்கென்று விட்டுக்கொடுத்து விடுவார்கள். தியேட்டர் வாடகை மற்ற செலவுகள் போகக் கொஞ்சம் தேறும். சில ரசிகர் மன்றங்கள் படம் வெளியாகும் போது மலர் போடுவதுண்டு. இது தவிர மன்றத்தில் சந்தா வசூலிப்பதும் உண்டு. இந்தப பணத்துக்கெல்லாம் பெரும்பாலான ஊர்களில் எந்தக் கணக்கையும் இடையாது.

பணம் தருகிறார்களா?

நடிகர்கள் பணம் கொடுத்து மன்றங்களை வளர்க்கிறார்களா? ஒருதிரையுலக பிரமுகர் கூறுகிறார். ''சினிமா உலகம் ஒரு விளம்பர உலகம். புகழ், செல்வாக்கு இருக்கும் வரை தான் மார்க்கெட். அதை நிலைநிறுத்திக்கொள்ள அப்பாவி ரசிகர்களைப்பயன்படுத்திக் கொள்கிறார்கள். நடிகர்கள் தங்கள் வருமானத்தில் கணிசமான ஒரு பகுதியை இதற்கென்றே ஒதுக்குகிறார்கள். படம்ரிலீஸாகும் போது வாழைமரத் தோரணம், ''நட்சத்திர அலங்கார செட'' போன்றவற்றைக் கட்டிவிட்டுச், செலவுக் கணக்கை அதிகமாக நடிகர்களிடம்சொல்லி பணம் பெற்றுக் கொள்வதுண்டு. நடிகர்களின்கருப்புப் பணம் இப்படித்தான் உபயோகமாக (?) செலவு செய்யப்படுகிறது.

தியேட்டரில் செய்வது

தோரணம் கட்டுவது, வாழைமரம் கட்டுவது, நாதஸ்வரம் வைப்பது போன்றவை சாதாரணமாக ரசிகர் மன்றங்களால் செய்யப்படுபவை. சில சமயங்களில் நடிகரின் படங்களையும், திரையுலகில் அவரது சாதனைகளையும் அச்சிட்டு விநியோகிப்பார்கள். பெண்களைக் கவருகிற படமாக இருந்தால் 'குங்குமச் சிமிழ்.' போன்றவற்றைக் கொடுப்பது உண்டு. தங்கப் பதக்கம் ரிலீஸான போது போட்டி வைத்து தங்கப் பதக்கங்களைப் பரிசாகக் கொடுத்தார்கள். இதெல்லாம தியேட்டருக்கு வெளியே. உள்ளே என்ன செய்வார்கள்? உதயம் தியேட்டர்மானேஜர் சொல்கிறார், 'திரையில் பூக்களை எறிவார்கள், சில்லரைகளை வீசுவார்கள், கற்பூரம்கூடக் காட்டுவார்கள். ஆனால்

நாங்கள் கற்பூரம் காட்டுவதற்கு அனுமதிப்பதில்லை—தீ விபத்து ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதால்.''

எதிர்மறை வேலைகள்

பிடிக்காத, அல்லது எதிரியாகப் பாவிக்கின்ற நடிகர்களின் போஸ்டர்களில் சாணி அடிப்பது மட்டுமில்லாமல், தமக்கு பிடிக்காத அந்த நடிகரின் படத்தின் முதல் காட்சிக்கு 20,30 பேர்கள் செல்வார்கள். முதல் காட்சி முடிந்து வெளியே வரும் போது இரண்டாவது காட்சிக்குக் காத்திருக்கும் ரசிகர்களிடம் படம் மிகவும் மோசம் என்று பிரச்சாரம் செய்துவிட்டுப்போவார்கள்.

கள்ள மார்க்கெட்:

ரசிகர் மன்றங்களுக்கும் கள்ள மார்க்கெட் டிக்கெட்டுக்களுக்கும் மிகவும் சம்பந்தம் உண்டு. படம் ரிலீஸாவதற்கு முன்னர் லெட்டர் பேடில் டிக்கெட் கேட்டு தியேட்டருக்கு எழுதுகிறார்கள். 100 150 என்று டிக்கெட் கேட்பார்கள். ஆனால் தியேட்டர்காரர்கள் அவ்வளவு தர மாட்டார்கள். பாதிதான் தருவார்கள். ரசிகர் மன்றத்தினர் உறுப்பினர்களுக்கு என்று சொல்லி வாங்கினாலும், உண்மையில் நடப்பதென்ன? ப்ளாக்கில் விற்று விடுகிறார்கள். வரும்பணத்தை ரசிகர் மன்றச் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதுண்டு. சமயத்தில் சுருட்டிக் கொள்வதுமுண்டு.

செட் அப் மன்றங்கள்:

ரசிகர் மன்றங்கள் எந்த நடிகருக்கும் தானாகவே வளர வேண்டும். நடிகரோ அவருக்குவேண்டுமென்பவர்களோ முயற்சி செய்து வளர்க்கின்றனர். உருவாக்குவது என்பது நடக்காத காரியம். அப்படியே செய்தாலும் நிலைக்காது. இதற்கு உதாரணம்: மு. க. முத்து மன்றங்கள். கருணாநிதி எவ்வளவோ முயற்சி செய்தும் மு. க. முத்து மன்றங்கள் நிலைக்க முடியவில்லை.

ரகசிய அறிக்கை:

எம். ஜி. ஆர். தம் வாரிசாக பாக்யராஜை அறிவிக்கும் முன்பே தலைமையகத்திலிருந்து எம். ஜி. ஆர். மன்றங்களுக்கு பாக்யராஜை ஆதரிக்கும்படி ரகசிய சுற்றறிக்கை விடப்பட்டது. சிவாஜி இன்னும் திரையுலகில் இருந்தாலும், அவர் ரசிகர் மன்றங்கள் பிரபுவையும் சேர்த்துத் தான் ஆதரிக்கின்றன.

தன் பெயரில் ரசிகர் மன்றங்கள் வைப்பதை விரும்பாதவர் சிவகுமார். நெடுநாட்கள் வரை கமலஹாசன் கூட தனது ரசிகர்களுக்கு மன்றங்கள் வைக்க அனுமதி கொடுக்கவில்லை.

கலாட்டா - கல்வீச்சுக்கள்

ரசிகர் மன்றங்கள் சில சமயம் ரகளைகளில் இறங்குவதும் உண்டு. தியேட்டர் மானேஜரை சுற்றி நின்று கொண்டு கூச்சல் போடுவது, தகராறு செய்வது, கண்ணாடிகளை உடைப்பது சீட்டுகளைக் கிழிப்பது போன்றவை அதிக டிக்கெட்டுகள் பெற ரசிகர்கள் பயன்படுத்தும் வழிகள். ஒருமுறை சிலுக்கின் நடனத்தைத் திரும்பக் காண்பிக்க வேண்டுமென்று ரசிகர்கள் ஒரு தியேட்டரில் கூச்சல் போடப் பெரிய ரகளையாகி விட்டது.

இன்னொரு வகையான ரகளை இரண்டு பிரபல நடிகர்கள் சேர்ந்து நடிக்கும் போது ஏற்படுவது. கூண்டுக்கிளி' படக்காட்சியின்போது சிவாஜி ரசிகர்களும் எம். ஜி. ஆர். ரசிகர்களும் மோதிக் கொண்டதுண்டு. ''நான்கு சுவர்கள்'' என்ற படத்தில் நடிக்கும் போது ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் இருவருமே பிரபலமாக இருந்தார்கள். படம் வெளியான போது தமிழகத்தின் பல தியேட்டர்களில் இந்த இருவரின் ரசிகர்கள் கூட்டத்துக்கும் இடையில் மோதல்கள் நடந்தன.

''நினைத்தாலே இனிக்கும்'' படத்தில் கமலும், ரஜினியும் நடித்தனர். ரசிகர்கள் வெறிக் கூச்சல்களைப் பரிமாறிக்கொண்டனர்.

ரசிகர்மன்றங்கள் ரகளைக் கும்பல்களாகவும் சிலசமயம் மாறுவதுண்டு என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு, சமீபத்தில் சிவாஜி சென்னையில் நடத்திய மாநாடு. ருத்ர தாண்டவம் ஆடிய ரசிகர்களை எழும்பூர் கடைக்காரர்கள் நீண்ட காலம் மறக்க மாட்டார்கள்.

இத்தனை ரசிகர் மன்றங்கள் இருக்கக் காரணம் நம் ஜனங்களிடையே உள்ள ''ஹீரோ ஒர்ஷிப்''. தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள். சுயநலக்காரர்களான நட்சத்திரங்கள் இந்த அப்பாவி ரசிகர்களின் மூட பக்தியை நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். என்று தான் நம் ரசிகர்கள் நடிப்பதை ரசிப்பது மட்டும் தான் தாம் செய்ய வேண்டிய காரியம் என்பதை உணரப் போகிறார்களோ?

படங்கள்: **ஜெய்மோகன்**

வெ. மனோ (மதுரை)

தகவல்கள் உதவி:

திசைமுத்து

தொகுப்புகட்டுரை வடிவம்: **சந்திரமௌலி, பிரியன்**

மேலட்டை

வண்ணப்படங்கள்: **போகா**

அவன்: பல மாதங்கள் கண்ணாடி முன் நின்று, என் அழகைப் பார்ப்பதிலேயே கழித்திருக்கேன்.. அதற்குப் பெயர் கர்வமா?


அவள்: இல்லை...... கற்பனை...!


—ராஜி ராதா.







கல்கி
விடுமுறை மலர்
1984


என் கண்ணுங்களா!..
ஸ்டூல் மேலே
ஏறி குந்துங்க!
பஞ்சாப் பிரச்சினை
சட்டம் ஒழுங்கு


எதுக்கு அவங்களை
இறக்கணும்? ஒரு
மாதிரியா சமாளிச்சுக்
கிட்டுப் போயிடுங்க!


இடைத் தேர்தல்
அவரை
நம்பாதே!
அவரை
நம்பவே
நம்பாதே!



கல்கி
1984 ஏப்ரல் 29
மலர் : 42 இதழ் : 39
ரக்தாக்ஷி சித்திரை 17



அதிகம் குடிக்காத அதிக்!

ஐயோ பாவம், அதிக்! அநியாயமாக அவர் மீது பழி சுமத்துகிறார்கள். எல்லாம் எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சி. அவர்தான் நீரிழிவு நோயால் அவதிப்படுகிறவராயிற்றே. குடிப்பாரா? ஒருநாளும் மாட்டார். அவ்வாறிருக்க விமான உபசரணைப் பெண்தான் அவரை விஸ்கியில் குளிப்பாட்டியிருக்க வேண்டுமே தவிர அவராக டிரிங்க் கேட்டிருக்கவே மாட்டார். அப்படியே கேட்டு வாங்கி அருந்தியிருந்தாலும் ஏதோ ரெண்டு மூணு டபிள்பெக் விஸ்கி, நாலு விரற்கிடை உயரத்துக்கு ரெண்டு தடவை ஜின், கொஞ்சம் ரெட் ஒயின், லேசாக ஷாம்பெய்ன் என்று அளவாகத்தான் சாப்பிட்டிருப்பாரே தவிர அதற்கு மேல் அருந்தியதாகக் கூறுவது அப்பட்டமான பொய். உண்மை இப்படி இருக்க அவருக்கு வயிற்றுக் குமட்டல் ஏன் ஏற்பட்டது? அவரென்ன மது அருந்திப் பழக்கப்படாதவரா? சமீபத்தில்தான் அருந்தவில்லையே தவிர முன்பெல்லாம் குடித்துப் பழக்கம்தான். எனவே ஏர் இந்தியா வழங்கிய அந்த டிரிங்கிலேதான் ஏதோ கோளாறு இருந்திருக்க வேண்டும். வேண்டுமென்றே எதை எதையோ கலந்து ... ஒருவேளை ஏர் இந்தியாவே எதிர்க்கட்சிகளுக்காகத்தான் பாடுபடுகிறதோ என்னவோ? விசாரணை தேவை!

விமான உபசரணைப் பெண்ணிடமும் பக்கத்தில் அமர்ந்திருந்த பெண்மணியிடமும் தரக் குறைவாக அதிக் நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டப் பட்டிருப்பது அபாண்டம்! இவர் மன்மத ரூபராய் இருக்கிறாரா? வாக்குச் சாதுர்யமாய்ப் பேசுகிறாரா? அந்தத் தோற்றத்திலும் பேச்சிலும் அப்பெண்கள் அப்படியே மோகித்து இவர் மடியில் வந்து அமர்ந்து கழுத்தைக் கட்டிக் கொண்டால், அதற்கு அதிக் என்ன செய்வார்? இவராவது பெண்களிடம் தாறுமாறாக நடந்து கொள்வதாவது? சேச்சே! இவர் பதவி என்ன, தகுதி என்ன, சார்ந்திருக்கும் கட்சி என்ன....!

ஜெர்மனியில் இவர் இறங்கிய போது இவர் தலை சுற்றவேயில்லை. டாக்ஸிதான் இவரைச் சுற்றியது. போலீஸ் ஸ்டேஷனில் ஒருநாள் இவர் தங்க நேர்ந்தால் என்ன? தூதரகத்தின் விலாசம் விசாரிக்க குறைந்தபட்சம் அத்தனை நேரமாவது ஆகாதா? ஒருவேளை அந்தப் போலீஸ்ஸ்டேஷன் அதிகாரியும் டாக்ஸி டிரைவரும் குடித்து விட்டுப் பத்திரிகையாளரிடம் ஏதாவது உளறி இருக்கலாம். அது பெரிய விஷயமாகி விட்டது. ஜெர்மானியப் பெண் ஒருத்தி முன்பின் தெரியாத இவரை வேண்டுமென்றே வம்புக்கிழுத்துச் சண்டைப் போட்டதிலிருந்து ஜெர்மனியிலும் இந்திராகாந்திக்கும் அவர் கட்சிக்கும் எதிராகச் சதி செய்யும் பி. ஜே. பி. ஆட்கள் இருப்பது நிரூபணமாகிறது. இவர் அவளை நெருங்கவேயில்லை; தாயாராகப் பாவித்துக் கரம் குவித்ததோடு சரி.

எதிர்க்கட்சிகளின் இந்தக் கூட்டணி மோசடியை அம்பலப்படுத்தவே இ. காங்கிரஸ், அதிக் பம்பாய் திரும்பியதும் விமானநிலையத்தில் மகத்தான வரவேற்பு அளித்தது. இப்படிப்பட்ட உத்தமனின் சேவையை மகாராஷ்டிரம் இழக்கக் கூடாது என்பதற்காகத்தான் மாநிலத்தின் மேலவைத் தேர்தலில் இ. காங்கிரஸ் வேட்பாளராக இவர் நிறுத்தப்பட்டு தேர்ந்தெடுக்கவும் பட்டார். இவரைப் பிரதமரும் ராஜீவும் சந்திக்க விரும்பாமல் திருப்பி அனுப்பி விட்டார்களே என்று சிலர் வீண் சந்தேகத்தைக் கிளப்பலாம். இவரிடம் பூரண நம்பிக்கை அவர்களுக்கு இருந்ததால் இவரிடம் விளக்கம் கேட்க அவசியமில்லை என்று அவர்கள் கருதியதுதான் காரணம்; வேறொன்றுமில்லை!

என்ன? என்ன? அதிக் துணை முதல்வர் பதவியை ராஜினாமா செய்து விட்டாரே என்கிறீர்களா? ஓ அதனால் என்ன? இந்திராகாந்திக்கு எந்தவிதமான தர்ம சங்கடத்தையும் அளிக்கக் கூடாது என்ற பெருந்தன்மையுடன் அதிக் நடந்து கொண்டதைப் பாராட்டவல்லவா வேண்டும்! இவரை விடச் சிறந்த கட்சி விசுவாசி, தலைவரை ஆராதிப்பவர் வேறு யார்?

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

அன்பார்ந்த நேயர்களுக்கு...

அண்மைக் காலமாக கல்கி ஒரு வித்தியாச வடிவமெடுத்திருக்கிறதென்றும், புது மெருகு பெற்றுள்ளது என்றும் வாசகர்கள் மகிழ்ந்து எழுதுகிறார்கள். புதுமையான அம்சங்கள் இடம் பெறுவதை வாழ்த்தி வரவேற்கிறார்கள். வழக்கமான கதைகள், தொடர்கதைகள், கட்டுரைகள் தவிர வாசகருக்கு உபயோகமானதும், அவர்கள் அறிவை விசாலப்படுத்துவதும், பொது அறிவை வளர்ப்பதுமான சிறப்பிதழ்கள், நாட்டு நலனில் அக்கறை கொண்ட ஆய்வுக் கட்டுரைகள் ஆகியன நல்ல வரவேற்பைப் பெறுவதைக் கடிதங்கள் மட்டுமின்றி, அதிகரித்து வரும் விற்பனை எண்ணிக்கையும் வலியுறுத்துகின்றன. வாசகர்கள் அளித்து வரும் ஊக்கத்துக்கு எமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளும்போதே இதுவரை செய்தது போதாது இன்னும் நிறையச் செய்யவேண்டும் என்பதையும் நினைவூட்டிக் கொள்கிறோம். அப்படி யோசித்த போது இன்று நாட்டைச் சூழ்ந்துள்ள மிகப் பெரிய பிரச்சினையான ஒருமைப்பாடு குறித்து ஆக்கபூர்வமாக ஏதும் செய்தால் என்ன என்ற எண்ணம் பிறந்தது. அதன் விளைவு: மாநிலச் சிறப்பிதழ்கள். இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களைப் பற்றி, இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் நன்கு தெரிந்து கொள்ள உதவுவதை விடச் சிறந்த தொண்டு வேறென்ன இருக்க முடியும்?

முதன் முதலாக மே 13, 20, 27, இதழ்கள் குஜராத் மாநிலச் சிறப்பிதழ்களாக மலர்கின்றன. முதல் இதழில் குஜராத்தின் பல்வேறு கலைகள், பண்பாடு, நகைச்சுவை உணர்வு இலக்கியம், சரித்திரம், பழக்கவழக்கங்கள், பண்டிகைகள், பல்வேறு மக்கட் பிரிவினர், அவர்களுடைய மனப்பான்மை, சமீபகால அரசியல் போக்குகள் முதலிய பல விஷயங்கள் மிக ரசமான அனுபவக் கட்டுரைகள் வடிவில் இடம் பெறும். குஜராத்திய சிறுகதைகளும் உண்டு. குஜராத்தில் வாழும் தமிழர், தமிழகத்தில் வசிக்கும் குஜராத்தியர் பற்றியும் பேசப்படும்.

குஜராத் மாநிலம் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் கண்டு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. இந்த மகத்தான சாதனையை எப்படி நிகழ்த்தினார்கள்? என்ன காரணங்கள்? என்னென்ன தொழில்கள் வளர்ந்துள்ளன? பொருளாதார முன்னேற்றம் எந்த அளவில்? போன்ற அம்

கல்கி

மே 13,20,27

குஜராத் சிறப்பிதழ்கள்





குஜராத் மாநிலத்தைப் பற்றிய சகல விவரங்களையும் அறிந்துகொள்ள உதவி, ஓர் அகராதி போல் நிரந்தரப் பயன் அளிக்கும் பொக்கிஷங்கள்.

உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவுசெய்து கொள்ளுங்கள்.


பல்வேறு பட்டுப்புடவைத் தயாரிப்பாளர்களின்

ஒத்துழைப்புடன்

கல்கி

வழங்கும் பரிசுகள்

வாரம் ஒரு பட்டுப் புடவை



எளிய இனிய போட்டிகளின் விவரங்கள்:

அடுத்த வாரம்

52 பட்டுப்புடவைப் பரிசுகள்

உங்களுக்காகக் காத்திருக்கின்றன!

சங்களை இரண்டாவது இதழ் விரிவாக விளக்கப் போகிறது. மூன்றாவது இதழில் அம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகள் பார்த்து ரசிக்கக் கூடிய இடங்கள், புண்ணியத் திருத்தலங்கள், குஜராத் பிரமுகர்கள் பலரது பேட்டிகள் ஆகியன இடம் பெறும்.

நமது நிருபர்கள் ஆமதாபாத்தில் இறங்கியதுமே அவர்களுக்கு அங்கு வாழ்கின்ற தமிழரும் குஜராத்தியரும் சிறப்பான வரவேற்பு அளித்தனர். குஜராத் முதல்வர் திரு. ஸோலன்கி நமது திட்டத்தை அறிந்து அகமகிழ்ந்து வாழ்த்துரையும் வழங்கியுள்ளார். இந்தப் பெருமையெல்லாம் கல்கி நேயர்களையே சாரும் என்பதால் இங்கு தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

இதேபோன்ற சிறப்பான வரவேற்பு கேரள, கர்நாடக மாநிலங்களிலிருந்தும் கிட்டியுள்ளன. கர்நாடக முதல்வர் திரு. ஹெக்டே தேசிய ஒருமைப்பாட்டுக்கான கல்கியின் இந்தச் சிறப்புப்பணியை மனமார வரவேற்றுள்ளார். எனவே அடுத்தபடியாக கர்நாடக, கேரள சிறப்பிதழ்களையும் தனித்தனியே நேயர்கள் ஆர்வமுடன் எதிர்பார்க்கலாம்.

இவ்வளவு தூரம் சொல்லி உங்கள் முகம் மலரச் செய்த பிறகு கொஞ்சம் முகம் சுளிக்கக் கூடிய விஷயத்தையும் கூற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் நாளிதழ்களில் வெளியான IENS (இந்திய, கிழக்கத்திய நாளிதழ் சங்கம்) விளம்பரங்களை நேயர்கள் பார்த்திருக்கலாம். அதில் பத்திரிகைக் காகிதத்துக்கான இறக்குமதி வரியும், கம்பெனிகள் செய்கின்ற விளம்பரச் செலவில் ஒரு பகுதிக்கு வருமான வரி வசூலிக்கின்ற கொடுமையும் பத்திரிகைத் துறையை எந்த அளவுக்குப் பாதித்துள்ளது என்பது விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இத்தகைய போக்குகளால் பத்திரிகைகளின் விலை ஏற்றம் தவிர்க்க முடியாததாகி வருகிறதென்பதை அந்த விளம்பரம் விளக்குகிறது. அது கூறாமல் விட்ட இன்னொரு விஷயமும் உண்டு. அரசாங்கம் பத்திரிகைக் காகிதத்தின் இறக்குமதியை அண்மைக்காலத்தில் வெகுவாகக் குறைத்து உள்நாட்டுச் சரக்கை ஏற்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குப் பத்திரிகைகளைத் தள்ளியுள்ளது. உள்நாட்டுக் காகிதத்தின் விலை இறக்குமதியாகும் காகிதத்தின் விலையை விட மிகவும் அதிகம். இத்தகைய சூழ்நிலையில், நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக மட்டுமே கல்கியின் விலையை அடுத்த மே 6 இதழிலிருந்து ரூ. 1·50 ஆக நிர்ணயிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளோம்.

நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நாலு தலைமுறைகளாகக் கல்கியை ஆதரித்து வரும் நேயர்கள் தொடர்ந்து இப்பத்திரிகைக்குப் பேராதரவு அளித்து வர வேண்டும் என்று கரம் கூப்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

வணக்கம்.

ஆசிரியர், கல்கி

நடுக்கம் நீக்கிய நம்பிரான்

ஆனந்தி



✕ சரபர் சன்னிதி முக மண்டபத்தில் கொடி நாச்சியார்

திருமடாதீனத்தின் பராமரிப்பிலுள்ள கோவில்களுக்குச் செல்வதே ஒரு தனி சந்தோஷம். கோவில் துப்புரவாக இருப்பதோடு நித்திய பூஜைகள் குறைவில்லாமல் காலா காலத்தில் நடப்பதும் ஒரு இனிய சூழ்நிலையை உருவாக்குகிறது. ஈசனுக்குப் பணி செய்வோரின் சிரத்தையும் தல புராணம் கேட்ட உடனே கிடைப்பதும் திருப்தி அளிக்கிறது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கோவில்களை வருங்கால சந்ததியினருக்காகப் பராமரிப்பது ஒரு பெரிய பொறுப்பு. புல் மண்டியும், புதர்கள் வளர்ந்தும் பரிதாபமாகக் காட்சி தரும் கோவில்களைப் பார்க்கும் போது ''அப்பர் சுவாமிகள் மறுபடியும் பிறந்து நமது உழவாரப் படையுடன்வரக்கூடாதா?'' என்ற ஏக்கம் உண்டாகும். ஆனால் திரிபுவனம் கோவிலைப் பார்க்கும் போதோ உற்சாகம் உண்டாகி விடுகிறது.

திரிபுவன வீரபுரம்என்று மூன்றும் குலோத்துங்கச் சோழனுடைய பட்டப் பெயரைத் தாங்கிய இந்தத் திரிபுவனம் தஞ்சை மாவட்டத்தில் திருவிடை மருதூருக்கு அருகாமையில் இருக்கிறது. இந்தக்கோவிலுக்குப் பல சிறப்புக்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எழு கல்வெட்டுக்கள் இருப்பதோடுதோற்றத்திலும், சிற்பக் கலைச் சிறப்பிலும், மூர்த்தியின் சிறப்பிலும் பல புதுமைகளைக் கொண்டிருக்கிறது.

முதலில் புராணக் கதையைப் பார்ப்போம்.

வரகுண பாண்டியன் தான் அறியாமல் செய்த பிரும்மஹத்தி தோஷத்தினால் பல துன்பங்களை அடைந்தான். திருவிடை மருதூருக்கு வந்து மஹாலிங்கரை வழி பட்டதும் பிரும்மஹத்தி தோஷம் விலகியது. ஆனாலும் அவனுடைய நடுக்கம் தீரவில்லை. திரிபுவனம் சென்று கம்பஹரேச்வரப் பெருமானை வழிபட்டதும் நடுக்கம் நீங்கிப் புத்துணர்வு பெற்றான்.

அசுவக்ரீவன், விருஷபக்ரீவன், வியாளக்ரீவன்என்ற மூன்று அசுரர்கள் தேவரோடு போரிட்டுத்தோல்வியடைந்தார்கள். பூவுலகுக்குத் தப்பியோடி வந்து சேர்ந்தார்கள். வில்வவனம் என்ற இடத்தில் ஒருசிவலிங்கத்தைக் கண்டார்கள். மூவரும் சிவபெருமானைக் குறித்துக் கடுமையானதவம் செய்து அழிக்க முடியாத முப்புரங்களைப் பெற்று அட்டகாசமாக இருந்து வந்தார்கள்.இவர்கள்செய்த கொடுமையால் தேவலோகமே நடுங்கிற்று.

இந்திரன் உள்ளிட்ட எல்லாத் தேவர்களும் அங்கே வில்வவனத்தில் வீற்றிருக்கும்பெருமானிடத்தில்சரண் புகுந்தார்கள். தேவர்களின் நடுக்கத்தைத் தீர்க்கத் திருவுளம் கொண்ட சிவபெருமான் திரிபுரர்களுடன் போருக்குக் கிளம்பினார். உதவி புரிய வந்ததேவர்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய உதவியில்லாமல் சிவபெருமானால் திரிபுரர்களை ஜெயிக்க முடியாது என்று மனத்துக்குள் நினைத்தார்கள். ஈசன் இதை அறிய மாட்டாரா? தேவர்களின் செருக்கை எண்ணிச் சிரித்தார். அந்தச் சிரிப்பிலிருந்து எழும்பிய கனல் திரிபுரங்களைச் சாம்பலாக்கியது.

பயத்தினால் ஏற்படும் நடுக்கத்தையும், கர்வத்தால் உண்டாகும் கம்பத்தையும் அறவே ஒழிப்பவர் கம்பஹரேச்வரர். கம்பம் என்றால் அசைவு, நடுக்கம் என்றுபொருள்படும்நடுக்கம் தீர்த்த பெருமான் என்பது தமிழ்ப் பெயர்.

இந்தத் தலத்தில் ரொம்ப விசேஷம் என்னவென்றால் நடுக்கத்தைத் தீர்க்கும்பெருமானாகிய இவரே அச்சந்தரும் சரப வடிவமாகவும் எழுந்தருளி இருப்பதுதான்.

வைகுண்ட பதியானவர் ஹிரண்யனை ஸம்ஹாரம் செய்வதற்காக நரசிம்ம ரூபத்துடன் தூணிலிருந்து தோன்றினார். ஹிரண்யனை வதம் செய்த பிறகும் அவருடைய சினம் தணியவில்லை. அவருடைய ஆங்

✕ உற்சவர்



காரமும் ஹுங்கும் காரமும் மூன்று உலகங்களையும் அழித்து விடுமென்று அஞ்சி தேவர்கள் நடுநடுங்கினார்கள் பெருமானிடம் சரணடைந்தார்கள்.

தேவர்களுக்கு இரங்கிய தயாபரன் ''சரபம்'' என்ற பயங்கரமான அதிசயமான வடிவத்தில் தோன்றினார். பதினெட்டு நாட்கள் போரிட்டு நரசிம்ம மூர்த்தியின் கோபத்தை அடக்கி உள்ளம் தெளியச் செய்தார் என்கிறது புராணம். ஆக கோபத்தினால் உண்டான கம்பத்தையும் அடக்குபவர் இறைவனே. சரப மூர்த்தியைப் பற்றிய வருணனைகள் ரிக் வேதத்திலும் யஜுர் வேதத்திலும் வருவதாகக் கூறுகிறார்கள். சரப காயத்ரீ என்ற மகாமந்திரம் எல்லா உபாதைகளையும் போக்கவல்லது என்றும் ''திரிபுவன வரலாறு'' நூலில் காண்கிறோம்.

மாலைவேளை. திரிபுவனத்தை நெருங்கும் போதே கோபுரத்தின் அகன்றவடிவம்பதினொரு கலசங்களுடன் தனித் தன்மை பெற்று துவாரபாலகர்களைப் போலஇரண்டுஓங்கிவளர்ந்த பசுமையான இலவமரங்களுடன் புலனாகிறது.


இந்தக் கோவிலில் ஏழு முக்கியமான கல் வெட்டுக்கள் இருக்கின்றன. கல்வெட்டுத் துறையினர்படி எடுத்திருக்கிறார்கள். கோவில் கல்வெட்டுக்களின் மீது சுண்ணாம்படிப்பதும், கிறுக்குவதும், நமது பெயரைப் பொறித்து வைப்பதும் இன்றைக்கும் கூட நடந்து வருவதைப் பார்க்கும் போது திரிபுவன வீரபுரத்துக் கோவில்இதற்கு விதிவிலக்காக இருப்பது பெருமையாக இருக்கிறது.


பள்ளிக் கூடங்களில் ஐந்தாவது வகுப்பிலிருந்தே கல் வெட்டுக்களையும் வரலாற்றுச் சின்னங்களையும் பொறுப்போடு பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லி வருங்கால மக்களுக்காவது அக்கறை ஏற்படச் செய்வது கல்வியாளரின் முக்கியமான பணி.

மணிகளின் நாதம் அழைக்கிறது. அந்திக்காலப் பூஜை நடக்கிறதோ? விரைந்து படிகளில் ஏறிச் செல்கிறோம். கம்பஹரேச்வரர் சந்நிதியை அடையும் போது அந்தி வழிபாடு முடியும் தருணம். கற்பூர தீபாராதனை காட்டி உபசாரங்கள் நடக்கிறது. ஓடிவந்ததால் உண்டான கம்பங்கள் அடங்கி அமைதியாகத் தரிசனம் செய்கிறோம்.

வலம் வரும் போது திருவுண்ணாழியின் கோபுரத்தை அண்ணாந்து பார்க்கிறோம். தஞ்சைக் கோபுரப் பாணியில் கட்டப்பட்டிருக்கிறது.

✖ ராஜகோபுரம்





✖ கோவில் விமானம்

''மாறுமல் இரு நிலத்தில்
அறம் வளர்க்கும்
கையே.''

என்று அன்னையின் அபய வரத ஹஸ்தங்களைப் பார்க்கும் போது மனம் பாடுகிறது. அறம் வளர்த்த நாயகியார் என்ற அழகிய திரு நாமமுடையவர். இருவையாற்றிலும் அன்னைக்கு தர்ம ஸம்வர்த்தினி என்பது திருநாமம் என்று நினைவுக்கு வருகிறது.

வஸந்த மண்டபத்தை அடைகிறோம். சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் மண்டபம். நின்று நிதானித்துப் பார்க்க நேரமில்லையே என்ற ஆதங்கத்துடன் சரபமூர்த்தி குடிகொண்டுள்ள கோவிலை அடைகிறோம். புதியதோர் வடிவத்தில் இறைவனைத் தரிசிக்கப் போகிறோம் என்று உள்ளத்தில் ஒரு பரபரப்பு.

''யாருக்கு அர்ச்சனை?'' என்று கேட்டுக் கொண்டு வரும் குருக்களிடம் தட்டைக்கொடுத்து விட்டு ஆவலுடன் சரப மூர்த்தியைத் தரிசிக்கிறோம். ஒரு சுவாரஸ்யமான கதை ஞாபகம் வருகிறது.

பங்காரு காமாட்சியின் அருளை முழுவதும் பெற்றவரான சியாமா சாஸ்திரிகள் காலம்.

பூலோக சாபகட்டி பொப்பிலி கேசவையா என்னும் ஸங்கீத வித்வான் தஞ்சை மாநகருக்கு வந்தார். தஞ்சை சமஸ்தானத்து வித்வான்களை யெல்லாம் போட்டிக்கு அழைத்து கடினமான தாளங்களில் பல்லவிகளைப் பாடித் தோற்கடித்தார்.

சியாமா சாஸ்திரிகளிடம் அனைவரும் சென்று சங்கீத வித்வான் களின்மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சபைக்குச் செல்வதற்கு முன்னால் சியாமா சாஸ்திரிகள் தாம் அல்லும் பகலும் வழிபட்டு வரும் காமாக்ஷி அம்மனைத் தியானம் செய்து கொண்டு

''தேவி ப்ரோவ
ஸமயமிதே
அதி வேகமே வச்சி''

என்று தொடங்குகிற சிந்தாமணி ராக கீர்த்தனையைப் பாடினார். (தேவி! காப்பாற்ற இதுவே தருணம். வெகு வேகமாய் வந்து.)

பாடிய தெம்புடன்இசை மண்டபத்தை அடைந்தார். பொப்பிலி கேசவையா தடபுடலாக ஸிம்ஹ நந்தன தாளத்தில் ஒரு பல்லவியைப் பாடினார். (டைம்பாலமாக இது நான் டறக்கிறது.) சாஸ்திரிகள் அதே பல்லவியை அனுயாஸமாகப் பாடிவிட்டுத் தாமும் ஒரு பல்லவியை எடுத்தார். 108 தாள வகைகளில் சரபநந்தன தாளம் என்பது 79 அக்ஷர காலங்களைக் கொண்ட நெருடலான தாளமாம். இது சியாமா சாஸ்திரிகள் மூலமாகத் தான் தெரிய வருகிறது' என்று பேராசிரியர் சாம்பமூர்த்தி எழுதியிருக்கிறார்.

ஸிம்ஹத்தைச் சரபம் வென்று விட்டது என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா!

இந்தக் கதையைக் கேட்ட நாளில் புரியாத விஷயம் இங்கே சரபமூர்த்தியின்திருவுருவத்தைக் கண்டதும் விளங்கியது. கதைதான் புரிகிறதேதவிர தாளங்கள் புரியவில்லை!

சரபமூர்த்தியின் வழிபாடு தென்னகத்தில் பிற்காலச் சோழர்கள் காலத்தில் தான் தோன்றியது என்பது வரலாறு. மூன்றும் குலோத்துங்கன் 1210-ஆம் ஆண்டில் தன் ஆட்சியின் சிகரத்தில் இதைக் கட்டினான். இந்த மன்னனுக்கு வடநாட்டில் பெரும் வெற்றி கிடைத்தது. சரபமூர்த்தி கீழைச் சாளுக்கிய நாட்டுப் போர்க்கடவுள். வடதிசை வெற்றியால் மகிழ்ந்து இந்தப் போர்க் கடவுளுக்குச் சோழ மண்டலத்தில் ஆலயம் எழுப்பி வழிபாடுகள் செய்வித்தான். கீழைச் சாளுக்கிய பாணி இந்த ஆலயத்தில் காணப்படுவதாகச் சிற்பக் கலை வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

தேவார காலத்துக்குப் பின்னால் எழுப்பப்பட்ட கோவில். தேவாரத் திருமுறைகளைத் தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பி சரப மூர்த்தியைப் பற்றி வருணித்திருக்கிறார். அதில் ''வேகந் தரும் சிம்புள்'' என்பதாகக் கூறுகிறார். ஆகவே 'சிம்புள்' என்பது சரபமூர்த்தியின் தமிழ்ப் பெயர் எனலாம்.

சரபமூர்த்தியின் உற்சவ விக்ரஹம் பக்கத்திலேயே இருக்கிறது. அவரையும் தொழுது வணங்குகிறோம். தலையில் கிரீடமும் கங்கையும் பிறையும் அணிந்தவர். இடி போன்ற கர்ச்சனையும் கரங்களில் ஏந்திய மானும் மழுவுமாகக்காட்சி தருபவர். பக்ஷியைப் போன்ற அலகும் துர்க்கையையும் காளியையும்சிறகுகளாகவும் உடையவர் விலங்கைப் போல வாலும் கால்களும் உடையவர். கூர்மையான நகங்களும் கோரைப் பற்களும் சந்திரன் சூரியன் அக்னி என்ற மூக் கண்களும் அப்பப்பா! போர்க் கடவுள் என்பது சரியாகத்தான் இருக்கிறது.

ஆகம் கனகனைக் கீறிய
கோளரிக் கஞ்சிவென்றோர்
பாகம் கனங்குழை யாய்அரு
ளாயெனத் தில்லைப்பிரான்
வேகந் தரும்சிம்புள் விட்டரி
வெங்கதம் செற்றிலனேல்
மோகங்கலந்தன் றுலந்ததன்
றேயிந்த மூவுலகே.

(கனகன் — ஹிரண்யன்;
கோளரி — நரசிம்மமூர்த்தி (ஆண் சிங்கம்);
வெங்கதம் — கடுங்கோபம்;
செற்றிலனேல் — அடக்கியிரா விட்டால்;
உலந்தது அன்றே —அழிந்திருக்குமல்லவா!)

புகைப்படங்கள்:
என். ராமகிருஷ்ணு,
வி. நாகராஜன்

பிரியமானவனே...!

பிரியமானவனே!
உனக்குத் தெரியுமா?
இமைக்க தவுகளை
இழுத்துச் சார்த்தும்
இரவு நேரங்களில்
என் மனப்பறவை
சிறகடிப்பது
உன் நினைவு தேசத்தை
நோக்கித்தான்.

—பொன். சந்தானகிருஷ்ணன்.





வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்...
பற்சிதைவை எதிர்த்திடுவீர்
Colgate
DENTAL CREAM
Colgate
STOPS B
எப்படி என்றால்...
உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர் நாற்றத்தையும் பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.
கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச்சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.
பயன்: தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கு எதிரான பாதுகாப்பு, உறுதிமிக்க ஆரோக்கியமான பற்கள்.
கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா, சிறப்புடன் செயல்பட்டு நீங்கள் பல்துலக்கும் ஒவ்வொரு முறையும் உங்களுக்கு புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம் அளிக்கின்றது. பற்களுக்கு ஆரோக்கியமும் உறுதியும் தருகிறது.
ஆகவே, சாப்பிட்டு முடிந்தவுடனேயே மறக்காமல் கோல்கேட் டெண்டல் க்ரீம் உபயோகித்து பிரஷ் செய்யுங்கள்.
கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது!

வேங்கை வனம்

கோவி. மணிசேகரன்

அத்தியாயம் 1

ராஜபுலிகள்

திசைகளின் உதயவாசல் பிரகாசமாய் இராக்கதவங்களைத் திறக்கிறது.

நட்சத்திரங்கள் மின்னென்று ஒளிநகை புரிந்து ஆர்ப்பரிக்கின்றன...

தென்றல் சுருதிகூட்ட...

தேன்மலர்கள் இசைபாட....

என்றுமே இரவென்றால் இன்பமென்று இராப்பறவை முழவு கொட்ட...

பொங்கி வரும் பெருநிலவாய் முழுமதிப் பேரழகி, மன்மதத் தாண்டவம் புரிய வருகை தருகிறாள்.

கானப்பேர் குறுநிலமாம் சிறு நகரம் களிப் பெய்தி, பின்னர் இளமைக்கு கவிதை எழுதத் தொடங்குகிறது.

பெருமதில்களையுடைய கோட்டைக்குள்... வேங்கை வனத்துப் பளிங்கு மாளிகையின் வாசற்படிக்கட்டுகளில் எளிமையாய் அமர்ந்து, திருமேனி எனும் தித்திக்கும் காப்பியத்தைத் தனது வாசனை நெஞ்சில் வாசித்துக் கொண்டிருக்கிறான், கானப்பேர் குறுநிலத்தை ஆண்டு வரும் கோமகன் வேங்கை மார்பன்.

எந்நேரமும் அவளது நினைவுகள்தாமா?

நீடுதவமிருந்து பாடிவந்த பெருங்காப்பியமாயிற்றே. மதுரை இளவரசி திருமேனி!

அந்தச் சொர்க்க தேவதை...

இயல்பான எழுத்துக்களுக்கோ இலக்கண நெறிகளுக்கோ மேம்பட்ட சுந்தர சிருஷ்டியாயிற்றே!

அவளைப்பற்றி—

ஏராளமானவர்கள் எடுத்துச் சொன்ன வண்ண வருணனைகள் அவன் கண்முன்னே வரிசைகட்டிக் காட்சி தருகின்றன.

'ஓ... திருமேனி!' — நெட்ட நெடிய பெருமூச்சு; அதிலே விரகதாப அனல் தெறிக்கிறது.

நேற்றைய மந்திராலோசனையில் மதுரை இளவரசி திருமேனியைப் பெண் கேட்டுத் தூது அனுப்புவதாக முடிவு செய்து, பிறகு, அவளை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற வேண்டும் என்று வேங்கைமார்பன் கருதியதால் அந்த முடிவு மாற்றம் செய்யப்பட்டது.

நிமித்திகர்கள் ஆலோசனைப்படி, இன்று பௌர்ணமி உதயம் கண்டு பத்து நாழிகை கழித்துப் பயணமாக வேண்டும்.

அன்று வெள்ளிக்கிழமை; அந்த நேரத்தில் சந்திர ஓரையாம்.

அடைந்தால் திருமேனி; இல்லையேல் தனது மேனி, வெறுமேனி...





மூர்க்கமான முடிவு: ஆனாலும் அது அவனைப் பொறுத்தமட்டில் தீர்க்கமான முடிவு.

ஆங்காங்கே தீப்பந்தங்கள் நெருப்பு மொழி பேசிக் கொண்டிருக்கின்றன.

தொலைவில், இரும்புக் கம்பிகளால் வேலி யிடப்பட்ட வேங்கைவனத்து வாசலில் நின்றிருந்த வீரர்களைக் கைதட்டி அழைத்து ஏதோ சமிக்ஞை செய்கிறான் வேங்கை மார்பன்.

அது அவர்களுக்கும் புரிகிறது...

சற்றைக்கெல்லாம்...

கொழுத்து நீண்டு வளர்ந்த இரு வேங்கைகள், நிமிரிக் கொண்டு சீறிப்பாய்ந்து உறுமியவாறு வெளிப்பட்டன. அவை வேங்கை மார்பனை நோக்கி ஓடிவந்து, முகர்ந்து, முகர்ந்து அதனதன் பாஷையில் கீச்சிட்ட குரலிலும் உறுமிய குரலிலும் ஏதேதோ பேசி வளைய வருகின்றன.

அந்த இரவின் அமைதியே அஞ்சுகிற மாதிரி சத்தமிடுகின்றன.

வேங்கைமார்பன் தனது பாசத்துக்குரிய வேங்கைகளைத் தடவிக் கொடுத்துப் பின்னர் தட்டித் தட்டிப் பாதங்களில் அமரும்படி பணிக்கிறான்.

தங்கள் தலைவன், மதுரை சென்று திரும்ப எத்தனை நாட்களாகுமோ என்கிற கவலை முற்றுகையிட்டது போன்று அந்த வேங்கைகள் முகர்ந்தும் முகத்தைத் தேய்த்தும் அன்பைத் தெரிவிக்கின்றன.

அப்போது எங்கிருந்தோ காற்சதங்கை யோசை...

வேங்கைகள் சிலிர்த்து நிமிர்ந்து வாலைக் கம்பீரமாகப் பிளந்து உறுமிக் கவனிக் கின்றன. நாகங்களில் எப்படி ராஜ நாகமோ அப்படிப் புலிகளில் ராஜ புலி யாயிற்றே வேங்கை!

யாரு இந்த ஆறு?

இவரை அடையாளம் தெரிகிறதா? தெரியாதவர்களுக்கு ஒரு சின்னக் குறிப்பு. திருச்சிக்காரர் இவர். அரசியல் செல்வாக்குப் பெற்றவர். இன்னமும் தெரியவில்லையென்றால் புரட்டுங்கள் அடுத்த பக்கத்தை.

—இளைஞானி.



அந்த ராஜபுலிகளைத் தடவி அமைதி கொள்ளச் செய்கிறான் வேங்கைமார்பன்.

வருகிறவள் இயாகவல்லி.

அவள் ஒருத்தி மட்டுமே அந்த வேங்கை வனத்தில் தைரியமாக நுழை பவள்: நுழைந்து பழக்கப்படுத்திக் கொண் டவள்.

முழுநிலவுப் பின்னணிக்கேற்ப, மோகினி யாய் வெண்ணுடையணிந்து, முத்துக்களால் அலங்காரம் செய்து கொண்டு மோகனமாய், டல்வரிசை காட்டி முன்னே வந்து நிற்கிறாள் இயாகவல்லி.

நிமிர்ந்து கவனிக்கிறான் வேங்கைமார்பன்.

அந்த நேரத்தில் அவள் ஏன் அங்கு வந்தாள் என்பது அவனுக்குத் தெரியும். அவள், அவனது காதலை யாசிக்கும் மோகத் தவசி!

''பிரபோ! மதுரை செல்கிறீர்களாமே!''

—அந்த மெல்லிய குரலையும் பூங்காற்று அலைமோதச் செய்கிறது.

''சென்று தங்கிவிட மாட்டேன்: திரும்பி வருவேன்!'' — ஆண்மையின் கம்பீரக்குரல்; அதிலே ஓர் எள்ளல்.

அவள் மெல்லச் சிரித்துக் கொண்டாள்; மெத்தென நோக்குகிறாள்.

''இயாகவல்லி! நீ விளையாட்டுக் காதலோடு யுத்தம் நடத்துகிறாய்! நீ எனது அத்தை மகள் என்பதில் எனக்குப் பரிபூரண அக்கறையுண்டு. உனக்குச் செய்யவேண்டிய அனைத்தையும் செய்யக் கடமைப்பட்டவன். ஆனால் நீ எனக்கு மனைவியாக முடியாது.''

''காதலியாக இருக்கலாம் அல்லவா?''

''காதல் என்பது புனிதமானது: நீ அதனை வேசைத்தனத்துக்கு இழுக்கிறாய்!''

இப்போது அவள் பூஜ்யமாகச் சிரிக்கிறாள்.

''பிரபோ! அதற்கும் சம்மதிக்கிற அளவுக்கு நான் உங்களைக் காதலிக்கிறேன். எனது தேக மலரை உங்கள் பாதங்களுக்குச் சமர்ப்பிப்பதன் மூலம், எனது ஆத்ம மணம் தெய்வீகமடைகிறது. நீங்கள் இதனை வேசைத்தனம் என்றாலும் ஏற்பேன்;விவேகத் தனமென்றாலும் மறுக்க மாட்டேன்.''

இயாகவல்லியின் நீல நயனங்களில் தித்தில மாய்த் திரண்ட நீர்த் துளிகளில், நிலவு தெரிகிறது. அவளது உடும்புப்பிடியான காதலை வேங்கைமார்பன் நன்றாகவே உணர்ந்திருந்தான்.

''இயாக்வல்லி! என்னை நீ அறிவாய். நீண்ட நெடுநாட்களாக என் நெஞ்சில் கூடு கட்டிக் குடிபுகுந்து விட்டவள் மதுரை இளவரசி திருமேனி. அங்கே இன்னொரு மேனிக்கு இடம் ஒதுக்க முடியுமா?''

''மன்னர் குலத்தில் இது ஒன்றும் மாக அல்லவே?''

''மறுக்கவில்லை; ஆனால் நான் காதலை உபாசித்து யாகம் செய்கிறேன். அதன் பிரசன்னத்தில் உதயமாகும் தேவதையை மட்டும் மணந்தால் போதுமென்று சங்கல்பம் செய்து கொண்டவன்.''

திடுமென்று இயாகவல்லி கலகலவென்று நகைக்கிறாள்...

வேங்கைகள் இருப்பதை மறந்து விட் டாள்..



ஏன்! இப்படி அசந்து போய் பார்க்கறே? என் ராகமாலிகா புடவைங்களை மட்டும் அவர் தான் வாஷ் பண்றது வழக்கம். வண்ணான்கிட்ட போட்டா கெடுத்திடுவானேன்னு அவருக்கு பயம்.



நகைப்பொலி கேட்டுத் திமிரிய வேங்கைகள் உறுமி எழ...

அவற்றைக் கெட்டியாகத் தழுவி அமைதிப்படுத்துகிறான் வேங்கை மார்பன். தலைவன் விசுவாசம் அஃறிணைக்கு இருந்தது.

''இயாகவல்லி! உன்னை மறந்து நடந்து கொள்கிறாய். எனக்கு ஏதோ தீங்கு என்று எண்ணி வேங்கைகள் பாய்ந்தால்...''

''கவலையில்லை; உங்களால் போகாத உயிர் உங்கள் வேங்கைகளால் போகட்டுமே!''

''நீ போய்விடு; அது நிகழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. போய் விடு இயாகவல்லி!''

''போகிறேன் பிரபு! போகுமுன் ஒன்றைக் கேட்பேன்! கண்முன்னே நிற்கும் கற்கண்டு அழகைவிட்டு, யாரோ சொற்கொண்டு வருணித்த ஒரு சொப்பன அழகியை நினைத்து...''

அவளால் மேற்கொண்டு பேச முடியவில்லை. தொண்டை கனத்து அடைபட்டது. திருமேனியே ஓடிவந்து அவளது தொண்டையைப் பிடித்துக் கொண்டது போல உணருகிறாள்.

அநுதாபமாய் நோக்குகிறான் வேங்கை மார்பன்.

''இயாகவல்லி! உனது போராட்டம் எனக்குப் புரியாமலில்லை. திருமேனியை நான் பார்த்ததில்லை; உண்மை; ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மனக்கண்ணால் பூரணமாகப் பார்த்து விட்டேன். ரதிதேவியானவள், பாண்டிய நாட்டில் அவதரித்துத் தமிழ்ப் பயில வேண்டும் என்று வெம்பெருமானிடம் வரம் கேட்டு அவதரித்து இருக்கிறாளாம்! பிரம்மனின் அநுமதியுடன் சரஸ்வதியானவள், திருமேனியின் நாவில் வாசம் செய்கிறாளாம்! புரிகிறதா, இயாகவல்லி?''

''புரிகிறது, மன்மதப் பிரபோ!''

எங்கோ வெறுமையாகக் குத்துகிறாள்... 'இந்த மன்மதனுக்கு அந்த ரதிதேவி; நான் தேவையா?' என்பதுபோலக் குத்துகிறாள்...

''வல்லி! நான் திருமேனியின் மீது கொண்ட மோகத்தின் காரணமாக ரதி என்றேன். அபரிமிதமான உனது அழகில் எனக்குப் பக்தியுண்டு; மோகமில்லை. எனக்கு நிகரான அரசனைத் தேர்ந்தெடுத்து உனக்கு மணமுடிப்பேன்.''

''தேவையில்லை; இந்த உடலைத் தீண்டும் உரிமையை உங்களுக்குத் தருவேன்; இல்லை இந்த மண்ணுக்குத் தருவேன்! இது...''

'சத்தியம்' என்ற சொல்லைச் சொல்லவிடாது குறுக்கிட்ட வேங்கை மார்பன், ''இயாகவல்லி!'' என்று ஓங்கிக் கர்ஜிக்க...

தொடர்ந்து ராஜபுலிகள் 'ம்ம்'கார உறுமல்களுடன் திமிறி எழ முயல...

அவற்றை அடக்கப் பெரும் பாடுபட்டு விட்டான் வேங்கைமார்பன்.

இந்த இக்கட்டான நேரத்தில்தான் கோட்டையுள் ஏதோ பயங்கரம் நிகழ்ந்து விட்டது போன்ற கூச்சல் கேட்கிறது. அது மேலும் வலுக்கிறது.

புரியாமல் திகைத்துக் கவனிக்கிறான் வேந்தன் வேங்கைமார்பன்.

வேங்கைகளை அதனதன் அறைக்குள் அனுப்பி வைத்து அடைத்து விட்டு, கூச்சல் கேட்கும் திசையில் விரைகிறான்.

கோட்டையின் வடக்கு வாசலில், வீரர்கள் வாட்களையும் ஈட்டிகளையும் ஏந்தி, சுழன்று சுழன்று வருகிறார்கள்.

பிரம்மாண்டமான அந்தக் கோட்டையுள் அவ்வளவு எளிதில் நுழைந்து விட்டவர்கள் யார்? இது முடிகிற காரியந்தானா?—என்று யோசித்துப் பார்க்கிறாள், பின்தொடர்ந்து வந்து கவனித்த இயாகவல்லி.

*பாதாளத்தையே எட்டிப் பார்க்கிற ஆழம் நிறைந்த அகன்ற அகழி; அதற்கடுத்து வானத்தை முட்டி நிற்கும் பேரெயில்கள் — அதாவது பெருமதில்கள்! அவற்றின் கூட்டுக்களான கொத்தளங்கள் நட்சத்திரங்களை உவமை கூறுமளவுக்கு உயர்ந்தனவாயிற்றே! ஒளியே நுழைய முடியாத அளவுக்குக் கோட்டையைச் சுற்றிலும் அடர்ந்த காவற்காடுகள். அந்தப் பெரிய அரணில் சின்னச் சின்ன அரண்கள். மதில்களில் பல்வேறுப்பட்ட ஆயுதப் பொறிகள். இத்தகு மகத்தான கோட்டை

யாரு ஆறு?

விடை: சத்துணவுத் திட்ட அமைச்சர் திருச்சி சௌந்தரராஜன் 'பணம் தரும் பரிசு' படத்தில் கதாநாயகனாக நடித்த போது எடுத்த படம் அது.

யுள் எவ்வாறு எதிரிகளின் ஒற்றர்கள் நுழைந்து விட்டனர்?

இயாகவல்லி என்ன? அந்தக்காவற்பேரெயிலில் அனைவருமே அதிர்ந்தும் அதிசயித்தும் போயினர்.

கோட்டையுள் நுழைந்த நால்வருள் இருவர் எப்படியோ தப்பியோடி விட்டனர். தப்பியோடுவதும் சாத்தியந்தானா?

'ஆ' என்ற அலறல் ஒலி...

ஒருவன், புரவியிலிருந்து மண்ணில் வீழ்ந்து விண்ணில் பறந்து போனான்.

மீதமிருக்கும் ஒருவனைப் போக்குக்காட்டி உயிருடன் பிடிக்க முனைகிறார்கள். விவரம் தெரிய வேண்டுமல்லவா?

கோட்டை மதிலின் ஒரு மூலையில் வசமாக அகப்பட்டுக் கொண்ட ஒற்றனைப் பிடித்து இழுத்து வருகிறார்கள்.

வடக்கு வாசலின் எதிரே நான்கு தூண்களைக் கொண்ட சிறிய ராஜமண்டபத்துச் சப்பரத்தில் ஓரமாகப் புரவியின் சேணத்தைப் பற்றிக் கொண்டு நின்றிருக்கிறான் வேந்தன் வேங்கைமார்பன்.

அருகே அழைத்து வந்த ஒற்றனை தெட்டித் தள்ள, அவன் வேங்கை மார்பன் காலடியில் போய் விழ, அந்தக் கால்களை

---

* புறநானூறு வர்ணனை

பற்றுக்கோடாக என்னைப் பற்றிக்கொண்டு கதறுகிறான் அந்தப் பிடிபட்ட ஒற்றன்.

''பிரபோ! நான் மதுரை ஒற்றனுனுலும் இந்தக் கோட்டையின் மர்மமறிய நுழைந் தவனல்ல. எங்கள் பாண்டிய இளவரசி திருமேனித் தேவியார் இட்ட சட்டளைப்படி வந்தவன்.''

திருமேனி...

வியப்பில் விழுந்து துடித்துப் போனுன் வேங்கைமார்பன்...

''திருமேனியின் கட்டளையா?''

''ஆமாம், பிரபோ! எங்கள் இளவரசி, திருமணமே வேண்டாம் என்று மறுத்து விட்டார்கள். பின்னுளில் தமிழ்ச் சங்கத்தின் தலைவியாகி, தமிழை மணந்து, தமிழ்த் தொண்டு புரிய முடிவு செய்து விட்டார்கள். தமிழ்ச்சங்கப் புலவர்த் தலைவரான முதியவர் மாங்குடி மருதனுரின் கடுமையான போத னைக்குப் பிறகு இளவரசியார் மணம்புரியச் சம்மதித்தார். அப்போது பல அரசகுமா ரர்கள் பற்றிய பேச்சுக்கள் எழுந்தன. மாங்குடி மருதனுரோ, உங்களையே பொருத்த மானவர் என்று சொல்ல அதன் காரண மாக இளவரசியார் உங்களை நேரில் பார்த்து: உங்கள் உருவத்தையும், குணநலன்களையும் கண்டு உரைக்குமாறு எங்களை ரகசியமாக அனுப்பி வைத்தார்கள். இது எங்கள் மாமன்னர்க்கும் தெரியாது. ஆனல் வந்த இடத்தில் இவ்வாறு நிகழ்ந்து விட்டது.''

வேங்கைமார்பன் செவிகளில் யாரோ தேனை வார்க்கிருர்கள்...

வானத்தை அண்ணுந்து கவனிக்கிறன்...

முழுநிலவு மோகனமாய்ச் சிரிக்கிறது.

வேங்கைமார்பன் கேட்டான்:

''இதற்கு நீங்கள் ரகசியமாக நுழைய வேண்டியதில்லையே! பகிரங்கமாகவே எடுத்துச் சொல்லி நுழைந்திருக்கலாமே!''

''எடுத்துச் சொன்ளேம். நம்பவில்லை. எங்களைச் சந்தேகித்துத் துன்புறுத்தவே வாட்களையுருவித் தப்பியோட முனைந் தோம்!''

''ஆமாம்; இந்த வலிமையான கோட்டை யுள் எவ்வாறு உங்களால் நுழைய முடிந் தது?''

''உயிரே போனுலும் அதைச் சொல்ல மாட்டேன். ஒன்றைச் சொல்வேன். இந்தக் கோட்டையின் அனைத்து ரகசியங்களையும் எங்கள் மாமன்னர் அறிவார்!''

ஒரு நொடியில் வேங்கைமார்பன் கண்களில் மின்னல் பறித்தது. ஆயினும் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு ஒற்றனை நோக்கினுன்.

''ஒற்றனே! உனது இளவரசிக்கு நானே நேரில் காட்சி தரச் சென்று கொண்டிருக் கிறேன். நான் திரும்பி வருகிற வரையில், நீ இங்கே ஒரு விருந்தினனைப் போலக் கௌரவ மாக இருந்து வரலாம்!''

வேங்கைமார்பன், தனது புரவியில் தாவி ஏறினுன்.

அவனுடன் துணையாகச் செல்லவிருந்த வீரர்கள் ஆயத்தமாயினர்

தொலைவில்...

தியாகவல்லியுடன் நின்றிருந்த அவளது அண்ணனும், நான்கு பிரதான சேனுபதி களுள் ஒருவனுமான ஏனுதி காளிங்கன், பற்களை நறநறவென்று கடித்துக்கொண் டான்.

திகைத்துத் திரும்பிக் கவனித்த தியாக வல்லி, ''அண்ணு! என்ன இது?'' என்று பதைத்தாள்.

நீண்ட பெருமூச்சு பிரிய, தங்கையைக் கவ னித்த காளிங்கன், ''ஒன்று என் தங்கையின் வாழ்வு; இல்லை இந்தக் கோட்டையின் அழிவு!'' என்றுன். அவனது கண்களில் அக்கினி குடியேறியது.


திகைத்து மலைத்துப் போனுள் சிற்பமனைய தியாகவல்லி.

(தொடரும்



ஹார்லிக்ஸ் எங்களுடைய குடும்ப நண்பன். ஆபீஸிலிருந்து களைப்புடன் திரும்பிவரும் என் கணவருக்கு, காலேஜ் மற்றும் டான்ஸ் கிளாஸை முடித்துக் கொண்டு வரும் என் பெண்ணிற்கு, ஸ்கூல் முடிந்து திரும்பும் புட்பால் வீரனான என் பையனிற்கு—ஏன், தினமும் கடைகண்ணி போய் திரும்பும் எனக்கும்தான்—ஹார்லிக்ஸின் துணை ரொம்ப முக்கியம். எங்கள் குடும்பத்தின் நலனிற்காக நான் ஹார்லிக்ஸையே நம்பறேன்.

மால்ட்டட் பார்லி, முழு ஆடைப்பால் மற்றும் பொன்னிற கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம். ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான ஒரு லட்சிய பானமென்ற நம்பிக்கையைப்பெற்றது. எனவே, கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின்மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

சொல் ஒன்று வேண்டும்

முன்கதைச் சுருக்கம்

உயர் போலீஸ் அதிகாரி பரந்தாமனின் மகன் ராஜா முரட்டு சுபாவம் உள்ளவன். தாராவை ஒரு காமதுரனின் பிடியிலிருந்து தப்புவிக்கப் போக, கொலைக் குற்றத்தில் சிக்கித் தலைமறைவாகிறான். அதனாலேயே அவன் மீது சந்தேகம் வலுப்பட, பரந்தாமனை அவமானம் சூழ்கிறது. மேலதிகாரிகள் அவனைக் கண்டுபிடித்துத் தண்டனை பெற்றுத் தரும் பொறுப்பை அவரிடமே விடுகிறார்கள். பரந்தாமனும் மகனென்று பாராமல் கடமையாற்றத் தயாராகிறார்.

ராஜாவின் மனைவி உமா கருவுற்றிருப்பது தெரிய வருகிறது. குடும்பத்தைத் துயர் சூழ்ந்திருந்தாலும் உமாவின் வளைகாப்பு ஒரு குறையுமின்றி நடக்க வேண்டும் என்று பரந்தாமன் உத்தரவிடுகிறார். ராஜாவை அந்தரங்கமாகக் காதலித்து அதை வெளியிட முடியாமல் தவிக்கும் ஊமை அவனுடைய முறைப்பெண் விஜி. அவளும் பரந்தாமனின் மனைவி மீனாட்சியும் வளைகாப்பைத் துயரம் அழுத்த விமரிசையாகவே நடத்துகிறார்கள். வளை காப்பின் போதாவது ராஜா எப்படியும் வருவான் என்று எதிர்பார்க்கிறாள் விஜி. வளையல் அடுக்க ஒரு பெண்ணும், பையனும் வந்து திரும்பிச் செல்கிறார்கள். வளையல் சுற்றி வந்த தாளில் இருந்த வாசகம் ஏதோ உணர்த்த முயல்வது போல் உணர்கிறாள் விஜி.

பரந்தாமனிடம் பணியாற்றும் டிரைவர் எத்திராஜ் போலீஸ் அதிகாரியின் கண்டிப்பான கடமை உணர்வு காரணமாகத் தன் தாயை இழந்து சிறு வயதில் துன்பப் பட்டவன். பரந்தாமனைப் பழிவாங்க ரகசியமாகத் திட்டமிடும் அவன் ராஜாவை எப்படியாவது பிடித்துப் போலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று திட்டம் போடுகிறான்.

தாராவோ தன்னைக் காப்பாற்றிய ராஜா போலீஸாரிடம் சிக்கக் கூடாதே என்று சதா கவலைப்பட்டுப் பிரார்த்தனை செய்கிறாள். எத்திராஜ் தாராவைப் பின்தொடர்ந்து அவளிடமிருந்து உண்மையை அறியப் பிரயத்தனப்படுகிறான். அடிக்கிறான். பலனில்லை.

வளைகாப்பு வைபவத்துக்கு ராஜா வந்து விட்டுப் போனான் என்ற ரகசியம் விஜிக்கும் உமாவுக்கும் தெரிகிறது. தன் வளையல்களில் எது ராஜாவின் கைபட்டது என்று செல்லமாகத் தட்டிப் பார்க்கிறாள் உமா.

மேலே என்ன ஆகிறதோ, படியுங்கள்

16

"ராஜா!"

—தாரா, திடீரென அவனைச் சந்தித்த சந்தோஷத்தில் தன்னையும் மீறிக் கூவுகிறாள்.

ஆம். சந்தோஷம்தான். பழைய தாராவாக இருந்திருந்தால், அவனைக் கண்டதும் முகம் வெளிறிப் போயிருப்பாள். ஆனால், இப்பொழுதோ... இவனை மறுபடியும் சந்தித்து மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று



தானே அவன் இது நாள் வரையில் காத்திருந்தான்...

அவனோ – இவளது முக மாறுதலைக் கவனிக்காமல், தன் சட்டைப் பையிலிருந்த இனிப்பை எடுத்து அவளிடம் நீட்டுகிறான்.

''இந்தாங்க.. ஸ்வீட்... எடுத்துக்குங்க.''

அவள் புரியாமல், அவனையே உற்றுப் பார்க்கிறாள்...

''ஸ்வீட்டா...''

''உம். ஸ்வீட்தான். இன்னிக்கு என் பெண்டாட்டிக்கு வளைகாப்பு... அவ கூட உட்கார்ந்து வடை பாயசத்தோட சாப்பிடக் கொடுத்து வைக்கலைன்னாலும், அவளை வளையலும், கையுமா, சர்வ அலங்காரத்தோடப் பார்க்கவாவது கொடுத்து வச்சிருந்தேன்...''

தாரா திறந்த வாயை மூட மறந்து அவனையே பார்க்கிறாள்.

''நீங்க என்ன சொல்றீங்க...?''

'இன்னிக்குக் காலையில என் பெண்டாட்டிக்கு என் கையாலேயே வளையல் பொறுக்கிக் கொடுத்தேன். அதுவும் எப்படி... எங்க வீட்டு நடு ஹால்லே உட்கார்ந்து..... என்னைச் சுத்தி அத்தனை போலீஸ் ஆபீஸரும் இருந்தாங்க... அங்கேயிருந்து திரும்பறப்ப ஸ்வீட் பொட்டலம் கூடக் கட்டிக் கொடுத்தாங்க... இதையெல்லாம் உங்க கிட்ட எதுக்காக இந்த அர்த்தராத்திரியிலச் சொல்றேன்னு... நல்லவனுக்கு எப்படியும் தெய்வம் கைகொடுக்குங்கறதுக்காகத்தான்... என் தெய்வம் சாதாரண வளையல்காரக் கிழவி உருவத்துல வந்தது...''


அவள் தலை குனிந்து நிற்கிறாள். நெஞ்சுக்குள் அவமானம் நெருப்பாய் சுடுகிறது.

எத்தனை நாளுக்காகக் குத்திக்காட்டுகிறான் இவன்...

அவள் முகத்தை மூடிக் கொண்டு அழுகிறாள்...

''தயவு செஞ்சு என்னை இந்த இடத்துலேயே கழுத்தை நெரிச்சுட்டுப் போயிடுங்க ராஜா. வார்த்தையாலக் கொல்லாதீங்க..''

''இன்னொரு கொலையா... ஏன் இப்ப நான் படற பாடு போதாதா.... யூ நோ.... வளையல்காரம்மா வீட்டுலதான் நாலு நாளாச் சாப்பாடு. அந்த அம்மா எனக்கு ஆயுசு முழுக்கச் சாப்பாடு போடத் தயாராத்தான் இருக்காங்க. என்னாலதான் இருக்க முடியாது... ரெண்டு நாள் ஒரு இடத்துல சேர்ந்தாப்பல இருக்க முடியாம ஓடிக்கிட்டேயிருக்கேன். சூரிய வெளிச்சத்தையே இன்னிக்குத் தான் கண்ணாலப் பாக்கறேன்... வெளியில எங்கே போய்ப் பதுங்கி



ளாலும் ஒரு வேளைச் சாப்பாட்டுக்காவது நான் பணம் கொடுக்கத்தான் வேணும்.... கையில ஒத்தை ரூபா இருக்கு. பாங்கிலே என் பேருல லட்ச ரூபா இருந்தாலும் நேரே போயோ — இல்லே வேற ஆள் மூலமாவோ கூட செக் கொடுக்க முடியாத நிலே...''

''ஐயாம் ஸாரி ராஜா...''

ராஜா அதை மறுப்பது போலக் கையை வீசி ஆட்டுகிறான். தாராவோ அவன் முகத்தையே பார்த்தபடி கண்ணீர் பெருக நிற்கிறாள்.

''நீங்க மன்னிப்புக் கேட்கணும்னு நான் எதிர்பார்க்கலே தாரா... எனக்கு ஒரேயொரு ஆசைதான் இப்போதைக்கு... என் குழந்தையைத் தூக்கி ஒரேயொரு முத்தம் கொடுத்திடணும்... அதுவரைக்கும் எங்கேயோ ஒளிஞ்சு எப்படியோ காலத்தை தள்ள என்னால முடியும்... என் குழந்தையைப் பார்த்து ஆசை தீர முத்தம் கொடுத்த பிறகு...''

''போலீஸ்லே சரண் புகுந்துடுவீங்களா.''

தாரா தன்னை மறந்து படபடக்கிறாள்..

அவன் ஏகத்தாளமாய்ச் சிரிக்கிறான்.

''போலீஸ்லே சரண் புகுந்தா — நீங்க இந்தக் கொலையில சம்பந்தப்பட்டிருக்கற விவரம் தெரிய வரும்னு... என் ஆயுசுக்கும் போலீஸ்லே மாட்டிக்க மாட்டேன். மறுபடியும், உங்களுக்குச் சத்தியம் பண்ணித் தரேன்... அப்படி போலீஸ் என்னைப் பிடிச்சுடுத்துன்னு... அடுத்த நிமிஷமே உயிரை விட்டாலும் விடுவேனே தவிர, உண்மையைச் சொல்ல மாட்டேன்...''

தாரா, 'சட்'டென அவன் கையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள்...

''அன்னிக்கு உங்களை அந்த மாதிரி விரட்டியடிச்சிருக்கக் கூடாது. உண்மையிலேயே நான் சுயநலக்காரிதான்... நீங்க போனதுக்கு அப்புறம் இதைப் பத்தி நினைச்சு நினைச்சு வருத்தப்பட்டேன்...''

அவள், அதற்குப் பின் நடந்தது எல்லாவற்றையும் சொல்கிறாள். ரமாமணி, ஜீப்பில் போன உமாவையும், விஜியையும் அடையாளம் காட்டியது பற்றி, கோவில் வாசலில் அவள், விஜியை உமாவென்று நினைத்துப் பேசியது பற்றி, அதை எத்திராஜ் கவனித்து விட்டு, போலீசுடன் தன் வீட்டுக்கு வந்தது பற்றி, இவர்களின் வருகையினல் அவள் கணவன் பாபு எரிச்சலடைந்து, இவளை அடித்து நொறுக்கியது பற்றி... சற்று முன்தான் எத்திராஜ் வந்து அவளை மிரட்டி விட்டுப் போனான் என்பது பற்றி...

அவன் அத்தனையையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறான்...

தாரா, திடீரென நினைவு வந்தாற்போலக் கேட்கிறாள்.

''ஆமா... சாப்பிட்டீங்களா...?''

''பங்காரு அம்மா சாப்பிட்டுட்டுத்தான் போகணும்னு வற்புறுத்தினங்க... எனக்குத் தான் எதுவும் வேண்டியிருக்கலே தாரா... ஒரு நாளைக்கு ஒரு பொழுதுதான் சாப்பிடறேன்... அதுவும் கையிலே எடுக்கற கவளத்தை வாயிலப் போடறதுக்குள்ளே — போலீஸ் அந்தப் பக்கம் தேடிட்டு வர்றதுங் கற சேதி வந்துடும்... அப்படியே கையை உதறிட்டு, தலை தெறிக்க ஓடுவேன்...''

ராஜா இதைச் சொல்லும்பொழுது— தாரா, குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்.

''இந்தப் பாவம் என்னைச் சும்மா விடாது... ஏழேழு பிறவிக்கும் தொடர்ந்து வரும்...''

அவள், பிரிந்து கிடக்கக் கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு, அடுப்பைப் பற்ற வைக்கிறாள்...

''இன்னிக்கு ஒரு நாளாவது என்னோட, நிம்மதியாச் சாப்பிடுங்க ராஜா....''

'நான் சாப்பிட வரலே தாரா... இந்தாங்க, என் பெண்டாட்டியோட வளை காப்பு பட்சணம்... வாங்க... ரெண்டு பேருமா சேர்ந்து சாப்பிடுவோம்...''

அவன் தன் சட்டைப் பையிலிருந்த இனிப்பை விண்டு அவளிடம்கொடுக்க....

அவள், அவசரமாய்ச் சமைக்கத் தொடங்குகிறாள்.

ஒரு நல்ல மனிதனுக்காக, ஒரு பசித்த வயிற்றுக்காகச் சமைப்பதில் தான் எத்தனை சுகம் இருக்கிறது?

அவளுக்குத் திருமணமாகி, இத்தனை வருஷங்களில் ஒருநாள் கூட, அவளது பிறந்த வீட்டு மனிதர்கள் என்று சொல்லிக் கொண்டு யாருமே வந்ததில்லை...

ஓடிப் போனவளைத் தேடிக்கொண்டு யார் வருவார்கள்?


பெற்றவர்களுடன் இருக்கும்பொழுது, தங்கை, தம்பிக்குப் பிடிக்குமே என்று, அவள் புதுசு புதுசாக எதையாவது சமைப்பாள். வீட்டில் சமையலுக்கு ஆள் இருந்தாலும், இது போல எப்பொழுதாவது சமையலறைக்குள் புகுந்து அமர்க்களம் செய்வாள் அவள்...

''அக்கா... வாசனையே பிரமாதமா இருக்குக்கா...''

தம்பியின் புகழுரையே, அவளை உச்சி குளிரச் செய்வதாய்...

இன்று —

வெகு நாட்களுக்குப் பிறகு அந்த உணர்வு...



சொந்த சகோதரனுக்காகச் செய்வது போல...

விடுவிடென்று ஒரு பலகையை எடுத்து வந்து சமையலறையில் போடுகிறான்....

''ராஜா... எனக்கு அண்ணன் இல்லாத குறையே இப்ப இல்லே... உங்களை... ஸாரி, இனிமே நான் வா, போன்னுதான் கூப்பிடப் போறேன். நீயும் என்னை. உன் தங்கையைப் போல...''

''அண்ணன் தங்கை உறவு அப்புறம் இருக்கட்டும். சோறு போடறதா இருந்தாச் சீக்கிரம் போடு தாயே... இங்கே இருக்கற ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு அவஸ்தை தான்...''

''இதோ ஆச்சு...''

அவள் பம்பரமாய்ச் சுழல்கிறாள். சமைத்து முடித்ததை அப்படியே கூடத்தில்கொண்டு வந்து வைக்கிறாள்.

எதிரும் புதிருமாய், இரண்டு தட்டு...

''ராஜா... உனக்கு ஊறுகா பிடிக்குமா.''

''அந்த மாதிரி ரசிச்சுச் சாப்பிடறப் பழக்கமெல்லாம் இந்தச் சில மாசங்களிலே மறந்தே போயிடுச்சு தாரா... ஒருநாள் ராத்திரி, சாப்பிடறதுக்கு ஒண்ணுமே கிடைக்கலே: வெளியில வந்து, தேவையானதை வாங்கவும் முடியல்லே... நான் எங்கே ஒளிஞ்சிட்டிருந்தேன் தெரியுமா... ஒருத்தர் வீட்டு மாட்டுக் கொட்டில்... அங்கே எனக்குக் கிடைச்சது எல்லாம் மாட்டுக் கொட்டிலில கிடந்த புண்ணாக்குத்தான். மூணு நாள் பட்டினியில புண்ணாக்குக் கூட புளியோதரை மாதிரி அத்தனை ருசியா இருந்தது...''

அவள், இரண்டு தட்டிலும் சோற்றைப் பரிமாறிக் கொண்டே பேச...

''இதப் பாரு... போறச்சே, மறக்காம பணம் கேட்டு வாங்கிக்க... என்ன பாக்கறே, இப்பத்தானே சொன்னே, கையில ஒரு ரூபாதான் இருக்குன்னு... என்சம்பளப் பணம் அப்படியே இருக்கு. தரேன்.''

''தாரா...''

ராஜா, அவளது முகத்தையே உற்றுப் பார்க்கிறான். அதில் குறும்பும் பரிவும் வாத்சல்யமும் அவனை நெகிழச் செய்வதாய்...

''இது வரைக்கும் நான் யார்கிட்டயும் கைநீட்டிப் பணம் வாங்கினதில்லே.... எனக்குக் கொடுத்துத்தான் பழக்கம்...''


''இப்பக் கூட நீ கைநீட்டப்போற தில்லே... அதோ கிடக்கு பாரு என் ஹாண்ட் பேக்... அதுல இருக்கு பணம் ... எடுத்துக்க...''

அவள் கடச் கடச் சோற்றைப் பரிமாறி அதன் மீது குழம்பை ஊற்ற...

ராஜா ஒரு குழந்தைக்கே உரிய கவாரஸ்யத்துடன் அதையே பார்த்துக் கொண்டிருக் கிறான்...

''சாப்பிடேன்...''

''இரு... இரு... முதல்லே தட்டுலே இருக்கற சோற்றை ஆசை தீரக் கண்ணுலப் பார்க்கறேன்... தட்டு போட்டுச் சாப்பிட்டது— அன்னிக்குக் கடைசியா உமா பரிமாறி



சாப்பிட்டுட்டு ஆபீசுக்கு ஓடி வந்தேனே.... அதான்...''

அவன் மெல்லியச் சிரிப்புடன் சோற்றைப் பிசைந்து வாயில் போடப் போகிற சமயத்தில்...

வாசற்கதவு தட்டப்படும் சத்தம்....

விக்கித்துப் போகிறாள் தாரா...

ராஜாவோ கையை உதறிக்கொண்டு எழுந்தே விட்டான்...

'இந்த நேரத்துல யார்...'

அவள் கலக்கத்துடன் ராஜாவைப் பார்க்க... ராஜா கையிலிருந்த சோற்றை உதறிவிட்டு சமையலறைப் பக்கம் — புழக் கடைக்குப் போவதற்காக இருந்த —சற்று முன் அவன் இடித்துத் தள்ளிக் கொண்டு உள்ளே பிரவேசித்த கதவு வழியே வெளியே பாய்கிறான்...

புழக்கடையின் கும்மிருட்டு. அவனை ஒரே விழுங்காய் விழுங்கிக் கொள்ள...

அது நேரம் வரையில் ஸ்தம்பித்து நின்றிருந்த தாரா... மெள்ள எழுந்து வாசற்கதவைத் திறக்க...

அங்கே—

இரண்டு பேரின் கைத்தாங்கலுடன் வலது கால் முழுக்க பாண்டேஜ் சுற்றப் பட்ட நிலையில்...

பாபு!

காலில் மட்டுமல்ல தலையிலும், தோள் பட்டையிலும் கூடப் பலத்தக் கட்டு...

கண்களில் மட்டும், கட்டுப் போடாத தால், கொப்புளித்த ஆத்திரம் முகம் முழுக்கப் பரவ,

''கதவைத் திறக்க இத்தனை நேரமாடீ.''

அத்தனை அடியிலும், குரலில் பலனை மில்லை... அதே பழைய கருதியில் கத்து கிறான்...

கூட வந்தவர்கள் அவனை ஒருபுறமாய் உட்கார வைத்துவிட்டு, வண்டியிலிருந்த அவனது கைப்பையை எடுத்து வரப் போக...

பாபு — தன் எதிரில் பரிமாறப்பட்டிருக்க இரு தட்டுக்களையும், அதில் பிசைந்து வைக்கப்பட்டிருக்க குழம்புச் சோற்றையும் வெறித்துப் பார்க்கிறான்.

(தொடரும்)

எதிர் வீட்டில்தான் மணி அடிக்கிறது.. நம் வீட்டில் இல்லை...

கல்யாணம் எழுந்து ஓசைப்படாமல் எட்டிப் பார்த்தான்... வாசலில் ஒரு இன்ஸ்பெக்டர் நிற்பது தெரிந்தது... சுற்றும் முற்றும் பார்த்தபடி அவர் மீண்டும் அழைப்பு மணியில் கைவைக்க... உள்ளே மணி அடிப்பது மறுபடியும் கேட்க...

...நினைத்த மாதிரியே எல்லாம் நடக்கிறது... மெல்ல விசிலடித்தான்... உற்சாகம் சொல்லத் தெரியாமல் வந்தது.....

வீட்டினுள் திரும்பினான்...

''உமா... இன்னியோட அந்த எதிர் வீட்டுச் சனியன் தொலைஞ்சுது...''

''...எப்படி...?''

''பாரு... பாரு... கொஞ்ச நாழியில் என்ன நடக்கப் போறதுன்னு...''

பயங்கரமாக உறுமியபடி இன்ஸ்பெக்டர் தெரிகிறார்... அவர் எதிரில் நடுங்கியபடி– பேசத் தெரியாமல் விழித்தபடி அந்தச் சிங்காரி...

... அட ... நீதானா அது... ஏண்டி.... ஹோட்டலை விட்டு வீடு வரைக்கும் வந்தாச்சா... ம்... கழுதை... நடடி ஸ்டேஷனுக்கு... அவள் மயிரைப் பிடித்து இழுத்து வந்து. ரோடில் தள்ளி. ஜீப்பில் ஏற்றி....

அந்த அபார்ட்மெண்டே சிரிப்பாகச்சிரிக்க சிரிக்க...

...எதிர் வீட்டுக்காரி மட்டும் போய்விட்டால்... அப்பாடா... நிம்மதி... ரொம்பவும் கஷ்டப்பட்டு இத்தனை வசதியோடு ஒரு வீடு கிடைத்திருக்கிறது...

சட்டென்று எதிர் வீட்டுக் கதவு திறந்தது...

இன்ஸ்பெக்டர் நிதானமாக வெளியில் வந்தார்... கூடவே அவளும் வந்தாள்.... சிரித்தபடியே ஏதோ சொன்னாள்... அவரும் சேர்ந்து சிரித்தார்... தொப்பியைச் சரி செய்து... கீழே இறங்கி... வந்தது தெரியாமல் போய்...

ஏமாற்றமாக இருந்தது... கடைசியில் அவள் இதற்கும் நழுவிக் கொண்டுவிட்டாளே...!

ஆறுமாதமாகத்தான் இந்த பாடு... அதற்கு முன் தொந்தரவு இல்லை... எதிர் வீடு காலியான போது இவள் வந்து சேர்ந்தாள்... ஒரு தினுசாக இருக்கிறாளே என்று



நினைத்தான்... போகப் போக அவள், ஒரு மாதிரி என்பதும் புரிந்தது... 'பளி'ரென்ற அவள் அழகு... மேக்கப்.... அதற்காக வரும் மனிதர்கள்... வேளை பொழுதில்லாமல் சிரிப்பும் பாட்டும்...

எதிர் வீட்டுச் சொந்தக்காரர் பம்பாயில் இருந்தார்... அவர் ஒருமுறை வந்தபோது, இவனுக அவரைப் போய்ப் பார்த்துப் பேசினான். ''...அப்படியா...?'' என்று அவர் ஆச்சரியப்பட்டுப் போனார்... ''நாளைக்கே அடித்து விரட்டுகிறேன்'' என்று சொன்னதோடு சரி!

நாளை வந்து போயிற்று... மூன்றுமாதம் ஆயிற்று... எதிர் வீட்டுக்காரர் அடிக்கவும் இல்லை... விரட்டவும் இல்லை...

கல்யாணமும் விடுவதாக இல்லை... அக்கம்பக்கம் இருக்கும் மற்றவர்களிடம் பேசிப் பார்த்தான்.

''...கௌரவமான குடும்பங்கள் இருக்கிற தெரு... இதற்கு நடுவில் ஒரு நடத்தை கெட்டவளை வைச்சுண்டு... ம்... எல்லோருமாச் சேர்ந்து ஒரு கம்ப்ளெய்ண்ட் கொடுப்போம்...''

''எங்கே சார் இதற்கெல்லாம் டயம் இருக்கு...''

கடைசி முயற்சியாக இன்ஸ்பெக்டரைப் போய்ப் பார்த்தான்...

''...நாளைக்கே வரேன்...'' என்றார். சொன்னபடி வரவும் செய்தார்... ஆனால்...

''...நம்ப பராங்குசம் எம். எல். ஏ. இருக்கார் இல்லியா... அவருக்கு ரொம்ப வேண்டியவங்களாம் இந்த அம்மா...'' என்றார் இன்ஸ்பெக்டர்.

வாயடைத்துப் போயிற்று.

வீட்டுக்கு வந்து உள்ளேயே முடங்கிக் கிடந்தான்... தோற்றுப் போன மாதிரி....

நாலைந்து நாள் ஆகியிருக்கும்...

கதவை யாரோ தட்டினார்கள்...

திறந்ததும், எதிரே ஒருவன் தெரிந்தான். இவனைப் பார்த்ததும், உடம்பை வளைத்து, ஒரு மாதிரியாக நெளிந்தான்...

''...யாரு வேணும்...?''

''....ஹி...ஹி... அது... இல்லியா...?''

வந்தவன் பர்ஸை வெளியில் எடுத்து, நோட்டுகளை எண்ணுகிற மாதிரி இவனிடம் காட்டி...

''...அது இந்த வீடு இல்லே... எதிர்த்த வீடு...''

சொல்வதற்குள் குரல் நடுங்கிப்போயிற்று. கைமட்டும் எதிர் வீட்டைக் காட்டிற்று.

''....அவங்கதான் இங்கே அனுப்பிச்சாங்க...''

'...கொல்'லென்று அடக்க முடியாமல் யாரோ சிரித்தார்கள்....

''...செட் அவுட்...''

கதவை அவன் முகத்தில் அறைந்த மாதிரி சாத்தி, உள்ளே வந்தான்... உடல் நடுக்கம் குறையவில்லை... அந்த நடுக்கத்துடன் சட்டையை எடுத்துமாட்டிக் கொண்டான்.

''...எங்கே கிளம்பியாச்சு...?''

...உமா... வெளியில் நடந்த கண்றாவி எதுவும் அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை..

''புரோக்கர் தணிகாசலத்தைப் பார்த்துட்டு வரேன்...''

''... ஒரு வாய் காப்பி கூட குடிக்காம, அவ்வளவு அவசரமா இப்ப யாருக்கு வீடு பார்க்கணும்...?''

''...நமக்குத்தான்...''

இறங்கும்போது, ஞாபகமாக எதிர் வீட்டைப் பார்க்காமல் இறங்கினான்.



கண்டது கண்டபடி



துணிமணி

சமீபத்தில் ஒரு புடைவை நிறுவனத்தினர் 'சேல்ஸ்' செய்தார்கள்' பிரபல சென்னை ஒட்டலில். காலையிலேயே கூட்டம் ஏகமாகத் திரண்டு விட்டது. ஹாலில் இடமில்லாததால் படிகளிலும் வராந்தாவிலும் ஆயிரக்கணக்கான பெண்கள் காத்திருந்தனர். உள்ளே, சந்தைக்கிணையாக இருந்தது. ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புடவைகளெல்லாம் தரையில் மிதிபட்டுக் கிடந்தன. பலர் 20, 30 புடவைகளை எடுத்து வந்து ஒன்றிரண்டெடுத்துக் கொண்டு மீதியைத் தரையிலேயே போட்டு விட்டனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, சிலர் விலை குறைந்த புடவைக்குப் பில் போட்டுக் கொண்டு பிறகு விலை உயர்ந்த புடவையை மாற்றி வைத்துக் கொண்டு போனார்கள். நமது மக்களின் நடத்தையைக்காண வேதனையாய் இருந்தது.



பெண்மணி

ஒரு பெண்மணியின் வாழ்க்கை வரலாறு சமீபத்தில் வெளியிடப்பட்டது. அதிக விளம்பரம் இல்லாவிட்டாலும் விழாவிற்குக் கூட்டமும் நிறைய வந்திருந்தது. உடல் சிரமம் பார்க்காமல் பக்தவத்சலம் அவர்களும் வந்திருந்தார்கள். காலஞ்சென்ற திருமதி நீலாவதி ராமசுப்ரமண்யம் புரட்சியாளர்; சமூக சேவகி; சுதந்திர வீரர்; பேச்சாளர்; எழுத்தாளர். அவரது கலப்புத் திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்த திரு. தி. ஆ. பெ. விசுவநாதம் தான் விழாவிற்குத் தலைமை தாங்கினார். இந்தக் கலப்பு திருமணத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பு இருந்ததால் ஈ. வெ. ரா. பெரியார் சுமார் ஒரு மாதம் இந்தத் தம்பதியைத் தம் வீட்டில் வைத்துப் பாதுகாத்தாராம்.

தட்டு

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போகும்போதெல்லாம் எனக்கு மனத்தில் பெருமிதமும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. காரணம், பொது மக்கள் சௌகரியத்திற்காக எத்தனை எத்தனை விவரமான அறிவிப்புக்கள், கவுண்டர்கள் — ரிசர்வேஷன் பற்றி விவரமான தகவல்கள். பலசமயம் தகவல்களை மறைத்து வைப்பது லஞ்சத்திற்கு வழி வகுக்கிறது. உதாரணமாக, ரிசர்வேஷன், கோட்டா போன்றவை. டில்லியில் பல வருஷங்கள் இருந்த நான் இந்த மாதிரி தகவல்களுக்காகப் பல சமயம் அலைந்திருக்கிறேன். தோல்வியும் அடைந்திருக்கிறேன். சென்ட்ரல் ஸ்டேஷன் நிர்வாகிகளுக்குப் பாராட்டும் நன்றியும் தரப்பட வேண்டும்.



குட்டு

சைனு பஜார் பெருகிக் கொண்டே வருகிறது. கடை, பிளாட்பாரம் கடை, காய்கறிகடை, என்று முன்னுக்கு வந்து தெருவை கபளீகாரம் பண்ணிக்கொண்டு இருக்கிறது. வியாபாரிகளும் பொது மக்கள்; அலுதிப்படுபவர்களும் பொது மக்கள் (அதாவது வாக்காளர்கள்) யாரைத் திருப்திப்படுத்துவது என்பது தான் அதிகாரிகளின் பிரச்னையாக இருக்கும். தேர்தல்கள் வரக் கூடும் என்பதால், பிரச்னை சமீபத்தில் தீரும் சாத்தியமில்லை!



அ.குமார்


ஒரேயடியா அருந்தி அருந்தித் துடைக்கிறதைப் பார்த்தா நான் எங்கே இருந்து திருடிகிட்டு வந்தேன்னு ஓட்டல் பேரைக் கண்டுபிடிச்சுடுவார் போலிருக்கே!


இவ்வளவு துணிகளை எப்படி துவைக்கறதுன்னு கவலைப் பட்டுண்டு இருந்தேன். நல்லவேளையா நீங்க ஆபீஸ் விட்டதுமே வீட்டுக்கு வந்துட்டது நல்லதாப் போச்சு!
இவ்வளவு பெரிய கழுத்து இருந்தா நம்ம அரசியல்வாதிகளுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கும்? ஒரே சமயத்துலே எத்தனை மாலை வேணும்னாலும் போட்டுக்கலாமே?
வெடிகள்

ஓம் க்ரீம் க்ரைம்! ③

கதை: ஜேஎஸ்ராகவன்
சித்திரம்: செல்லம்





அதுக்கு ஏதான வழி பண்ணனும். வெளியில குளிர்ச்சியா இருக்கிற மாதிரி இருந்து ஆளை அமுக்கிடணும்.
ஐஸ் பத்தி ஆராய்ச்சி பண்ண அண்டார்டிகா அனுப்பிடலாமா?
அப்புறம் உடம்பு பூரா வெள்ளையா வீங்கி உயிரை எடுப்பான். எப்படியானு அவன் மண்டையைப் போட வைக்கணும்.
ஐயையோ அநியாயக் கிரகம் பண்ணிடணும்னு சொல்றீங்களே ...அது....அது
போடா தொடை நடுங்கி. இந்த சதியைச் சிவன் எப்படி என் உயிரை வாங்கிண்டு இருக்கான்னு உனக்குத் தெரியாது. ...டேய் இன்னும் கொஞ்சம் அந்த சைவு விஸ்கியைப் போட்டு.
பேசாம அவனை கல்தா குடுத்து அனுப்ப வேண்டியது தானே. ஏன் பயப் பட்றீங்க.
யாருடா இவன்? விவரம் தெரியாதவனு இருக்கான். சொத்தில ஒரு பாகம் அவன் பேரில இருக்குடா
அப்படியா? இருந்தாலும் ஆளைக் கொல்றதாவது ....
போடா தயிர்சாதம். இப்படி பயப்பட்டா நீ எனக்கு வாரிசாக முடியுமா? நான் வழி பண்றேன் பாரு. அடுத்த அமாவாசை அன்னிக்கு சதீஷ் குளோஸ்.
அடிமை போல் பணிந்து உள்ளே போன மது ராக்கன், ஜில் ஜில் ஐஸ் குன்றுகளுக்குள் தன் சப- லத்தை எடுத்து ஒரு அமுக்கு அமுக்குகிறான்.
மாமா நினைவு தப்பிவிட்டார் என்று தெரிந்ததும் நீலகண்டன் சுறுசுறுப்பாகிறான்.
மறைச்சு வெச்சிருந்த டேப் ரிகார்டரில சரியா பதிவு ஆயிருக்கணும்! மாமா இவனுக்கு 'மொயில்' எழுதினது சீச்சீ! 'மொப்' எழுதினது. எவ்வளவு உபயோகமா இருக்கு!
தொடரும்

விவாத மேஜை

தேர்வுகள் தேவையா?



ராஜகோபாலன் வீட்டில் ஓர் எழுதப்படாத சட்டம் உண்டு: சாப்பாட்டு மேஜைக்கு யாரும் செய்தித் தாளோ, பத்திரிகைகளோ கொண்டு வரக் கூடாது—அவரைத் தவிர. ரஞ்சிதாவும், விவேக்கும் அவரது பிரத்தியேக உரிமையை இதுவரை எதிர்க்கத் துணிந்ததில்லை. ஆனாலும்.. ஒருநாள் செய்வார்களோ என்னவோ!

அந்த ஞாயிற்றுக்கிழமை பேப்பரும் கையுமாக உட்கார்ந்து கொண்டு, கண்ணாடியை நடுவிரலால் மூக்கின் நுனியிலிருந்து மேலே ஏற்றி விட்டுக் கொண்டு, தொண்டையைக் கனைத்துக் கொண்டார் ராஜகோபாலன். 'ஏதோ ஆரம்பிக்கப்போகிறார் பார்!' என்கிற மாதிரி விவேக்கும் ரஞ்சிதாவும் பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள். தனக்குப் பிடிக்காத கத்தரிக்காய்க் கறியை, தான் கொஞ்சமாகப் போட்டுக் கொண்டதை, துவங்க இருக்கிற விவாத மும்முரத்தில் அம்மா கவனிக்க மாட்டாள் என்று விவேக் நினைத்துக் கொண்டான்.

''என்ன நாடகம்! என்ன கண்துடைப்பு! சே... சே...!'' என்றார் ராஜகோபாலன், தலையைத் தலையை ஆட்டியபடி.

''என்ன அது?'' என்றாள் அஞ்சலி. ''ஏதாவும்சினிமா விமர்சனமா?''

''இல்லே... இல்லே...நிஜ வாழ்க்கையில் நடக்கிற நாடக விமர்சனம்! வடக்கே ஏதோ ஒரு பல்கலைக்கழகத்தில் பரீட்சையின் போது நடந்த நிகழ்ச்சி பற்றி...''

''என்ன ஆயிற்று? கேள்வித்தாள் வெளியாகி விட்டதா?'' என்றாள் ரஞ்சிதா ஆவலுடன்.

''வெளியாகிறதா! அதைவிட மோசம். எல்லாமாணவர்களும் பாடப் புத்தகத்தைப் பரீட்சை ஹாலிலே திறந்து வைத்துக் கொண்டே, பார்த்துப் பார்த்து விடை எழுதினார்களாம்! போதுமா?''

''ஒருவேளை புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு எழுதுகிற புதிய பரீட்சை முறையோ என்னவோ?''

''ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றால் மாணவர்கள் அவர்களை அடித்து நொறுக்கி விடுவார்கள், தெரியுமோ?'' என்றாள் அஞ்சலி. ''மூன்று வருஷங்களுக்கு முன்னால் நடந்தது நினைவில்லே...?''

''பழைய கதை ஏதும் எனக்கு ஞாபகம் இல்லே. எனக்குத் தெரிந்ததெல்லாம், நான் மாணவனாயிருந்த நாளில்...''

''இருக்கட்டும் அப்பா!'' என்று குறுக்கிட்டாள்

மாலினி சேஷாத்ரி

என்றான் விவேக், ஒன்றும் தெரியாத மாதிரி.

''மேற்பார்வை பார்க்கிறவர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து கொண்டு மாணவர்கள் இப்படி மோசடி செய்ய மனப்பூர்வமாக உதவியிருக்கிறார்கள்'' என்று உரக்கப் படித்தார் ராஜகோபாலன். ஆத்திரத்தில் அவர் குரல் கிரீச்சிட்டது. ''மாணவர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு, அவர்களுக்குப் பதில்களை எடுத்துக் கொடுத்ததாக இந்தச் செய்தி சொல்லுகிறது. அக்கிரமம், அக்கிரமம்!''

ரஞ்சிதா, அப்பாவின் 'அந்த நாள் ஞாபகத்துக்கு' ஒரு தடை விதிக்கிற மாதிரி. ''உங்கள் காலத்தில் வேலைக்கு இத்தனை போட்டி இருந்ததில்லை. இப்போதெல்லாம் எந்த வேலையானாலும் குறைந்தபட்சம் ஒரு பி.ஏ. டிகிரி தேவையாயிற்றே?''

''மந்திரி வேலைக்குத் தவிர...'' என்றான் விவேக், சந்தடி சாக்கில். ராஜகோபாலன் காதில் அது விழுந்திருக்காது.

''இந்தக் காலத்தில் மாணவர்களுக்குப் பயமும் இல்லே; கடமை உணர்வும் இல்லே. சிரத்தையாகப்




மகன்: ''அப்பா, எனக்கு மேளம் வாங்கிக் குடுப்பா!''

தந்தை: ''முடியாது, வாங்கிக் குடுத்தா எனக்கு ரொம்ப தொந்தரவு கொடுப்பே.''

மகன்: ''கொடுக்க மாட்டேன். நீ தூங்கும் போது மட்டும் அடிக்கி றேன்பா...''

—வி.முருகன்





மானேஜர்: நேற்று பல் டாக்டரைப் பார்க்கணும் என்று லீவு போட்டே... ஆனால் நேற்று மாலை உன்னை 'கால் பந்து' மாட்சில் நான் பார்த்தேனே...

ஆபீஸ் பையன்: ''பல் டாக்டர் தான் சார் 'கோல் கீப்பர்!' ''

—நா. பாலன்.

படித்து, நேர்மையாகப் பரீட்சை எழுதினால் என்ன?''

''ஆனால் சிரத்தையாகப் படித்து, நேர்மையாக எழுதுகிறவர்களுக்கு, அதற் கேற்ற மார்க்கு கிடைப்ப தில்லையே?'' என்றாள் அஞ்சலி. ''பக்கத்துவீட்டு சோமுவுக்கு என்ன ஆயிற்று என்று தெரியாது! 200–க்கு 006 மார்க்கு கொடுத்தது கம்ப்யூட்டர்– அவன் விழுந்து விழுந்து படித்து விட்டு, மாய்ந்து மாய்ந்து பரீட்சை எழுதிய தற்கு நல்ல பரிசு!''

''இந்தப் பரீட்சை களையே ஒழித்துக் கட்ட வேண்டும்!'' என்றாள் ரஞ்சிதா, காட்டமாக. ''மூன்று வருஷங்கள் கல் லூரியில் படித்தால், ஒரு டிகிரியை அவர்களாகவே மனமுவந்து கொடுத்துவிட வேண்டும். எப்படியும் இந்த டிகிரிகளுக்குத்தான் மதிப்பே இல்லையே! யார் பொருட்படுத்துகிறார்கள்?''

''ரொம்ப சரி!'' என்றார் ராஜகோபாலன். ''நான் படிக்கிற நாளில், தேர்வு முடிவுகளை, நம் நம்பர் இருக்கிறதா என்று ஆவ லுடன் பேப்பரில் பார்ப் போம். நம்பர் நம் கண் ணில் பட்டு விட்டால் போதும், குதியும் கும்மாள மும்தான்! இப்போதெல் லாம் ஒரு பி. ஏ. பாஸ் என்பது சர்வசாதாரணம்!''

''பரீட்சைகளையே ஒழிக்க வேண்டும் என்பதில் எனக்கு சம்மதமில்லை!'' என்று அறிவித்தான் விவேக். ''எதானும் வெளிநாட்டு யூனிவர்சிடியில் சேர, இங்கே பரீட்சையில் பாஸ் செய்து தான் தீர வேண்டியிருக் கிறது. நான் டிகிரி வாங்கு கிற போது.....''

''அதற்கு இன்னும் பத்து வருஷங்களாவது ஆகும். அதான் வருஷா வருஷம் பரீட்சைகளை ஒத்திப் போட்டு விடுகிறார்களே...'' என்றாள் ரஞ்சிதா ஏளன மாக.

''தடித் தடியாகப் புத்த கங்களை வைத்துக்கொண்டு, ராத்திரி முழுக்கக் கண் விழித்துப் படிக்கும்இந்தக் குழந்தைகளைப் பார்த்தால் பாவமாயிருக்கிறது எனக்கு!''என்றாள் அஞ்சலி. ''சிலதுகள் இன்னும் மோசம். ஃபெயில் ஆகிவிட் டோம் என்று தற்கொலையே செய்து கொள்ளும். பெரிய கொடுமை... சித்திர வதை!''

மேல் கண்ணாடி வழியாக அவளை முறைத்துப் பார்த் தார் ராஜகோபாலன்.

''குழந்தைகளுக்கு முன் னால் இப்படி எல்லாமாப் பேசுகிறது?''


''நீங்கள் இப்போது பேப் பரில் படித்த செய்தி மட்டும் என்னவாம்? அது மட்டும் அவர்கள் மனசில் விபரீதமான எண்ணங்களை உண்டாக்காதா?''

''சரி... சரி...''என்று பேப்பரை மடித்தார் ராஜ கோபாலன். ''சட்டுப்புட் டென்று உங்கள் சாப் பாட்டை முடித்துவிட்டு, புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு படி யுங்கள். பரீட்சைகள் நாளை ஆரம்பமாகின்றன என்பது நினைவிருக்கட்டும்!''

''விவேக், உன் கட்டில் இருக்கிற கத்தரிக்காய்க் கறியைப் பாக்கி வைக் காதே! உன் நல்லதுக்குத் தான் சொல்லுகிறேன்!''

''அம்மா, பரீட்சை ஹாலில் கண்காணிப்பாள ராக உன்னைத்தான் போட வேண்டும்!'' என்றாள் ரஞ்சிதா குறும்புடன். ''ஏமாற்ற நினைக்கிறவர் களை எளிதில் பிடித்து விடுவாய் நீ!''





மர்ம நாவல்

சுஜாதா

1

பங்களூர் — சென்னை சாலையில் 144வது கிலோமீட்டரில் இரவு 12.30—க்கு அந்த விபத்து நிகழ்ந்தது. எழுபது கிலோ மீட்டர் வேகத்தில் சென்று கொண்டிருந்த பஸ்ஸின் காபினில் திருமால் முருகன் இயேசுநாதர் இன்ன பிற தெய்வங்களின் படத்துக்கருகில் அகர்பத்தியும் மல்லிகையும் மணக்க உள்ளே வீடியோவில் தமிழ்க் கதாநாயகன் ''எப்டி எப்டி?'' என்று கேட்டதற்கு, பதில் சொல்ல இயலாதவாறு பெரும்பாலும் பிரயாணிகள் உறங்கிக் கொண்டிருக்க டிரைவர் ஒரு வளைவில் வேகத்தைக் குறைக்காத போது எதிர்த் திசையில் மோட்டார் சைக்கிள் என்று அவர் நம்பிக் கொண்டிருந்தது ஒற்றைக் கண் லாரியாகச் சட்டென்று பரிணமிக்க அதைத் தவிர்க்க இடதுபுறம் அதிகமாகத் திருப்பிய போது மாட்டுவண்டியைத்தாமதமாகக்கவனித்து ஒரே சரேல் திருப்பம் செய்தும் லாரியின் பின்புறத்தில் நீட்டிக்கொண்டிருந்த டார் ஸ்டீல் கம்பிகள் பஸ்ஸின் வலது புறத்தை இரும்பு விரல்களால் வருடி.

வேகத்தால், இரக்கமில்லாத பௌதிக விதிகளால் பஸ் நிலைகுலைந்து மரத்தை நோக்கி விரைவினும் விரைவாகச் சென்று மரத்தில் பட்டு சரணையில் மனம் மாறி, இரண்டு டயர்கள் தூக்கிக் கொண்டு சாலையில் உலோகம் தேற்றியதில் மத்தாப்புத் தெரித்துக் கவிழ்ந்து உருண்டு...

பஸ்ஸின் விளக்குகள் அணைந்து போவதற்கு முன் வீடியோ ''எப்டி எப்டி?'' என்றது. விபத்தில் பதினைந்து பேர் இறந்துபோனதாகச் செய்தி வந்தது.

2

கணேஷ் கோர்ட்டுக்குப் போகும் அவசரத்தில் இருந்தான். வஸந்த் ஒன்பது மணிக்குக் கேஸ் காகிதங்களுடன் வர வேண்டியவன். பத்து இருபது.

இன்றைக்கு இந்தத் தறுதலைப் பயலைக் கடிந்து கொண்டே ஆக வேண்டும். அநியாயம். சாக்குச் சொல்வதில் உத்தமன். வஸந்த் இன்றைக்கு எதையும், கவனிக்கப் போவதில்லை. இட்டு! டோஸ்! கதவுப் பொத்தான் அழுத்தப்பட கணேஷ் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு கைக்கடிகாரத்தைக் காட்டிக் கொண்டே திறந்து ''ஏண்டா எத்தனை மணிக்கு வரச் சொன்னேன்?'' என்றான்.

''பார்டன் மீ'' என்றாள் அந்தப் பெண்.

''ஓ ஸாரி ஸாரி! வஸந்த், என் ஜுனியர்னு நினைச்சேன். வாங்க, உள்ள வாங்க.''

''நீங்கதானே மிஸ்டர் கணேஷ்?''

''ஆமாம்'' பொறுமையில்லாத கணேஷ் ''இந்தப் பயலை ஒன்பது மணிக்கு வரச் சொன்னேன். மணி எத்தனை ஆகிறது பாருங்க.'' என்று சமாளித்தார்.

''உக்காருங்க'' என்றான் நாற்காலியைச் சுத்தம் பண்ணிவிட்டு. அந்தப் பெண்ணுக்கு வயது இருபத்தி எத்தனை என்று வஸந்த் சொல்லிவிடுவான். கணேஷ் அதில் அவ்வளவு சமர்த்தனில்லை. அவள் முகம் வாடியிருந்ததை உடனே கவனிக்க முடிந்தது. சமீபத்தில் ஒரு தீவிரமான சோகம் அவளை ஆட்கொண்டிருக்க வேண்டும். கலைவாரப்படாமல் புடவை கசங்கி, கண்கள் அழுகதில் உப்பியிருந்ததைப் போல,

''ஆ ஸீ ப் டு பி இன் ட்ரபிள். சமீபத்தில ஏதாவது துக்கமா?''

கேட்டது தப்பாகப் போயிற்று. அவள் படக்கென்று அழ ஆரம்பித்து விட்டாள். கைப்பையிலிருந்து சின்னதாகக் கைக்குட்டை எடுத்து மூக்கைப் பழமாகத் தேய்த்துத்



தேய்த்து அழுதாள். கணேஷுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. ''ஸாரி, ஸாரி என்ன ஆச்சு சொன்னீங்கன்னு...''

''எங்க அண்ணன் இறந்து போயிட்டான்.''

''ஓ, ஐ'ம் எக்ஸ்ட்ரீம்லி ஸாரி'' வேறு என்ன சொல்வது? யாரோ ஒரு பெண் யாரோ ஒரு அண்ணன். மனம் முழுவதும் இன்றைக்கு டெம்பரரி இன்ஜங்ஷன் வியாபித்துக் கொண்டிருந்தது. இந்தப் பயல் வஸந்தைக் காணுக போது, கோர்ட்டுக்கு விஷமாக நேரம் ஏறிக் கொண்டிருக்கும்போது ஆபீஸ் அறையில் நுழைந்த உடன் திடுதிப்பென்று அழும் பெண்ணிடம் வேறு என்ன சொல்ல முடியும்? வஸந்த் மார்போடு சட்டப் புத்தகங்களை அணைத்துக்கொண்டு, ''ஒதுங்கு, ஒதுங்கு'' என்று உள்ளே வந்தான். அந்தப் பெண் சுதாரித்துக் கொள்ளட்டும் என்று ''வா, வஸந்த் ஏன் சீக்கிரம் வந்துட்ட'' என்றான்.

''அ பாஸ்! என்ன ஆச்சு, வரவழியில பஸ்ஸை நிறுத்திட்டாங்களா?...''

''த பார் பொய்யெல்லாம் கோர்ட்டில போய்ச் சொல்லிக்கலாம். கேஸ் பாத்தியா? நான் இன்னும் ஒரு அட்சரம் பார்க்கலே.''

''பாத்தேன் லட்டு மாதிரி இருக்கு ப்ரொவிஷன்! ஆர்டர் 39 ரூல் 1, ஸ்டேட்டஸ் கோ வாங்கிடலாம். இஃப் எனி, ப்ராப்பர்ட்டி இன் டிஸ்ப்யூட் இன் எ ஸூட் சஸ் இன் டேஞ்சர் ஆஃப் பீயிங் வேஸ்டட்.... ஹாய்! இது யாரு?''

வஸந்த் அப்போதுதான் அந்தப் பெண்ணைக் கவனித்தான். ''இது வந்து... உங்க பேர் என்ன சொன்னீங்க...''


''பிரசன்னு'' என்றாள்.

''ஏன் அழறீங்க?''

''ஷி லாஸ்ட் ஹர் பிரதர்.''

''அடடா அதுக்கெல்லாம் அழுவாங்களா? போறவன் போயிட்டான்! நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும் பெருமை உடைத்து இவ்வுலகு. வாங்க, வாங்க கண்ணைத் துடைச்சுக்குங்க. கம், கம், ஒரு ஜோக் சொல்லட்டுமா?''





அவன் இப்போது சமாளித்து ''ஸாரி'' என்றான்.

கணேஷ் கேஸ் காகிதங்களை வாங்கிக் கொண்டு ''பதினொண்ணுக்கு கோர்ட் போகணும். அதுக்குள்ளே படிச்சுடறேன். இவங்களை என்னன்னு விசாரி.'' என்றான்.

வஸந்த் அவனெதிரே உட்கார்ந்து ''ச்.ச்.ச்... கிரிக்கெட் பால் மாதிரி கன்னமெல்லாம் சிவந்து — என்ன ஆச்சு? அண்ணா போனாப் போறான். இப்ப பாஸ் இல்லையா? அவரை அண்ணன்னு நினைச்சுக்குங்க. என் பேரு வஸந்த் ஓங்களை எங்கேயோ பார்த்த ஞாபகமா...'' என்று இழுத்தான்.

கணேஷ் ஃபைலிலிருந்து நிமிர்ந்து. ''வஸந்த்! நாட் நௌ ஸன்'' என்றான்.

''என்ன விஷயம் சொல்லுங்க.''

''பத்து நாளைக்கு முன்னால பங்களூர் ரோடில ஒரு ஆக்ஸிடெண்ட் நடந்தது.''

''ஆக்ஸிடெண்ட் தினம் தான் நடக்குது. விஷயம் என்ன சொல்லுங்க.?''

''எங்க அண்ணன் அந்த விபத்தில செத்துப் போயிட்டான்.''

''இன்ஷூரன்ஸ் காரங்க பணம் தரமாட்டேங்கறாங்களா?''

''இல்லை மிஸ்டர் வஸந்த்..நான் வந்தது மற்றொரு விஷயத்துக்காக.''

''சொல்லுங்க, ஷூட்.''

''மிஸ்டர் வஸந்த் உங்களுக்கு விதியில நம்பிக்கை உண்டா?''

''விதி?''

''ஆமாம்.''

''ஃபேட்? டெஸ்டினி, ஊழ்?''

''ஆமாம்.''

''ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்.''

கணேஷ் ''அய்யோ!'' என்று தலையில் அடித்துக் கொண்டான். ''வஸந்த்! ரெண்டு நாளாத் திருக்குறளை வெச்சுக்கிட்டு உயிரை வாங்கறே.''

''பின்னே என்ன பாஸ் திடுதிப்புன்னு 'விதியில் நம்பிக்கை இருக்கா'ன்னு லேன் மாறினா? நீங்களே சொல்லுங்க எதுக்காக இப்ப திடுதிப்புன்னு ஊழ்?''

''எங்க அண்ணன் செத்தது விதியால தான்னு அப்பா சொல்றாங்க. எனக்கு அதில் நம்பிக்கையில்லை.''

''பஸ்ஸில விபத்தில செத்துப் போனா வழக்கமா விதின்னுதான் சொல்வாங்க. அதான் மரபு.''

''அன்னைக்கு அவன் பங்களூருக்கு எதுக்கு போகணும்னே எனக்குப் புரியலீங்க?''

''எனக்கும் புரியலை. பத்து நிமிஷத்துக்குள் சொல்ல வேண்டியதைச் சொல்லிடுங்க. முக்கியமா நாங்க. அதாவது கணேஷ் வஸந்த்துன்னு இரண்டு வக்கீலுங்க எங்க வராங்க? அதையும் சொல்லிட்டீங்கன்னா உபகாரமாக இருக்கும். இது வரைக்கும் கேஸ் ஏதும் இருக்கிறதா எனக்கு கண்ணுக்குத் தென்படலை. பொதுவா விதின்னுதான்.''

''எங்கப்பா பேரு பாலசந்திரன். மெட்ராஸ் பாக்கர்ஸ் ப்ரொப்ரைட்டர். அந்த விபத்து நடந்த அன்னிக்கு ராத்திரி எங்க அண்ணன் துணிகளுக்கெல்லாம் சோப்புப் போட்டான். சாப்பிட்டான். நானும் அவனும் உக்காந்துக்கிட்டு டி.வி. பாத்துக்கிட்டு இருந்தோம். .ஒடிஸ்ஸி நடனம்...''

''இவ்வளவு விவரம் வேண்டாங்க. மைல்டா வெச்சுக்கிட்டாப் போதும்.''

''இல்லை வஸந்த். இதெல்லாம் எதுக்கு சொல்ல வரேன்னா பங்களூருக்கு அரை மணியில கிளம்பிச் செல்லப் போகிறவன் செய்யற காரியங்களா இது? டி.வி. பாத்துக்கிட்டே. அந்த டான்ஸைக் கேலி பண்ணிக்கிட்டே இருக்கோமா, போன் வரது- அதை எடுத்துக் கேட்டான், சரி வரேன்னு ரெண்டு வார்த்தைதான் சொன்னான். எங்கிட்ட வந்தான். ''பிரசன்னா...''

''பங்களூர் வரைக்கும் அர்ஜெண்டாக் காரியம் இருக்கு. ஒரு நடை போயிட்டு வந்துடறேன்னு சொல்லிட்டுப் போயிட்டு ஆக்ஸிடெண்ட்! ஐ காட்ச் தி பாயிண்ட்! இது விதி கேஸ்தான்.''

அந்தப் பெண் வஸந்த் முடிப்பதற்குக் காத்திருந்துவிட்டு நிதானமாக ''மிஸ்டர் வஸந்த்! அவன் அப்படி ஒண்ணுமே சொல்லலை. 'வெளிய போயிட்டுப் பதினஞ்சு நிமிஷத்தில வரேன். பால் சுடப்பண்ணி

அடுத்த வாரம்:

கேட்பாரற்ற கார்ப்பரேஷன்



அலசல்

வெச்சிருன்னான். செருப்பை மாட்டிக்கிட்டான். கிளம்பினான். அவ்வளவுதான்!''

வஸந்த் சற்று யோசித்தான். ''ஓ அப்படியா பங்களூர்ல யாரு இருக்காங்க.''

''இன்னொரு ஆச்சரியம் பாருங்க. பங்களூர்ல எங்களுக்குத் தெரிஞ்சவங்களோ உறவுக்காரங்களோ யாரும் இல்லே.''

''சொல்லுங்க'' என்றான் வஸந்த் டெலிபோன் டைரக்டரியைப் புரட்டிக்கொண்டே.

''பொட்டி, துணி ஏதாவது எடுத்துக்கிட்டானா? இல்லே! போன் வந்தது. செருப்பை மாட்டிக்கிட்டான். இதோ வரேன்னு...''

''சொல்லிட்டுமங்க பானு கடப்பண்ணி எட்செட்ரா...''

''ராத்திரி முழுக்க எங்க போனான், எங்க போனான்னு மண்டையை உடைச்சிக்கிட்டு இருக்கோம். அப்பா தூங்கவே இல்லே. காலைல டெலிபோன் வருது. அந்த பஸ் கம்பெனி என்னவோ ட்ராவல்ஸ்! அவங்க கிட்டருந்து தாமோதரன்னு ஒருத்தர் உங்க வீட்டில இருந்தாரா...?''

'' 'இருந்தாராவது'ன்னு திகைச்சுப் போயி...''

''புரியுது.''

''அலறி அடிச்சுக்கிட்டு அங்க காரை எடுத்துக்கிட்டுப் போனோம்! வஸந்த்! வாழ்நாளில மறக்க முடியாத காட்சி! சின்ன லோக்கல் பண்டோ, என்னவோ ஆஸ்பத்திரி அதில வராந்தாவில பதினஞ்சுபாடி! அதில அண்ணா! அதே சட்டை, அதே பாண்ட்டு! மண்டையில புறப்பட்டு ஒரே ஒரு ரத்தக்கோடு முகத்தில....''

''ஓ நோ!''

''எங்களுக்கு எப்படியிருக்கும் சொல்லுங்க.''

''ச், ச், ச்ச். வெரி அன்ஃபார்ச்சுனேட். ஆனா ஒரு சந்தேகம்...''

''உங்க கிட்டே எதுக்கு வந்தேன்னு கேக்கறீங்க!''

''க்ளெவர்! நாங்க ரெண்டு பேரும் வக்கீல்.

''பஸ் கம்பெனி மேல கேஸ் போடணும்னா போடலாம்.

''உங்க அண்ணா சம்பாதிச்சுக்கிட்டு குடும்பத்தைக் காப்பாத்திட்டு இருந்தாரா?''

''எங்களுக்கு கடவுள் புண்ணியத்தில் சொத்தெல்லாம் இருக்குது. கேஸ் ஏதும் போட வேண்டாம்.''

''பின்னே?'' என்றான் மலைப்புடன்.


''அவன் எதுக்காக பங்களூர் போனான்? அவனைக் கூப்பிட்டது யாரு? அந்த போன் கால் என்ன?''

''கண்டுபிடிக்கணுமா?''

''ஏன்? பங்களூர்ல என்ன? அங்க யாரையும் தெரியாது! எந்தவிதமான தொடர்பும் இல்லாத நகரத்துக்குக் திடீர்னு பஸ் பிடித்துப் போகக் காரணம் என்ன? விதி அவனைக் கூப்பிட்டதா?. எந்த விதி? என்ன விதி? இதை நான் தெரிஞ்சுக்க விரும்பறேன். இதுக்கு என்ன செலவானாலும் சரி.''

''இதைத் தெரிஞ்சுக்கறதால உங்களுக்கு''

''ஏதும் லாபமில்லே. ஒப்புத்துக்கறேன்! இருந்தாலும் அவன் போனதுக்கப்புறம் சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம்



பயந்து சாகறேன்! வீட்டிலேருந்து வெளியே கிளம்பறதுக்கு. லேட்டாச்சுன்னா எனக்கு ஏதோ விபத்து நிகழப் போகிறது அதனால தான் விதி இப்படி லேட் பண்றது. சாலையில் இடதுபக்கமாக நடந்தால் என் விதி அந்த பஸ் டயர் பங்க்ச்சர் ஆகி என் மேலே வந்து மோதப் போறது! வலது பக்கம் போகலாம்.. வலது பக்கத்தில் எலக்ட்ரிக் ஒயர் விழுந்தா? இயல்பா நடக்கிற எதிலயும் நம்பிக்கை போய் எல்லாத்திலயும் பயம் வந்துடறது. ஸ்விட்சைப் போடறப்ப மாடிப்படி இறங்கறப்ப விதி! மரணம் நம்மைச் சுத்தி எங்கப் பாத்தாலும் இருக்குது. சந்தர்ப்பங்களை வெச்சுக்கிட்டு. காத்துக்கிட்டு! இப்ப கூட உங்களைப் பார்த்ததும் ஒரு மாதிரி பயம் வந்துது... இந்த ஆள்...''




''ஓ மை காட்! நான் ரொம்ப சாதுங்க! ஒரு பூச்சியை உபத்திரவம் பண்ண மாட்டேன்.''

''இல்லைங்க. என்னுடைய மெண்டல் அகனி அவஸ்தையை உங்களுக்குச் சொல்ல...''

''அவஸ்தைப் படறீங்க தெரியுது. அதாவது நாங்க வந்து உங்க அண்ணன் எதுக்காக பங்களூர் போகத் தீர்மானிச்சார்ன்னு கண்டுபிடிக்கணும்?''

''நீங்க என்ன நினைக்கறீங்க? அவனுடைய விதி அவனைச் செலுத்தியதா?''

''இப்ப ஒண்ணும் சொல்றத்துக்கில்லைங்க. என்னைப் பொறுத்தவரையிலே விதியை அப்பப்ப சந்திச்சு 'ஹலோ'ன்னிருக்கேன். அத்தனை பழக்கம் இல்லே. அதுபாட்டுக்கு அந்தப் பக்கம் நான் இந்தப்பக்கம் சைடு வாங்கிடுவேன். உங்க கேஸ் இண்ட்ரஸ்டிங்காத்தான் இருக்குது. எதுக்கும் கணேஷ் கிட்டப் பேசிட்டு உங்களுக்குப் போன்



பண்றேன். ஜெவல் ஃபோர் டபிள் த்ரீ ஜெவன் தானே?''

அவன் சற்று ஆச்சரியப்பட்டு ''எப்படிங்க தெரியும்'' என்றான்.

''உங்க விதி! ஊழ் உங்க நம்பர் 74337–ன்னு இறைவனே படைச்சிருக் கானே.''

''விளையாடாதீங்க. பயமா இருக்குது.''

''பயப்படாதீங்க. நீங்க பேசிக்கிட்டு இருக்கிறப்ப டைரக்டரியில உங்கப்பாப் பேரைப் பார்த்தேன். எதுக்கும் உங்க அண்ணன் பேரு மற்ற விவரங்கள் எல்லாம் குறிச்சுக் கொடுங்க. ஒரு வாரத்துக்குள்ள தகவல் சொல்றேன். ஆறு?''

''ஆறு?''

''என்ன தகவல் கிடைச்சாலும் பரவா யில்லையா?''

''பரவாயில்லீங்க.''

''சில சமயம் உண்மையைத் தேடறது அவ்வளவு நல்லதில்லே. உண்மை உறங்கினு பல பேருக்கு சொன்னதும். அதுக்குப் பதிலா

கவிஞருக்குக் கைநிறையக் காசு!

அண்மையில் கவிஞர், சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர், நல்லமனிதர் மஹரி அவர்களின் மணிவிழா ஆரவார மில்லாமல் நடைபெற்றது.

அந்தக் காலத்தில் பத்திரிகைகளுக்குக் கதை எழுதத் தொடங்கிய போது மஹரியின் பாட்டி சொல்வாராம். ''கதை எழுதினால் கைநிறையக் காசு வராதுடா... வேறே ஏதாவது செய்யேன்...''

ஆனால் மஹரியின் முதல் கதைக்கே கைநிறையக் காசு வந்தது! கதையை வெளியிட்ட 'தினசரி மடல்' என்னும் பத்திரிகை, சன்மானத் தொகையை உள்ளூர் ஏஜெண்டிடம் பெற்றுக் கொள்ளச் சொல்லி கடிதம் எழுதியது. பெட்டிக் கடைக்காரர் தான் பத்திரிகை ஏஜெண்ட். பத்து ரூபாய் சன்மானத் தொகை அவ்வளவையும் காலணாக் காசுகளாகவே அள்ளித் தந்தாராம் அவர். அப்படியே 'பணத்தை மூட்டையாய்க் கட்டிக் கொண்டு போய்ப்' பாட்டியிடம் கொடுத்தாராம் மஹரி.

–சுப்ர.பாலன்.



ஒரு ஜெர்மன் படம் பார்க்கலாம். ஃபால்கன் பைண்டர்னு ஃபிலிம் சொஸைட்டியில பாஸ் இருக்குது...''

''தாங்கஸ் ஐ'ம் நாட் இன் எ மூட். இதுக்கு எத்தனை செலவானாலும் சரி...''

''எங்க கிட்ட வந்துட்டீங்கல்ல. ஒழிச்சுக் கட்டிடறோம் கவலைப்படாதீங்க.''

''தாங்க்ஸ்.'' ஒரு காகிதத்தில் விவரங் களைக் குறிக்கும் போது வஸந்த் அவனை கவனித்தான். தலைமயிரைச் சரி பண்ணிக் கொண்டு மடிமேல் நோட்டுப் புத்தகத்தை வைத்துக் கொண்டு அழகான கையெழுத் தில் எழுதிக் கொண்டிருந்தவனை.

''கையெழுத்தைப் பார்த்தா அதிகம் செல வாளின்னு தெரியுது'' என்றான் வஸந்த்.

''அப்படியா?'' என்று நிமிர்ந்து அவ னிடம் காகிதத்தைக் கொடுத்து ''எப்ப போன் பண்ணட்டும்?'' என்றான்.

''நானே போன் பண்றேன்'' என்றான். ''ஸாரி! கீழே விழுந்திருச்சு'' என்றான்.

அவன் பேனாவை எடுத்துக் கொடுத்து விட்டு ''குட்பை'' என்று சென்றான்.

''எதுக்கு பாஸ் சிரிக்கறீங்க.''

''நீயும் ட்ரை பண்ணிப் பார்த்தேடா. கையெழுத்து நல்லாருக்கேன்னே. பேனாவைக் கீழே போட்டேட!''

''ம்! பேரலே! ரொம்ப துக்கம் போலிருக்கு. துக்கம், வெக்கம் அறி யாதும்பாங்க. இந்தப் பொண்ணு மேல்புடவையை இழுத்துக் கட்டிக்கிட்டுன்னு பேனாவைப் பொறுக்குது!''

''ஏன்டா இப்படி அலையறே!''

''இந்தப் பொண்ணு. துக்கம் எல்லாம் மறைஞ்ச பிற்பாடு கொஞ்சம் அழகாகவே இருக்கும்னு தோணிச்சு. கேஸைக் கேட்டீங் களோ?''

''ஏதோ கொஞ்சம் கொஞ்சம். என்ன வாம்?''

''விதி உண்டடா, இல்லையா அதான் கொஸ்சின்! இந்தப் பொண்ணோட அண் ணன் டி. வி. பார்த்துக்கிட்டு இருந்தானாம். பொடி நடையா ஒரு தம் அடிச்சுட்டு வரேன்னு கிளம்பிப் போனான். அப்புறம் ஆளு 'காணோம்'. மறுநாள் பார்த்தா பேப் பர்ல பேரு! பங்களூர் பஸ்ஸில ஆக்ஸி டெண்ட்டில அய்யா லிஸ்ட்டில இருக் கார்! என்கிறது பொண்ணு!''

''பங்களூர்ல யாராம்?''

''யாரும் கிடையாதாம்! துணி மணி, பொட்டி, படுக்கை கிடையாது. ஒரு போன் கால்! புறப்படு! அப்புறம் காலே பஸ் கம்பெனியிலிருந்து போன் கால்! எப்படி இருக்கு!''

''இன்டரஸ்டிங்!''

''ஏம் போனான்? விதியா! பாஸ் உங்க ளுக்கு விதியில் பேரில் நம்பிக்கை உண்டா?''

''உண்டு.''

''இஸ் இட்.''

''நான் சொல்றது விஞ்ஞானத்தின் விதி! மொத்தம் நாலே நாலு விதிகள்தான் பிரபஞ்சத்தில் உண்டு. க்ராவிடேஷன். ரேடியேஷன் வீக் அண்ட் ஸ்ட்ராங் நியூக் ளியர் ஃபோர்ஸஸ்.''

''சரித்தான் கேள்வி பதில்லாம் நிறையப் படிக்கறீங்க போல...''

''இல்லே! காரீ ஜூங்காஸ்.''

''அது என்ன காவோ''. நான் படிக்கிறது என்னவோ 'டூ வர்ஜின்ஸ்'. இப்ப நாம ரெண்டு பேருமே இரண்டு வர்ஜின்ஸ்தான் இல்லையா?''

''நீயா வர்ஜின்? ஏண்டா டேய் நீபார்க்காத கேஸாடா! இப்ப நீ பெங்களூர்ல பஸ்ல திடுதிப்புன்னு புறப்பட்டுப்போனேனு நான் கேள்வியே கேக்க மாட்டேன். ஊருக்கு ஊர் கேர்ள் ஃப்ரண்ட். அவ பேரு என்ன இராங்காரன் கேஸ்ல வந்தாளே?''

''அதை விடுங்க பாஸ். கல்யாணம் ஆயி கர்ப்பமாயி பும்சவனம் கூட ஆயிருச்சு. இப்ப இந்த கேஸை எடுக்கலாங்கறீங்களா? ஒரு மூணு மணி நேரம் மூக்கினு விஷயம் வெளிய வந்துரும்!''

''இப்ப இல்லே! இப்ப இன்ஜங்ஷன். ப்ரைமாஃபேஸி கேஸ் இருக்கு. நம்ப பார்ட்டிக்கு சக்ஸஸ் ஆறதுக்கு சான்ஸ் இருக்கு. போட்டுட வேண்டியதுதான் மூணு நாளைக்குப் பேசப்படாது...!''

3

''மிஸ்டர் கணேஷ். எதுக்காக இந்த இன்ஜங்ஷன்.?''

''யுவர் ஆனர் கேஸ் நடந்து கொண்டிருக்கும் போது ப்ராபர்ட்டியை விக்கறதுக்கு முயற்சி பண்றாங்கன்னு என் கட்சிக்காரர் பயப்படறதால...''

''பட் தட்ஸ் என் அஃபென்ஸ். அதுக்கு ஆதாரம் இருக்கா?''

''ப்ரிஸைஸ்லி யுவர் ஆனர் நாங்க சேக்கறது ஸ்டேட்டஸ் கோ. இதுக்கு உங்களுக்கு ஜூடிஷியல் டிஸ்க்ரிஷன் இருக்குங்கறதை முழுதும் உணர்ந்து தான் கேக்கறேன். அஃபிடவிட் வெச்சு நிரூபிக்கிறோம். டிஃபெண்டண்ட் ப்ராப்பர்ட்டியை டிஸ்போஸ் பண்ண முயற்சி செய்துக்கிட்டு இருக்கார்ங்கறதை.''

''யூ வாண்ட் எ டெம்பரரி இன்ஜங்ஷன்?''

''எஸ் யுவர் ஆனர். நாலு கண்டிஷனும் ஒத்து வருது.''

''பட் தட்ஸ் எ ஃபெய்ட் அக்காம்பிளி!''


''எப்படிச் சொல்றீங்க யுவர் ஆனர்?''

''கேஸ் உங்க பக்கம் ஜெயிக்கப்போறதுன்னு எப்படி நீங்க அஸ்யூம் பண்ணிக்கலாம்?''

''ரீஸனபிள் ப்ராபபிலிட்டி யுவர் ஆனர்!'' என்றான் கணேஷ், பிரதிவாதி வக்கீல் அவனைப் பார்த்து முறைப்பதைக் கவனிக்காமல்.

கோர்ட் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு. ''க்ராண்டட்'' என்றதும் கணேஷ் சற்று உற்சாகத்துடன் வெளியே வந்தான். ''கணேசா குட்டையைக் குழப்பிட்ட. உங் காட்டுல மழை!'' என்றார் ஈச்சு.

''பாஸ்! கைகுடுங்க! கிடைக்காதுன்னு நினைச்சேன். இதுல பாத்தீங்களா மறைமுகமா கேஸ் நமக்கு ஜெயிக்கப்போறதுன்னு கோர்ட்டு ஒப்புத்துக்கிட்டாப்பல ஆயிருச்சு.''



''அதை நான் அதிகமா விரட்டலே! விரட்டக் கூடாது. ஈஸ்வரமாமாதான் கொஞ்சம் கஸ்தாயிட்டார்.''

''ஜெயிச்சாச்சு.''

''சொல்ல முடியாது. அப்பீல் இருக்கலாம். இப்போதைக்கு வெற்றி.''

''வாங்க விழுப்புண்களை நக்கிக்கிட்டே காப்பி சாப்பிடலாம். மத்தியானம் காதர் பாய் கேஸ்.

''வேணுகோபால் அப்பியர் ஆறாரு. நமக்கு எதிரா.''

''லெவலேயில் ரொம்ப பெரிய வக்கீல் எதிரியா இருக்கிறது நமக்குச் சாதகம்!''

இருவரும் கோர்ட்டு கட்டிடத்தை விட்டு வெளியே வந்தபோது வானத்தில் யாரோ முரசடிக்கப் பழகிக் கொள்வதைப் போல இடிடித்தது.

''த பார்ரு ஏப்ரல்ல மழையா?''

கணேஷ் காப்பியை உறிஞ்சிக் கொண்டே சிந்தித்தான்.

''என்ன பாஸ் யோசிக்கறீங்க?''

''ப்ளெயின்டிஃப் டிஃபெண்டண்ட்டுன்னு ஏதோ ஒரு மூலைல யாரோ ஒருத்தன் துண்டு நிலத்தை விக்கறதை இன்னும் எத்தனைவருஷத்துக்கு இதே கோர்ட்டில குப்பைக் கொட்டப் போறேமோன்னு மலைப்பா இருக்கு வஸந்த். அவனவன் ஸ்பேஸ்ல போயிண்டிருக்கான்.''

''ஏதோ நம்ம விதி அப்படி?''

''மறுபடி விதி?''

''ரஷ்யாக்காரனுனு எதையும் பத்திக் கவலைப்படாம ராக்கேஷ்சர்மாவை அழைச்சுக்கிட்டு 6.38—க்கு ப்ளாஸ்ட்டுன்னான். 6.38—க்கு ராக்கெட் கிளம்புது. பத்து செகண்டில கைதட்டி ஹைகுலுக்கியாச்சு. ஸ்பேஸ்ல போயாச்சு! அவர்களுக்கெல்லாம் விதி உண்டா?''

''அவன் விதி டயலெக்டிக்கலிலயும் மார்க்ஸிலயும் இருக்குது. ஏதாவது ஒரு விதி! பாஸ் ராகேஷ் சர்மா ஸ்பேஸ்ல போனுனே நம்ம ஈஸ்வர மாமா என்ன கேட்டுது தெரியுமோ? ஏண்டா அவன் கொல்லைப்பக்கம் போகணும்னு என்னடா பண்ணுவான்னு! எப்டி இருக்கு?''

''அவருக்கு ஒருவேளை கான்ஸ்டிப்பேஷனு இருக்கும்.''

''அய்யோ பிரம்ம சௌச்சம்! நான் சொன்னேன். சுவாமி அதைக் கூட ரஷ்யாக்காரன் மைக்ரோவேவ்ல அனுப்பிச்சு கஜாக்கிஸ்தான்ல டிஸ்போஸ் பண்ணிடுவான்னேன்! நம்பறது!''


அவர்கள் கிளம்புகையில் மழைத்துளிகள் ஒத்துழைத்து காரில் நுழைவதற்குள் உல்வாசமாக நனைந்து விட்டார்கள்.

''காலேல பார்த்தமே அந்த கேஸு'' என்றான் வஸந்த். ''பஸ் விபத்து!''

''ஏன் என்ன இப்ப அதைப்பத்தி?''

''கொஞ்சம் விசாரிக்கட்டுமா?''

''என்ன இமர்ன்னு இன்ட்ரஸ்டு. நான் அந்த பொண்ணைச் சரியாப் பார்க்கலே!



ஆமா என்னது திடீர்னு இருக்குறன்னைப் புகுந்துட்ட?''

''அது வந்து நம்ம சீதாராம் இல்லே, அவனுக்கு ஒரு கஸின் இருக்கா, குறள்ள விளையாடுது. அதுக்காக அங்கங்க ஒண்ணு ரெண்டு குறள் ஹி, ஹி...''

''காமத்துப்பால் வந்துட்டியா?''

''இல்லே. இன்னும் 'வரைவின் மகளிரை' விட்டே வரலே!''

''உருப்பட மாட்டே''

அந்தப் பெண் கொடுத்த குறிப்புக்களைப் பார்த்தான்.

''ஜமுனா டூரிஸ்ட்! என்னவெல்லாம் பேரு?''

''என்ன?''

''அந்த அண்ணன் போன பஸ் கம்பெனி பேரு. பாஸ் இதெல்லாம் மூர்மார்க்கெட் தாண்டினப்புறம் இருக்கும். மத்தியானத்துக்குள்ள விசாரிக்கலாமே!''

''த பாரு. இந்த விசாரிப்பு அவ்வளவு முக்கியமில்லே!''

''ஆமாமாம். முக்கியமில்லேதான். சின்னதா ஒரு பக்கம் ரிப்போர்ட் கொடுத்துட்டு கட்டி!''

''ரெண்டு நாள் கழிச்சுக் கூடப் பார்த்துக்கலாம்.''

''இப்ப கொஞ்சம் டயம் இருக்கேன்னு முடிச்சுரலாம்னு பார்த்தேன்.''

''ஒழி எங்க போகணும்?''

''சொன்னேனே மூர்மார்க்கெட்!''

கணேஷ் சென்ட்ரல் வந்து மூரைத் தாண்டி போலீஸ்காரனைத் தாண்டி சந்துசந்தாக இளைப்பாறிக் கொண்டிருக்க வீடியோ கோச் பிரதேசத்தில் நிறுத்தினான். ''போய்க் கேளு.''

வஸந்த் இறங்கி ஜனதா டூரிஸ்ட்டில் ஜமுனாவை விசாரித்தான். அங்கிருந்துபத்தடி தானும். பத்துக்கு எட்டு அறையில் டயல் பூட்டப்பட்ட டெலிபோன். காலண்டரில் ரேகா. அதனருகில் மேசை. மேசையருகில் கொட்டை கொட்டை எழுத்தில் போர்டு. நாகப்பட்டினம் திருநெல்வேலி மதுரை. சேலம். பங்களூரெல்லாம் தினசரி உல்லாசப் பயணமாம். சாமி படம். வீடியோ சகிதமாய் பஸ் படம். ஓரிரண்டு டயர்கள். தட்டு வேஷ்டியில் புக்கிங் கிளார்க். திரைச்சுவை. வண்ணத்திரை. சினிமிக்ஸ், ஜெமினி சினிமா. பொம்மை...

''என்னங்க திண்ணவேலியா மதுரையா?''

''இல்லேங்க மெட்ராஸ்தாங்க.''

''லோக்கல் ட்ரிப்பா! அது இங்கிருந்து இன்னும் ஆறு கடை தள்ளிப்போனீங்கன்னு ஜமால்னு...''

''இருங்க, இருங்க. உங்க பேர் என்ன?''

''சீனிவாச வரதன். சொல்லுங்க.''

''பத்து நாளைக்கு முன்னடி உங்க பஸ் ஒண்ணு ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சே பங்களூர் பாதையிலே.''

உடனே சீனிவாச வரதன் உஷாராகி, ''நீங்க போலீஸா?'' என்றான்.

அருள்வாக்கு

நவரஸங்களை ஈசுவரபரமாகச் சேர்த்து தர்மத்தோடு சேர்த்து ராமாயணம் மஹாபாரதம் புராணங்களையும் மஹான்களுடைய சரித்திரங்களையும் நாடகமாகப் போட்டால் அதற்கு மனஸிலே புகுந்து வேலை செய்யும் சக்தி அதிகம். 'ஸோஷல் தீம்' அது இது என்று கெட்டதற்கு நாடகக் கலையைப் பிரயோசனப்படுத்துவது நம் தப்புத்தான். காந்தி சொல்லியிருக்கிறார். 'ச்ரவண பித்ரு பக்தி நாடகம்' என்று சின்ன வயசில் அவர் பார்த்த டிராமா அவர் மனஸில் ஆழப் பதிந்து விட்டதாம். பித்ரு பக்தி பற்றி எத்தனை வியாஸம் படித்தாலும் உபதேசம் கேட்டாலும் இப்படி ஜீவனுள்ள பாத்திரங்கள் அதை நடித்துக் காட்டுவதில் ஏற்படுகிற மாதிரி deep impression உண்டாக்க முடியுமா?

பாரதக் கதை சொல்லுவதையும் பாரதக் கூத்தாடுவதையும்தான் பொது ஜனங்களின் தர்மா விருத்திக்கான மிகப் பெரிய பணியாகப் பழைய கால ராஜாக்கள் கருதி அதற்கு சகல வசதிகளும், மான்யங்களும் கொடுத்துப் பேணியிருக்கிறார்கள். பல்வேறு இடங்களை பல நூற்றாண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுக்களைப் பார்த்தாலே தெரியும். காதால் கானத்தோடு கேட்கிறதற்குப் பேச்சையும் எழுத்தையும் விட அதிக சக்தி உண்டு. இதைவிடவும் 'visual art' என்பதாகக் கண்ணாலும் பார்ப்பதற்கு இன்னும் ஜாஸ்தி சக்தி இருக்கிறது. பேச்சு, பாட்டு ஆகியவற்றோடு சேர்ந்த நாடகம் பாட்டோடு மட்டும் சேர்ந்த நாட்டியம் ஆகிய இரண்டு காட்சிக் கலைகளுக்கு இப்படி விசேஷமான சக்தி இருக்கிறது.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகள்



''இல்லே. பயப்படாதிங்க. அந்த பஸ்ல பிரயாணம் பண்ண ஒரு ஆசாமியைப்பத்தி கேக்க வந்தேன்.''

''அதெல்லாம் அப்பவே லிஸ்ட் போட்டு மாலைமுரசில கூட வந்திருந்ததே அட்ரஸோட.''

டெலிபோன் அடிக்க அதை அவன் எடுத்துக் கேட்டுவிட்டு ''மூணு – நாலு புக்காயிருச்சே. டயர் மேல இல்லாமதானே! ஒம்பது பத்து கொடுக்கறேனே... பேர்சொல்லுங்க...''

வஸந்த் சுற்றிலும் பார்த்தான். அவன் எழுதுவதைப் பார்த்தான். அவன் டெலிபோனை வைத்துவிட்டு ''இப்ப புக்கிங் டயம். அப்புறம் வாங்க. ஏதாவது வேணும்னு முதலாளி கிட்ட கேட்டுக்கங்க. அவர்தான் ஆக்ஸிடெண்ட் விவரம் முழுக்க பார்த்துக்கிட்டார்'' என்றான்.

''இந்தாங்க காம்ப்ளிமெண்ட் எங்க கம்பெனிது!''

வஸந்த் கொடுத்த பால்பாயிண்ட்டைப் பார்த்ததும் கொஞ்சம் தயங்கினான். ''பச்சை சேப்பு, கருப்பு மூணும் எழுதும். ரீஃபில்கூட இருக்குது. உங்களுக்கு ட்ரிப் ஷீட் எழுத சௌகரியமா இருக்கும்.''

''என்ன கம்பெனி சொன்னீங்க?''

''வஸந்த் சினிமா பத்திரிகைகளை ஒரு முறை பார்த்து. ''சுஜாதாதான்! நம்ம பாலாஜி சார் கிட்டத்தான். ஃபிலிம் கம்பெனி!''

''உக்காருங்க. டேய் அந்த ஸ்டூலே எடுத்துப் போடுங்க. என்ன சாப்பிடறீங்க?''

''பாதாம் மில்க்! நான் பே பண்றதா இருந்தா.''

''டேய், போய் ரெண்டு பாதாம் பால் கொண்டுவா.''

''அப்படியே ஒரு பாக்கெட் வில்ஸ்'' என்று வஸந்த் பத்து ரூபா நோட்டை உருவிக் கொடுக்க, ''சொல்லுங்க என்ன கேட்கறீங்க.''

''ரொம்பப் பிஸியா இருக்கீங்க. அதிகமா உங்க நேரத்தை எடுத்துக்க விரும்பலே. அன்னைக்கு விபத்து நடந்த பஸ் புறப்பட்ட போது நீங்கதான் ட்யூட்டில இருந்தீங்களா?''

''நான்தான்! என்னை விட்டா வேற யாரு? ராப்பகலா நான்தான்!''

''அதில போன ஒரு ஆளு பேரு தாமோதரன். எனக்குத் தெரிஞ்சவர். அவர் ஏதுக்காகப் பங்களூருக்குப் போனார்னு கண்டுபிடிக்க முயற்சி செய்துக்கிட்டு இருக்கேன். உங்களால ஏதாவது தகவல் சொல்ல முடிஞ்சதுன்னு நல்லது.''


''என்ன வேணும் சொல்லுங்க.''

''கடைசி சமயத்தில யாராவது அர்ஜெண்டா டிக்கெட் வாங்கிட்டு ஏறினாங்களா?''

''இனப்படி எல்லா ரூட்லயும் உண்டுங்க இது.எப்படியோ அட்ஜஸ்ட் பண்ணிக்கொடுப்போம். வேளாங்கண்ணி கிருத்திகைன்னு வர்றப்ப ஸ்டாண்டிங் கூட உண்டு!''

''பங்களூர் ரூட் எப்படி?''

''பங்களூர் போட்டி ஆயிருச்சுங்க. மொத்தம் ராத்திரி ஆல் இண்டியா பர்



மிட்டே இருபத்தி நாலு பஸ் ஓடுது. பாலாஜி, சீனு, ஜெனரல் ட்ராவல்ஸ், கேடி, என்டின்னு போட்டி ஜாஸ்தியாப் போச்சு.''

''நீங்க எவ்வளவு பஸ் விடறீங்க?''

''எங்களுது ஒண்ணுதான் போவுது. சித்தூர் வழியாப் போறதில்லே. மூணு ஸ்டேட் ஆயிடுது பாருங்க! நாங்கசௌத்தில தான் நிறைய.''

''அந்தாளு கடைசியில வந்து டிக்கெட் அவசரப்படுத்தி வாங்கினு உங்களுக்கு ஞாபகம் இருக்குமா?''

''சொல்ல முடியாதுங்க. அதான் சொன்னேனே!''

''ஆளு கடைசில வந்து டிக்கெட் வாங்கி ஏறினார்னு லிஸ்ட்டிலே பேர் கடைசில இருக்கும்.

''லிஸ்ட்டு இருக்கா?''


''ஆக்ஸிடெண்ட் ஆன அன்னைக்கு லிஸ்ட் முதலாளிகிட்ட இருக்குது. அவர்தான் பாவம் ராவோட ராவா கார் எடுத்துக் கிட்டுப் போயி. அது என்ன ஆச்சுங்க. பஸ்



நீதிபதி: ''இவர் குற்றவாளி என்று நிரூபிக்கப் பட்டிருப்பதால் இவருக்கு ஐந்து மாத கடுங்காவல் தண்டனை அல்லது பத்து டி. வி. நாடகம் பார்க்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கிறேன்.''

குற்றவாளி: ''நான் ஜெயிலுக்கே போயிடறேங்க.''

—சௌம்யா,



லாரி பின் பாகத்தில் இடிச்சிருக்கான். அதை அவாய்ட் பண்றதுக்குத் திருப்பியிருக்கான் பாருங்க. பாலன்ஸ் விட்டுட்டான். கதிர்வேல் ரொம்ப எக்ஸ்பீரியன்ஸ் டிரைவர். இதில சோகம் பாருங்க. பஸ் வந்து பாதையை விட்டு பத்து இருபது, முப்பது அடி விலகி, வயல்ல விழுந்திருக்கு. எல்லாரும் கிடக்கிறாங்க. ஆறு லாரி போயிருக்குது. ஒருத்தன் கவனிக்கலே. நடுராத்திரியா? நிறுத்தறதுக்கு ஆள் இல்லே. எல்லோருக்கும் அடி. அப்புறம் சுமாரா காயம்பட்ட ஒருத்தர் பக்கத்து கிராமத்துக்குப் போயி அவுட்போஸ்ட்ல சொல்லி அவங்க எங்களுக்கு போன் பண்றப்ப மணி ஒரு மணி இருக்கும்! முதலாளி போய்ச் சேர்றதுக்கு நாலு, நாலரை ஆயிருச்சு. அப்புறம்தான்...''

''கதிர்வேல் என்ன ஆனார்?''

''அங்கேயே க்ளோஸ்!''

வஸந்த் யோசித்தான். அப்ப கடைசி நிமிஷத்துல யாரும் சீட் கேட்டிருக்கலாம். உங்களுக்கு ஞாபகமில்லேங்களா நீங்க.''

''ஆமாம். என்னவோ காரணம் சொல்லுவாங்க. கல்யாணம்பாங்க. இண்டர்வ்யூம்பாங்க. அட்ஜஸ்ட் பண்ணவேண்டியது தான்.''

''தாமோதரங்கற பேர ஞாபகம் இருக்குங்களா?''

''லிஸ்ட்டிலப் பார்த்த மாதிரித்தான் இருக்குது. முதலாளியைக் கேட்டாத் தெரியும்.''

''நீங்க போயிருந்திங்களா விபத்து நடந்த இடத்துக்கு?''

''இல்லேங்க, நான் எங்க? ஆபீஸை விட்டுட்டு! காலேல பஸ்ஸுங்க ஜகஜகன்னு வரும். ரீசிவ் பண்ணனும். ஆக்ஸிடெண்ட் ஆனாலும் மத்தது நடக்கணும் பாருங்க. முதலாளிக்குத்தான் பாவம், நஷ்டம்! மூணரை ரூபாக்கு மேல தர்ட்டி பார்ட்டி ரிஸ்க் மேல செலவழிச்சிருந்தார்.

மகனுடைய திருமணத்தின் போது பெற்றோர் கலந்து கொள்ளக்கூடாது என்பது ஜப்பானில் நிலவி வரும் ஒரு விசித்திரப் பழக்கம். எனவே ஜப்பானிய மன்னர் 'ஹிரோஹிட்டோ' தம் மகன் 'யோஷியின்' திருமணத்தை டி. வி. யில் கண்டு களித்தாராம்.

—ஜா. ரவி.



வண்டி அப்டி பஞ்ச கல்யாணி மாதிரி இருந்தது!.''

''இன்ஷ்யூர் பண்ணலியா?''

''அண்டர் இன்ஷ்யூர்! யார்கிட்டயும் சொல்லாதீங்க!''

''தாங்க்ஸ் வரதன். உங்க முதலாளி அட்ரஸ் மட்டும் சொல்லிட்டீங்கன்னு...''

''இந்தாங்க கார்டு. எனக்கு ஒரு ஒத்தாசை செய்யணும் நீங்க.''

''படம் ஷூட்டிங் பார்க்கணும் அவ்வளவுதானே?''

''ஆமாங்க.''

''எப்ப வர்றீங்க?''

''இதுக்குன்னு லீவு எடுத்துண்டுவரேன். எப்ப வரணும் சொல்லுங்க.''

''பாலாஜி டைார் வீடு தெரியுமில்லே?''

''தெரியும் எக்மோர்ல. ''பிரபலமானவர்களின் விலாசங்கள்ள பார்த்தேன்.''

''ஞாயிற்றுக்கிழமை வந்துடுங்க, வஸந்துன்னு சொல்லுங்க போதும்! கே ஜே ஆஸ்பத்திரியில ஷூட்டிங் அழைச்சுட்டுப்போவாங்க.''

''ரொம்ப தாங்க்ஸ்'' வரதன் சோழி சோழியாக வஸந்தைப் பார்த்துப் பரவசமாகச் சிரித்தான்.

காரில் கணேஷ் ''ஏண்டா இத்தனை நேரம்'' என்றான்.

''ஆசாமி முதலில் கொஞ்சம் முரண்டு பண்ணினான். பாலாஜி வாழ்க! கேக்கவேண்டியதை எல்லாம் கேட்டாச்சு.''

''பஸ்ஸு எத்தனை மணிக்குக் கிளம்பித்தாம் அன்னைக்கு!''

வஸந்த் திடுக்கிட்டான்.

''பாஸ் யூ ஆர் எ இல் ஜாய்! நான் கேக்காத ஒரே கேள்வி அது!''

''போய்க் கேட்டுட்டு வா.''

வஸந்த் மறுபடி வரதனை நோக்கிச்சென்று ''வரதன் இன்னொரு சின்ன விஷயம்.''

''சொல்லுங்கோ.''

''விபத்து நடந்த அன்னைக்கு எத்தனை மணிக்கு பஸ் கிளம்பித்து?''

''எந்த ராஜா எந்தப் பட்டணம்போனாலும் ஒம்பதரை மணிக்கு ஸ்டார்ட் பண்ணிடுவோம். என்னு பங்களூர்லருந்து ஒருருக்கு கம்பெனி டே ட்ரிப் உண்டு...''

''ஒம்பதரை. தாங்க்ஸ். ஞாயிற்றுக்கிழமை மறந்துராதீங்க.''

வஸந்த் திரும்பி வந்து ''ஒன்பதரையாம் பாஸ்'' என்றான்.

''சரி.''

''இது தெரிஞ்சுண்டு என்ன ப்ரீதி உங்களுக்கு?''

''சும்மாத்தான்'' என்று சிரித்தான் கணேஷ்.

4

மத்தியானம் கேஸ் தன்னுடையதாகி விட்டதில் கணேஷ் பிரிட்டிஷ் லைப்ரரி போகலாம் என்றான். வஸந்த் ஜேம்ஸ் பாண்ட் படம் போகலாம் என்றான். இரண்டு பேரும் ஒத்துப் போகாததால் அந்த விசாரிப்பைத் தொடர்ந்து அந்த பஸ் முதலாளியைப் பார்த்து விட்டு வந்தால்



அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப் போட்டி-1984.



அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ.**	**1000**
இரண்டாவது பரிசு	**ரூ.**	**500**
மூன்றாம்பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 விதம்)	**ரூ.**	**500**

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

❋ கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

❋ அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.

❋ நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்பவேண்டிய கடைசி தேதி: ஜூன் 15

❋ உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.

❋ பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.


❋ கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

❋ எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் இடையாது.

❋ சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

❋ போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 5 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.



அன்றைக்கே அந்தப் பெண் கேட்ட விவரங்களை முழுவதும் அறிந்து கொண்டு விடலாம் என்று தீர்மானித்தனர். தமிழ்ப்பெயராகத் தோன்றவில்லை. கே. ஜி. ஸிங் என்றிருந்தது ''என்ன ஸிங் பாஸ். இது தாடியா, அதாடியா?''

''நேராப் பாத்தாத்தான் தெரியும். 'ஸிங்'குனு கர்னூடகாவில் கூட இருக்காங்க.''

ஹாரீடோஸ் ரோடில் ஒளிந்து கொண்டிருந்தது அந்த வீடு. கேட்டுக்கு அருகிலேயே அலங்காரமாக கே. ஜி. ஸிங்—ஜமுனு என்று போர்டில் எழுதியிருந்தது. ''ஜமுனு ஸிங். எங்க கேள்விப்பட்டிருக்கேன் இந்தப் பேரை'' என்றான் வஸந்த்.

''ஆரம்பிக்காதே.'' வீட்டுக்குள் நுழைவதற்குச் சீட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. அனுமதி கிடைத்து உள்ளே போனபோது கே. ஜி. ஸிங்குக்கு கார்கள் சேகரிப்பது ஒரு பொழுது போக்கோ என்னும் அளவுக்கு மூன்று நான்கு கார்கள் இங்கே, அங்கே நின்று கொண்டிருந்தன. இருந்தும் நிறையவே இடம் இருந்தது. சுத்தமாக வெட்டப்பட்ட புல்வெளியில் இடையில் செயற்கைப் பாதையில் நடந்து ஒரு பாமிரேனியனின் சின்னக் குரல் வல்லைக் கடந்து உள்ளே சென்றபோது ஹாலில் உட்காரச் சொன்னான் சேவகன். ஒரு சிறுவன் சோபாவில் உட்கார்ந்து கொண்டு ரிமோட் கண்ட்ரோலைத் திருகிக் கொண்டிருக்க எதிரே வீடியோ அவன் விரலுக்கேற்ப வடிவம் மாறிக் கொண்டிருந்தது. கலர் டி. வி. கார்ப்பெட். அலமாரியில் விலை உயர்ந்த குப்பைகள். 'புக் ஆஃப் நாலெட்ஜ்' ஒன்பது பாகம். ஒரு பரத நாட்டியப் பெண்ணின் போட்டோக்கள்.

''அ இப்ப தெரிஞ்சுப் போச்சு பாஸ். ஜமுனுஸிங் பரத நாட்டியம்.''

ஆளுனர் அவளுக்குக் கேடயம் வழங்க மூக்கில் வைரம் ஜொலிக்கச் சிரித்துக் கொண்டு பெற்றுக் கொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில் ஸிங் வந்து சேர்ந்து கொண்டு உட்கார்ந்து, ''பச்க அந்தர் ஜாவோ'' என்றார். 'பையன் எழுந்து சென்றான். அவருக்கு ஐம்பதுக்கருகிலிருக்கும். தலை நிறைய முடி. தொண்ணூறு சதம் வெளுத்திருந்தது. ஸஃபாரி ஸூட் வாசனையாய் இருந்தது. கண்களுக்கருகில் லேசாகச் சுருக்கம். கணேஷைக் கைகுலுக்கி வேலைக்காரனைச் சமிக்ஞையுடன் பார்க்க அவன் உள்ளே சென்றான்.

கார்டை மறுபடி பார்த்துக்கொண்டே, ''லாயர்ஸா? என்ன விஷயம்? அன்னைக்கு ஆக்ஸிடெண்டைப் பத்தியா?''

''ஆமாங்க. என் பேர் வஸந்த். அவர் கணேஷ்.''

''கேஸ் ஏதாவது போடப் போறீங்களா சொல்லுங்க. ஏற்கெனவே மிருதியான நஷ்டம். ஏறத்தாழ நாலரை லட்சம் போயிடுச்சு.''

''தமிழ் நல்லாவே பேசறீங்க.''

''தமிழ்தாங்க. இங்கதான் பொறந்து வளர்ந்தது. முன்னோர்கள் ராஜஸ்தான். வீட்டுக்குள்ள ஒரு மாதிரி இந்தி பேசுவோம்.''

'' 'ஜமுனு ஸிங்'குங்கறது?''

''என் மனைவி.''

''டான்ஸ் பார்த்திருக்கேன்.''

''அவளுக்கு ஹாபி அது.''

''இல்லேங்க நல்ல பேரு. நேஷனல் ப்ரோக்ராம் கூடக் கொடுத்தது....''

''அதுவரைக்கும் போசலே. நீங்க வந்த விஷயத்தைச் சொல்லுங்க.''

''நாங்க கேஸ் எதுவும் போட வரலேங்க'' என்றான் கணேஷ்.

''அப்பாடா ஒரு நிம்மதி. என்ன அலைச்சல் தெரியுமா? அந்த விபத்துக்கு அப்புறம் போலீஸ்காரங்க ரொம்ப சத்தாய்ச்சுட்டாங்க. ஏழு எட்டு வெவல் 'ப்ரைப்' பண்ணவேண்டியிருந்தது.''

''நாங்க விசாரிக்க வந்தது தாமோதர்ங்கற ஒருத்தரைப் பத்தி.''

''தாமோதர்? வெயிட் எ மினிட். பேர் கேட்டா மாதிரி இருக்குது. இந்த ஆக்ஸிடெண்டில போய்ட்டாரு இல்லே?''

''ஆமாங்க அவர்தான்.''

''அவரைப் பத்தி என்ன இப்ப? இன்ஷூரன்ஸ்ல ஏதாவது தகராறு?''

''இல்லேங்க அந்த ஆளோட ஸிஸ்டர் எங்ககிட்ட வந்தாங்க. அவரு திடீர்னு பங்களூர் பொறப்பட்டுப் போயிட்டாராம் எதுக்குன்னு சொல்லாம கொள்ளாம. யார் அதுக்குக் காரணம்னு கண்டுபிடிக்க முயற்சி பண்ணச் சொன்னாங்க.''

''கண்டுபிடிக்க...?''

டெலிபோன் அடித்தது. ஸிங் அதை எடுத்துக் கேட்டு ''ஹலோ'' என்றார்

(அடுத்த இதழில் முடியலாம்.)

''என் மனைவி ஒவ்வொரு சமாசாரமும் எனக்கு 4 முறை சொல்லிறான்.''

''ஏன்?''

''நான் அவள் சொல்வதில் 'கால் பாகம்' தான் காதில் வாங்கிக்கொள்ளுறேனும்!''

—நா. பாலன்.



இல்லறம் எனும் நல்லறம்

முறையான உபயோகம் நிறைவான பயன்



உங்கள் பிரஷர் குக்கரின் ஆயுள் நீடிக்க:

காஸ்கெட்டை மூடியில் பொருத்தும் போது, காஸ்கெட், மூடி இரண்டுமே ஈரமில்லாமல் இருக்க வேண்டும். காஸ்கெட் சுருங்கினால் அதைக் கையால் மெல்ல அகட்டிவிட்டுப் பொருத்தவும். மூடியின் விளிம்பில் உப்புப் புகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குக்கரின் உள்ளே தண்ணீர் இல்லாமல் வெறுமனே அடுப்பு எரித்தால் காஸ்கெட் கெட்டுவிடும். ஆவி தோன்றுவதற்குக் குக்கரில் குறைந்தது ஒரு கோப்பை நீராவது இருக்க வேண்டும். குக்கரைத் தேய்த்துக் கழுவும்போது ஞாபகமாக காஸ்கெட்டைக் கழற்றி விடுங்கள். ஒவ்வொரு உபயோகத்துக்குப் பிறகும் காஸ்கெட்டைக் கழுவுங்கள். குக்கரின் மூடி இடித்து நசுங்கி விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். நசுங்கல் இருந்தால் ஆவி வெளியேறிவிடும். தெளிசல் வெளி ஓரத்தில் ஸ்டீல் உல்லால் தேய்த்துச் சமனப்படுத்துங்கள்.

ஸேப்டி வால்வ் : இதை அவ்வப்போது பரிசோதித்துப் பார்க்க வேண்டும். நம்பகமான கடைகளில் மட்டுமே (உரிமைபெற்ற விற்பனையாளர்களிடம்) புதிய வால்வ் வாங்கலாம்.

குக்கரின் மூடி மேல் உள்ள குமிழியில் உணவுப் பொருள் சிக்கிக் கொண்டிருக்கிறதா என்று அவ்வப்போது சரிபார்த்துச் சுத்தம் செய்யுங்கள். மூடியைத் தொடும் அளவுக்கு உணவுப் பொருள்களைக் குக்கரில் குவிக்காதீர்கள். மூடும்போது சரியான திசையில் மூடியைத் திருப்புங்கள். கைப்பிடியில் உள்ள ஆணிகளைக் கழற்றி அவ்வப்போது எண்ணெய் தடவுங்கள். மூடியைக் கழற்றி வைக்கும்போது தலைகீழாக வைக்காதீர்கள். இதனால் குமிழி பாதிக்கப்படும்.

மிக்ஸி: மிக்ஸி பாத்திரத்தின் அடியில் உள்ள ரப்பர் 'கப்ளிங்' மிக்ஸியின் மேற்பகுதியில் சரியாகப் பொருந்த வேண்டும். இல்லாவிட்டால் ரப்பர் தேய்ந்து விலகிவிடும். ரப்பர் பகுதி தேய்ந்த பிறகும் புதியது மாற்றாமல் மிக்ஸியை உபயோகிக்கவே கூடாது. இதனால் ரப்பருக்கு மேலேயுள்ள நைலான் பகுதியில் வெடிப்பு ஏற்பட்டு, வெடிப்புகளின் வழியே திரவம், அல்லது நீர் கசிந்து மோட்டாருக்குள் சென்று மோட்டாரே எரிந்து போகக் கூடும். வெடிப்பு ஏற்பட்ட மறு கணமே டீலர்கள் 'விற்பனையாளரிடம் மிக்ஸியை எடுத்துச் செல்லுங்கள்.

மிக்ஸியில் எப்போதும் சரியான அளவில் பண்டங்களைப் போட்டு அரைக்க வேண்டும். அதிகமாய்ப் போட்டுத் திணறடிக்கக் கூடாது. வெட் கிரைண்டிங் செய்யும்போது போதுமான அளவு தண்ணீர் கலக்க வேண்டும். அப்போது தான் பிளேடு சுலபமாய்ச் சுழலும். தண்ணீர் போதாவிட்டால் உணவுப்பொருள் பிளேடைச் சிக்கச் செய்து பிளேடு உடையக் கூடும்; மோட்டார் எரிவதற்கும் வாய்ப்பு உண்டு. மிக்ஸியைத் தகுதிக்கும், சக்திக்கும் மேல் வேலை வாங்காதீர்கள். வோல்டேஜ் ஃப்ளக்சுவேஷன் இருந்தால் கட்டாயம் உபயோகிக்கக்கூடாது.

மிக்ஸியை ஆஃப் செய்து பத்து விநாடிகள் கழித்தே பாத்திரத்தை மிஷினிலிருந்து எடுக்கலாம். வெந்நீர் போட்டு அலம்பவே கூடாது. குறைந்த வேகத்தில் ஓட்டினால் இந்தச் சாதனம் நீடித்து உழைக்கும். அரைக்கப்படும் பொருளும் நன்றாக மசியும்.

ஃப்ரிஜ்: வாரம் ஒரு முறை டீஃப்ராஸ்ட் செய்ய வேண்டும். ஃப்ரீஜரிலிருந்து ஐஸை எடுக்கும்போது கூர்மையான சாதனங்களைப் பயன்படுத்தக் கூடாது. தெர்மோஸ்டாட்டை ஒரே சீதோஷ்ண நிலைக்குப் பொருத்த வேண்டும். அடிக்கடி சீதோஷ்ணத்தை ஏற்றி இறக்கினால் தெர்மோஸ்டாட் பழுதாகிவிடும். ஐஸ் க்ரீம் செய்யும் போது மட்டுமே தேவைக்கேற்ப சீதோஷ்ணத்தை உயர்த்தலாம். ஒவ்வொரு ஃப்ரிட்ஜ் தயாரிப்பாளரும் ஒரு தனி ஸர்வீஸிங் யூனிட் வைத்திருப்பார். அவரிடமின்றிப் பிறரிடம் ஃப்ரிட்ஜைப் பழுது பார்க்க ஒப்படைக்காதீர்கள். ஃப்ரிட்ஜின் தட்டுக்களில் டேபிள் மாட் (MAT)டுகளைப் போட்டு வைத்தால் கண்ணாடியில் கீறல் விழாமல் இருக்கும். ஏதாவது சிந்தினாலும் மாட்டை எடுத்துச் சுத்தம் செய்து விடலாம்.

நன்றி: ஐடியல் ஹோம் அண்ட் குட் ஹவுஸ் கீப்பிங் இயர் புக்.

"நுனிப்புல் மேய்தல்!"

தாரிணி அவனை எதிர்பார்க்கவில்லை. இந்த அளவுக்கு ஒதுக்கிய பின்பும் அவன் வந்திருப்பது ஏற்கெனவே அவள் மேலிருந்த அருவருப்பை அதிகப்படுத்தத்தான் செய்தது. அழைப்பிதழை அவனிருக்க விலாசத்துக்கு போஸ்ட் செய்த போதே நினைத்தாள். இந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் இடி விழுந்ததைப் போல் முடங்கிப் படுத்துக் கொண்டு முகமுகவென்று பெண் பிள்ளை போல் அழுது கொண்டிருப்பானே தவிர, தன் கல்யாணத்தை நேரடியாகப் பார்க்கும் தைரியம் அவனுக்கு இல்லை என்று.

எதிர்பார்த்ததைப் போலவே அவன் முகூர்த்தத்திற்கு வரவில்லை! தொலையட்டும் சனியன் என்று மனம் ஒப்புக்கு ஒலமிட்டாலும், தாலி கழுத்தில் ஏறும் வரை அவனை எதிர்பார்த்து அவளுக்குள் ஒரு நெருடல் இல்லாமல் இல்லை!

உடன் பணியாற்றும் ஆபீஸ் நண்பர்கள் எல்லாம் ஒவ்வொருவராக ரிஸப்ஷனுக்கு வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி சொல்லித்தான் தாரிணிக்கே தெரியும், அவன் வந்துகொண்டிருக்கிறான் என்று.

அந்த நிமிஷத்திலிருந்தே மனம் டைப் அடிக்க ஆரம்பித்து விட்டது.

அவன் ஐந்தாறு நண்பர்களோடு மிகவும் அடக்கமாக வந்தான். ''என் மனமார்ந்த வாழ்த்துக்கள் மிஸஸ் தாரிணி'' என்றபடி இருகரம் கூப்பினான். தோளில் தொங்கிய ஜோல்னா பையிலிருந்து ஒரு சிறிய பார்சலை— எடுத்து அவளிடம் நீட்டினான். அவன் நன்றாக வயிறெரியட்டும் என்பதற்காக தாரிணி தன் கணவனை மிகவும் நெருங்கி உராய்ந்தபடி.

''இவர் மிஸ்டர் புருஷோத் — எங்க கம்பெனியிலே கட்டுமான என்ஜினியர்'' என்று அவனைத் தன் கணவனுக்கு அறிமுகப்படுத்தினாள். புருஷோத் மிகவும் நேசபாவத்தோடு அவருடைய இரண்டு கரங்களையும் பற்றிக் குலுக்கி வாழ்த்துச் சொல்லும் போது குறிப்பாகக் கவனித்தாள்பொறாமை வழிகிறதா என்று! ஊஹூம், சரியான அழுத்தக்காரன். எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் சர்வ சாதாரணமாக நண்பர்களோடு அரட்டையடிக்கப் போய் விட்டான்.

தனிமை கிடைத்த போது விஷயம் தெரிந்த ஓரிருவர் தாரிணியிடம் வெளிப்படையாகத் தம் அதிர்ச்சியைத் தெரிவித்த போதும் அவள் அலட்டிக் கொள்ளவில்லை. அவன் புருஷோத்தைப் புறக்கணித்ததன் காரணம் கேட்டு நாசூக்காக அவர்கள் குடைந்த போதும் 'வீட்லே பிடிக்கலே' என்று சிரித்து மழுப்பி விட்டாள்! பிறகென்ன! ஒரு கோழைக்குக் கழுத்தைநீட்ட இஷ்டமில்லை.

கட்டுமானப் பணிகளை ஏற்று நடத்தும் அந்தத் தொழிலகத்தின் பிரதம என்ஜினியருக்கு டைப்பிஸ்ட்டான தாரிணிக்கும், அவருக்குக் கீழ் பணிபுரியும் கட்டுமான என்ஜினியரான புருஷோத்துக்கும் ஏற்பட்ட ஆரம்பப் பரிச்சயம் மெல்ல வளர்ந்து ஒருநாள் காதலாகிப் போனதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை— கல்யாணம் என்று வந்த போது குறுக்கே நிற்க புருஷோத் சைடில் பெற்றவர்களும், மற்றவர்களும் இல்லாதது ஓர் அனுகூலமானது! தாரிணி வீட்டில் மட்டும்''அத்தை பிள்ளை இருக்கும் போது அடுத்தவன்



எதற்கு?'' என்ற கேள்வியோடு எதிர்ப்பு எழுந்தது. ஆனால் தாரிணியின் பிடிவாத குணத்தையும், வைராக்கியத்தையும் நன்கு அறிந்திருந்த அவருடைய பெற்றோர்களும், உடன் பிறந்தவர்களும், வீட்டுக்கு ஒரே பெண்ணான அவள் சந்தோஷத்தைக் கருதி இதர அம்சங்கள் திருப்தியாக இருந்ததினால், நீண்ட யோசனைக்குப்பின் தலையாட்டி விட்டனர்.

மூன்று மாதங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை பார்க்கில் உட்கார்ந்து கல்யாண விஷயமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு, பக்கத்திலிருந்த தியேட்டர் ஒன்றில் படம் பார்த்துவிட்டு, நிதானமாக நடந்து வந்ததில் புருஷோத்தும் தாரிணியும் ஜனக்கூட்டத்தைத் தவற விட்டுவிட்டனர். பவர் ஹவுஸிலிருந்து சேலம் கேம்ப் போக மலைப் பாதைப் படிகளில் ஏறிக் கொண்டிருக்கும் போது 'ஹோ'வென்றிருந்த தனிமை கொஞ்சம் பயப்படுத்த தாரிணி புருஷோத்தின் கைகளைப் பிணைத்துக் கொண்டாள்.

''பயப்படாதே தாரிணி — நானிருக்கேனில்லே'' என்று புருஷோத் தைரியம் சொன்னாலும் தாரிணியிடம் கொஞ்சம் தடுமாற்றமிருந்தது. அதற்கேற்றாற் போல் உச்சியில் இருக்க மோரித் திட்டின் மேல்சில நெருப்புக் கண்கள் விழித்தன. மேல்மூச்சு வாங்கப் படிகளை விழுங்கி விட்டு உச்சியிலிருந்த பாதையில் கால் பாவிய போது தான் மோரித் திட்டின் மேல் உட்கார்ந்து பீடியின் நெருப்புக் கண்களைத் திறந்தபடி ஓரிருவர் இருப்பது தெரிந்தது.

மங்கிய நிலவொளி அவர்களை யோக்கியர்களாகக் காட்டவில்லை. பரட்டைத் தலையும், லுங்கியும், சாராய நாற்றமும், கொச்சையான பேச்சுமாக அவர்கள் சூழ்நிலையை இறுக்கமாக்க தாரிணி புருஷோத்தோடு ஒட்டிக் கொள்ள முற்பட்டாள்.

ஜெரா



பின்னாலிருந்து ''த்தா – நில்லுய்யா'' என்ற குரல் கேட்டும் நிற்காமல் நடந்து கொண்டிருக்க, திபுதிபுவென்ற சத்தத்தோடு ஓடிவந்து குறுக்கிட்டுக் கொண்டார்கள் அந்த மோரி ஆசாமிகள்.

குத்துக்கல் போல ஐந்தாறு பேர்கள்! வஞ்சனையில்லாமல் வளர்த்திருந்த உடம்பு—ஜனநடமாட்டம் அற்றுப் போன பகுதி! இருட்டு — எது நடந்தாலும் கேட்பதற்கு நாதியில்லை! தாரிணிக்கு மயக்கமே வந்து விடும் போலிருந்தது. பயத்தோடு புருஷோத்தைப் பார்த்தாள்!

புருஷோத் கொஞ்சமும் பதற்றத்தைக் காட்டாமல் அவர்களைப் பார்த்துச் சிரித்தபடி ''என்னண்ணே'' என்றான். அவர்களில் ஒருவன் ''கூப்புடக் கூப்புட தெனாவெட்டா போறியாடா! இவளை எங்கே இருந்து தள்ளிக்கிட்டு வர்றே'' என்றான். மற்றொருவன் தாரிணியின் கன்னத்தைத் தடவி ''குட்டி 'ஜில்லு'தான் இருக்கா'' என்று சிலாகித்தான். அந்தக் கணத்தில் தாரிணிக்குக் குப்பென்று உடம்பு எரியக் கோபம் சிலிர்த்தது. பயத்தால் நாக்கு புரள மறுக்க, புருஷோத்திடம் ஓர் ஆண்மையின் சிலிர்ப்பை, ஆவேசத்தை பாய்ந்து குதறி எதிரிகளைப் பந்தாடி விடும் வேகத்தை எதிர்பார்த்தாள். ஆனால்.....

புருஷோத் மிகவும் பவ்யமாகக் குரலைத் தாழ்த்தி ''அண்ணே – மன்னிச்சுடுங்க. சத்தியமா நீங்க கூப்புட்டது காதில விழலே! நானும் தங்கச்சியும் பஸ்ஸை வுட்டுட்டோம். அதால வீட்டுக்குப் போற அவசரத்துலே...'' என்று குரல் தடுமாறிக் கெஞ்சியபடி கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தான். தாரிணிக்குப் பக்கென்றது —புருஷோத்தை ஒரு புழுவாகப் பார்த்தாள்! இவன் ஆண் மகன்தானா என்று அருவெறுத்தாள்! சற்று முன் அவள் பார்த்துவிட்டு வந்திருந்த சினிமாவில் இது போன்ற சூழ்நிலையில் அந்த ஹீரோ எப்படிப்பட்ட ஆவேசத்தோடு செயல்பட்டான்! ஆனால் இவன் ? கனல் கக்க வேண்டிய நேரத்தில் கண்களைக் கசக்கிக் கொண்டு....

''சீ! பொட்டச்சி மாதிரி அழுவுறான்— வுடுங்கடா தொலையட்டும்.'' தாரிணி நினைத்ததை ஒருவன் சொல்ல புருஷோத் சட்டென்று கண்களைத் துடைத்துக்கொண்டு எல்லோருக்கும் கூழைக்கும்பிடு போட்டான். ''பாப்பா இட்டே பவுன் இருக்கா பாருடா'' — என்று ஒருவன் ஆரம்பிக்க புருஷோத் வலியத் தன் கையிலிருந்த கடிகாரத்தையும் தாரிணியின் கழுத்திலிருந்த இரண்டு பவுன் சங்கிலியையும் கழற்றி அவர்களிடம் சமர்ப்பித்தான். பிறகு விடுவிடுவென்று அவளை இழுத்துக்கொண்டு நடந்தான்.

தாரிணிக்கு அவன் ஸ்பரிசம் அமிலமாய் எரித்தது இவன் இத்தனை பெரிய கோழையாய் இருப்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவர்களை எதிர்க்கத் திராணியில்லாமல், அடிக்குப் பயந்து அவன் கும்பிடு போட்டபடி கண்ணீர் விட்ட காட்சியை மறக்கவோ, தப்பிக்க வேண்டி தன்னைத் 'தங்கை' என்று சொல்லி உறவையே களங்கப்படுத்திய கயமையை மன்னிக்கவோ அவள் தயாராக இல்லை — இவனுடைய இழிவைச் சரிக்கட்ட இரண்டு பவுன் சங்கிலி வேறு தண்டம்! வீட்டைச் சமீபித்ததும் தாரிணி அவன் கரத்தை உதறினாள்!

''நீயெல்லாம் ஒரு ஆம்பிளைன்னு சொல்லிக்க வெட்கலமா இல்லே — போய் புடவையைக் கட்டிக்கோ'' என்றபடி காரி உமிழ்ந்தாள்!

''தாரிணி — ப்ளீஸ் — கன்ட்ரோல் யுவர் செல்ப், நான் சொல்றதை...'' என்று ஆரம்பித்தவனின் முகத்தைக் கூடப் பார்க்காமல் ''குட் பை டு ஆல்'' என்று கத்திவிட்டுக் கதவை அறைந்து சாத்தினாள்! ஒரு வாரம் ஆபீசுக்கு லீவு போட்டாள்! திரும்ப அவனைச் சந்திப்பதைத் தவிர்த்தாள்! அவனாக வந்த போதும் தடுத்தாள்! பிறகு அவன் எங்கோ வெளியூரிலிருந்து போட்ட கடிதங்களைப் பிரித்துக் கூடப் பார்க்காமல் கிழித்துக் கடாசினாள்! பெற்றோரிடம் வற்புறுத்தி அத்தைப் பிள்ளையோடு முகூர்த்தம் குறித்துக் கொண்டாள்! அவர்கள் வற்புறுத்திய பிறகு தான் வேண்டா வெறுப்பாக அழைப்பிதழைக் கூட அனுப்பி வைத்தாள்! அவனோ கொஞ்சமும் வெட்கமில்லாமல் வாழ்த்தவேறு வந்திருக்கிறான்!

எரிச்சலோடு அவள் பார்வையைச் சிதறவிட்ட போது சற்றுத் தொலைவில் ரிஸப்ஷனுக்கான மெல்லிசை நிகழ்ச்சி நடக்கும் மேடைக்குப் பின்புறமாகப் புருஷோத் தன் தந்தையோடு சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவனிடம் அப்படியென்ன பேச்சு வேண்டி இருக்கிறது இந்த அப்பாவுக்கு! மெல்ல எழுந்து கணவனிடம் ''எக்ஸ்க்யூஸ் மீ'' சொல்லிவிட்டு அவர்களை நோக்கி நடந்தாள் தாரிணி. வழியில் அவளோடு சேர்ந்து கொண்ட அவள் தம்பி ஒரு தங்கச் சங்கிலியை அவளிடம் தந்தான்!

சுதந்திரம்

முண்டாசுக்காரனும்
பொக்கை வாய்க் கிழவனும்
வாங்கிக் கொடுத்த
சுதந்திரம்
இன்று—
அரசியல்வாதிகளின்
நாவில் மட்டும்
நாற்காலி போட்டு
அமர்ந்திருக்கிறது.

—பொன். சந்தானகிருஷ்ணன்.





ஃபோர்டின் இந்திய சம்பந்தி!

கார் மன்னர் 'ஃபோர்டு' இந்தியா வுக்கு சம்பந்தி ஆகப் போகிறார்! ஆம், ஃபோர்டின் கொள்ளுப் பேரனை 'ஆல் பிரட் பிரஷ் ஃபோர்டு', இந்தியப் பெண் 'ஷர்மிளா பட்டாச்சார்யா'வை வரும் செப்டம்பர் 22-ம் நாள் மணக்கப் போகிறார்! இருவரும் 'ஹரே கிருஷ்ண இயக்கத்தில்ஒருவருக்கொருவர் அறிமுகமாகி, காதல் ஏற்பட்டு திருமண மாகக் கனிந்திருக்கிறது!

—டி வீக், தகவல்: சம்பத்குமாரி.

''புருஷோத் ஸார் ப்ரஸண்ட் பண்ணின பார்சல்லே இருந்தது'' என்றபடி பொருள் பொதிந்த பார்வையைத் தம்பி அவள்மேல் வீசிய போது முகத்தைக் கடூரமாக்கிக் கொண்டான்! சங்கிலி நிச்சயம் இரண்டு பவுன் இருக்கும்! அவளிடமிருந்து அந்த ராஸ்கல் பிடுங்கிக் கொடுத்த அதேமாடல்! ப்ளாட்பார்ட், அவனுடைய கோழைத்தனத் தைப் பூசி மெழுக இப்படி ஒரு பரிசா? தாரிணி தகித்துப் போனாள்! அவன் அவர்களைச் சமீபித்ததும் அப்பா சாதுரியமாக இடத்தைக் காலி செய்தார். புருஷோத் புன்னகைத்தான்.

''பை இ பை — மிஸஸ் தாரிணி. இந்தாங்க உங்க சொத்து.''

அவன் ஜோல்னா பையிலிருந்து எடுத்து நீட்டிய காகிதக் கட்டை வாங்காமல் அவள் விழிகளை உருட்டவும்

''நீங்க எனக்கு எழுதிய கடிதங்கள் இனிமே என்கிட்டே இருக்கிறது நியாய மில்லே... அதனாலே... ப்ளீஸ்...'' என்று இரைஞ்சினான். அவள் மௌனமாக அதை வாங்கிக் கொண்டதும் ''ம்யூசிக் ரொம்ப நல்லா இருக்கு! நான் போய் உட்கார றேன்'' என்றபடி நழுவ எத்தனித்தான்.

''மிஸ்டர் புருஷோத்!''

அவன் நின்று நிதானமாக அவளைப் பார்த் தான்!

''இனி மேலாவது ஒரு ஆம்பிளையா இருக்கப் பழகிக்கோங்கோ — இன் ப்யூச்சர் நீங்க ஏமாத்தி கட்டிக்கப் போற உங்க மனைவியாவது மனசு இடிஞ்சிப் போகாம இருக்கட்டும்''

புருஷோத் கணநேரம் மௌனமாகப் புன்னகைத்து விட்டு அவளைத் தீர்க்கமாகப் பார்த்தான்.

''மிஸஸ் தாரிணி — இப்பக் கூட நீங்க என்னை போக விட்டிருந்தா இதை நான் சொல்லி இருக்க மாட்டேன். அன்பார்ச்சு னேட்லி நான் சொல்லித் தீர வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திட்டீங்க. நான் சுத்த மான ஆம்பிளைங்கறதுலே உங்களுக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம். கொஞ்சம் நிதா னமாய் யோசிச்சுப் பாருங்க. அன்னிக்கு நான் சூழ்நிலையை ஸ்டடி பண்ணாம என் வீரத்தைக் காட்டறதை மட்டும் குறிக் கோளா வச்சு, என்னைவிடப் பலசாலிங்களான அந்த ரவுடிங்க கூட மோதி இருந்தா என்ன நடந்திருக்கும்? நீங்க வேணா என்னை ஆம் பிளே சிங்கம்னு ஆராதிச்சிருக்கலாம். ஆனா அவங்க அத்தனை பேரும் ஈஸியா என்னை வதம் பண்ணிட்டு உங்களைக் குறி வச்சிருப் பாங்க.

''நிச்சயமா நீங்க கற்போட தப்பிச்சு இன் னிக்கு இன்னொருத்தர் மனைவிங்கற ஸ்தானத் தைப் பெருமையோட அடைஞ்சிருக்க முடி யாது. அன்னிக்கு நான் ஆம்பிளைத்தனத்தை காட்டாததுனாலதான் இன்னிக்கு நீங்க உங்க கணவருக்கு சுத்தமான மனைவியாக் கிடைச்சிருக்கீங்க. தைரியமா ஒரு வாழ்க் கையை ஏத்துக்கத் தயார்ப்படுத்திக்கவும் உங்களால முடிஞ்சுது.

''ஒரு பெண்ணோட மானத்தைக் காப் பாத்தற வெறியா இருக்கறதுதாங்க உண்மையான ஆம்பிளைத்தனம்! அதை விட்டுட்டுத் தன்னோட வீராப்பைக்காட்டி அந்தப் பெண்மையை நாலு பேர் நாசப் படுத்த அனுமதிக்கறது எந்த விதத்திலே நியாயம்? ஒரு பெண் தன்னோட இருக்கற வரைக்கும் எந்த ஒரு ஆண்மகனும் தன் எதிரிங்க கிட்டே ஆவேசப் படவேகூடாது. அதனாலதான் அன்னிக்கு நீங்க அருவருக்கிற அளவுக்கு நான் தவித்துப் போக வேண்டி இருந்தது.

''அப்போதைக்கு என்னைப் பொறுத்த வரைக்கும் தங்க நகையோ, கடிகாரமோ என் ஆண்மையை நிரூபிக்கணும்ங்கற ஆவே சமோ எதுவுமே பெரிசாப் படலே! விலை மதிப்பில்லாத உங்க கற்பைக் காப்பாத்தி யாகணும்! அதுக்காக நான் எந்தக் கேவலத் துக்கும் என்னைத் தயார்ப்படுத்திக்கிட்டேன்.

''அட்லீஸ்ட், அதுக்குப் பின்னால யாவது நீங்க நிதானமா யோசிச்சிருக்கலாம். என் வேண்டுகோளையோ, லட்டர்ஸையோகொஞ் சம் மனசுக்குள்ளே அனுமதிச்சிருக்கலாம். ஆனால் உங்க நுனிப்புல் மேயற குணம் உங்களைத் திசை திருப்பி அதிலேயே நிலைப் படுத்தின பின்னால இரும்பவும் உங்களை நெருங்க எனக்கு இஷ்டமில்லே! ஸோ, அன்னிக்கு நீங்க எனக்குச் சொன்னதை இப்ப நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய கட்டாயத்துல இருக்கேன்.

''குட் பை டு ஆல்.''

அவன் திரும்பி நிதானமாக நடக்கும் போது அவன் உருவம் வானத்துக்கும், பூமிக்குமாக வியாபித்திருப்பதைப் போலப் பிரமை தோன்றி மனதில் வலியேற்படுத்த, உருளும் கண்ணீரைத் துடைக்கவும் திராணி யின்றி விக்கித்து நின்றாள் தாரிணி.

நெஞ்சக் கனல்

நா. பார்த்தசாரதி

முன்கதைச் சுருக்கம்

எழிலிருப்பு ஜமீனின் உள் பட்டணத்துப் பெரிய புள்ளிகளுடன் மோதி எதிர்த்த திருமலைராஜன் அடியாட்களால் தாக்கப்பட்டு நள்ளிரவில் தேரடியில் கொண்டு வந்து போடப்படுகிறான். தேரடி நந்தவனத்துப் பண்டாரமும் அவர் மகள் சண்பகமும் அவனைக் காப்பாற்றி நந்தவனத்தின் உள்ளேயே சில மாதங்கள் தலைமறைவாகத் தங்க உதவுகின்றனர். சில மாதங்கள் கழித்துச் சுயமரியாதை இயக்க வீரரான மருந்துக்கடைப் பொன்னுசாமியின் உதவியுடன் திருமலை அதே தேரடியில் ஒரு பெட்டிக் கடை போடுகிறான். மேலே படிக்கலாம்...

அத்தியாயம் 3

அந்த ஊரும், ஊர் மக்களும் மேலானவையாகவும், மேலானவர்களாகவும் மதித்த எல்லாவற்றையும், எல்லோரையும் தான் கீழானவையாகவும், கீழானவர்களாகவும் கருதித் துணிந்து எதிர்க்கப் போகிறோம், விரோதித்துக் கொள்ளப் போகிறோம், என்ற உணர்வே கள் குடித்து விட்டு நடப்பது போன்றதொரு பெரிய தைரிய போதையை அவனுக்கு அளித்திருந்தது.

எதிரிக்கு எதிரி தனக்கு நண்பன் என்ற முறையில் தான் திருமலை, இங்கர்சால் மருந்தக உரிமையாளர் பொன்னுச்சாமியை அணுகியிருந்தான். பொன்னுச்சாமியின் உருவத்தையும், செம்மறியாட்டுக் கடாக் கொம்புகள் போன்ற அவரது மிடுக்கான மீசையையும் பார்த்தே மிரண்டவர்கள் பலர். உள்பட்டண வாசிகளையும், உடையார்களையும் அவர்களை ஆதரித்த மேட்டுக் குடி மக்களையும் பொன்னுச்சாமியும் அவருடைய சுயமரியாதை இயக்க ஆட்களும் முழுமூச்சாக எதிர்த்தனர். பொன்னுச்சாமியும் அவரது இயக்கமும் திருமலையைக் கவர்ந்ததற்கு முக்கியமான காரணம் இது தான். அவன் யாரை எதிர்க்க விரும்பி



னானே அவனை மேற்படியார்கள் அவனுக்கு முன்பிருந்தே எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் தான் அந்த ஊரில் தனக்கு நிரந்தர அரணாக இருக்க முடியும் என்று திருமலை நம்பினான்.

நந்தவனத்துப் பண்டாரமும் அவன்மேல் இரக்கப்பட்டுச் சின்ன உடையார் அவனைத் திட்டிய மோசமான ஆங்கில வார்த்தைக்கு அர்த்தம் சொல்லிய பள்ளிக்கூட ஆசிரியரும் வெறும் நல்லவர்கள் மட்டும்தான். இனிமேலும் அவன் அந்த ஊரில் காலந்தள்ள வேண்டுமானால் அதற்கு நல்லவர்கள் தயவு மட்டும் போதாது. வல்லவர்களின் பாதுகாப்பும் வேண்டும் என்பதைத் திருமலை தெளிவாக உணர்ந்து கொண்டிருந்தான். அந்த மலைப் பிரதேசத்திலும், சுற்றுப்புறத்து ஊர்களிலும் பொன்னுச்சாமியின் இனத்து மக்கள் தொகை அதிகமாயிருந்தது. உள்பட்டணத்து உடையார்கள் எப்போதுமே பொன்னுச்சாமியின் இன மக்களை விரோதித்துக் கொள்ளத் தயங்குவார்கள். ஆள் கட்டுள்ளவர்களின் விரோதத்தை எப்போதுமே தவிர்த்து விடுவது உடையார்களின் வழக்கம்.

தேரடியில் கடை போடுவதற்கு முன் திருமலை தானே பொன்னுசாமியைப்போய்ச் சந்தித்து எல்லா விவரமும் சொன்னான். உள்பட்டணத்து வாசிகள் அடியாட்கள் மூலம் தன்னைப் பழி வாங்கியதையும், பண்டாரம் தன்னைத் தூக்கிப்போய்ப்பலமாதங்கள் தலைமறைவாக வைத்துக் காப்பாற்றியதையும் கூடச் சொன்னான். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுவிட்டு. ''பயப்படாதீங்க தம்பி! தனி மனிதனை அவசியமற்ற பயங்களிலிருந்து விடுவிப்பது .தான் எங்க சுயமரியாதை இயக்கத்தின் தலையாய கடமை! எங்களைத் தேடி வந்திருக்கீங்க... இனிமேக் கவலையை விடுங்க...'' — என்றார் பொன்னுச்சாமி. அந்த ஆதரவும், அரவணைப்புமே அவனை அவர்களோடு சேர்த்தன. மிகவும் இளைஞனான தன்னைக் கூட அவர் மரியாதைப் பன்மை கொடுத்துப் பேசியது திருமலையைக் கவர்ந்தது.

''நீங்க வந்து கடையைத் தொடங்கி வைக்கணும்''—

''சண்டிப்பா வாரேன் தம்பி!''

வாக்குக் கொடுத்தபடி தம்] ஆட்களோடு வந்து பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்து ஒரே ஓர் இளநீர் மட்டும் வாங்கிக் குடித்து வியாபாரத்தை ஆரம்பித்து வைத்திருந்தார் பொன்னுச்சாமி. அவரும் அவரது ஆட்களும் வந்திருந்து கடையைத் தொடங்கியதால் திருமலைக்கு உடனேயோ, சில நாட்கள் கழித்தோ, உபத்திரவங்கள் செய்ய வேண்டுமென்று நினைத்துக் காத்திருந்த உள்பட்டணத்துக் கைக்கூலிகளுக்கு எச்சரிக்கை போல்அமைந்து விட்டது. திருமலையின் மேல் கைவைத்தால் பொன்னுச்சாமி வகையறாவின் விரோதத்தை உடனே விலைக்கு வாங்க வேண்டி நேரிடும் என்பது எல்லோருக்கும் அவனைப் பற்றிய ஒரு ஜாக்கிரதை உணர்வைத் தோற்றுவித்திருந்தது.

ஜமீன் பெரிய உடையார் காலமானபின் ஏழெட்டு மாதக் காலம் உள்பட்டணத்தில் அவன் சோதனைகளை அநுபவித்தான். கடைசியில் அவனுக்கும் சின்னக்கிருஷ்ணனுக்கும் மோதல் வந்து இரவோடிரவாகக் கடத்தி வந்து அவனை அடித்துப்போட்டார்கள். தொடர்ந்து பல மாதங்கள் பண்டாரத்தின் நந்தவனம் அவனுக்குப் புகலிடம் அளித்திருந்தது. தொடர்ந்து உயிர் வாழ வேண்டுமானால் அவன் ஊரை விட்டு வெளியேறி விடுவது தான் நல்லது என்று பண்டாரம் அறிவுரை கூறினார். அதை அவன் ஏற்கவில்லை. விரக்தியும், ஆக்கிரமும் கலந்த ஒரு வகை முரட்டுத் தனத்தை அந்த நந்தவனத்து அஞ்ஞாத வாசம் அவனுள் மூட்டிவிட்டிருந்தது. பொன்னுச்சாமியும், அவரது சுயமரியாதை இயக்கமும் அவனது இந்த முரட்டுத்தைரியத்தை ஒரு மதமாகவே ஏற்று அங்கீகரித்து அரவணைக்கத் தயாராயிருந்தது நல்லதாயிற்று. அவனுள் முறுகி வெறியேறியிருக்க பழிவாங்கும் உணர்ச்சிக்கு நாகரிகக் கலப்பற்ற ஒரு முரட்டு வீரம் உரமாகத் தேவைப்பட்டது. நாசூக்கோ, முரட்டு மென்மையோ, இல்லாத அத்தகைய அஞ்சாமையை அடையப் பொன்னுச்சாமி அவனுக்கு உதவினார்.

தேரோட்டத்துக்கு முதல் வடம் பிடிக்கவோ, அநுமாருக்கு மாவிளக்குப் போடவோ ஜமீன் குடும்பத்தினர் வெளிப்பட்டணத்துக்கு வந்தால்,' பண்டாரமும்,



மற்றவர்களும் இடுப்பில் மேல் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு அவர்களை விழுந்துவணங்கத் தயாராயிருந்த அதே சமயத்தில், ''வடம் பிடிக்கும் உடையாரே! கடன் அடைக்க வழி உண்டா?''—என்றும்,'' அரைவேளைச் சோற்றுக்கு வழியில்லை—திருநாளைக் கொண்டாடிப் பயன் என்ன?'' — என்றும் பெரிது பெரிதாகத் தேரடி மண்டபத்தின் சுவரில் எழுதும் அளவுக்குப் பொன்னுச்சாமியும் அவரது ஆட்களும் துணிந்து தங்கள் எதிர்ப்பு உணர்வைக் காட்டினார்கள்.

நாடு சுதந்திரம் அடைந்து விட்டால் கதர், காந்தி, காங்கிரஸ் எல்லாம்தான் இனி முன்னணியில் இருக்கும் என்று கெட்டிக்காரத் தனமாக முன் கூட்டியே அனுமானித்து உள்பட்டண வாசிகள் கதர் கட்ட ஆரம்பித்தனர். அவசர அவசரமாகச் சுதேசி உணர்வைப் போற்ற ஆரம்பித்தனர். அரண்மனைச் சுவர்களில் திலகர், காந்தி படங்கள் இடம் பெறலாயின. வசதியுள்ளவர்களும் செல்வந்தர்களும் நாளைக்குச் செல்வாக்குப் பெறப் போகிறவர்களை இன்றே முந்திக் கொண்டு ஆதரிக்கும் இயல்பான முன் ஜாக்கிரதை உள்ளவர்கள் என்பதை எழிலிருப்பு ஜமீனும் நிரூபித்தது. இப்போது உள்பட்டணத்தின் போக்கிற்கு எதிரான போக்குள்ள அணி எதுவோ அதில் இருந்தே ஆக வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் திருமலைக்கு இருந்தது. எனவே அவன் சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சி என்று பொன்னுச்சாமியின் போக்கிலேயே தானும் தொடர்ந்து செல்ல வேண்டியிருந்தது. அதே பாதையில் மேலும் சென்றான் அவன். பூரண சுதந்திரக் கோரிக்கையைக் காங்கிரஸும் பாகிஸ்தான் கோரிக்கையை முஸ்லிம் லீக்கும் முன்வைத்துப் போராடிக் கொண்டிருந்த போது பொன்னுசாமி வகையறுவினர்,

''மைசூர், கொச்சி, திருவிதாங்கூர், ஹைதராபாத் ஆகிய சமஸ்தானங்களைத் தவிர எஞ்சிய ஆந்திர, கேரள, கன்னட, தமிழ்ப் பகுதிகளடங்கிய தென்னாட்டைத் திராவிட நாடாகத் தனியே பிரித்துத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருப்பதற்குத் தீர்மானம் நிறைவேற்றினர்.

திராவிடர்களுடைய கலை, நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம் ஆகியவை முன்னேற்றமடைய இது உதவும் என்று தென்னிந்திய நலவுரிமைச் சங்கமாக இருந்த நீதிக் கட்சி தீர்மானம் கொண்டு வந்த 15—வது மாநில மகாநாட்டுக்குப் பொன்னுச்சாமியோடும் மற்ற ஊர் ஆட்களோடும் தானும் போய் வந்தான் திருமலை.

அவனுடைய போக்கைப் பார்த்துப் பயந்த பண்டாரம் மெல்ல ஒதுங்கி விட்டார். ஆனாலும் தன்னைக் காப்பாற்றியவர் என்ற முறையில் திருமலைக்குப் பண்டாரத்தின் மேலும் அவர் குடும்பத்தின் மேலும் ஒருவகை மரியாதையும் அன்பும் நீடித்தன.

பொன்னுச்சாமியைப் போலவே வெட்டரிவாள் மீசையும் உயரமும், பருமனுமாகத் திருமலை பார்க்கிறவர்களுடைய மிரட்சியைச் சம்பாதிக்கும் ஓர் ஆகிருதியை அடைந்திருந்தான். பொன்னுச்சாமி சொல்லித் தூண்டியதன் பேரில் ஒரு பஞ்சாயத்துத் தேர்தலில் கூட உள்பட்டணத்துக்காரர்கள் நிறுத்தியிருந்த மலையப்பன் என்ற வேட்பாளரை எதிர்த்துத் திருமலை போட்டி போட்டான். தோற்றுவிட்டது. ஆனாலும் அவன் நம்பிக்கையிழந்து விடவில்லை. தேரடி மண்டபத்தை ஒட்டி ஒரு தங்குமிடம் சிறிய வாசகசாலை எல்லாம்கூட ஏற்படுத்திக்கொண்டாயிற்று. இப்போதெல்லாம் முழு நேரமும் அவனால் கடையில் இருக்க முடிவதில்லை. சாதிக்காய்ப் பெட்டியைக் குப்புறக் கவிழ்த்து எளிதாகவும், சிறிதாகவும் ஆரம்பிக்கப்பட்ட கடை மேலும் வளர்ந்து பெரிதாகிப் பெட்டிக் கடையாக மாறியிருந்தது. இரண்டு பையன்கள் எடுபிடியாக வேலைக்குச் சேர்ந்திருந்தார்கள். சர்பத் கலக்க, இளநீர் வெட்டித்தர என்று உதவிக்கு ஆள் வேண்டியிருந்தது.

ஒருநாள் மாலை பொன்னுச்சாமி அண்ணன் ஏதோ வேலையாக இன்னொரு தொண்டருடன் — அவரும் இயக்கத்தைச் சேர்ந்தவர்தான் — மோட்டார் சைக்கிளில் திருமலையைத் தேடித் தேரடிக்கு வந்து பேசிக் கொண்டிருந்தார். மாலை வேளையாகையினால் கோயில்களுக்குப் போகும்

உங்கள் எதிர்காலம், உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி நீங்கள் அதிகம் கவலைப்படுபவர்களா? அப்படியானால் உங்களுக்கு அதிகம் குழந்தை பிறக்க வாய்ப்பில்லை. ஆச்சரியமாக இருக்கிறதா? ஆமாம், பயம் பீதியே சிறந்த கருத்தடை மருந்து என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் உள்ளவர்களுக்கு அதிகம் குழந்தைகள் பிறப்பதில்லை. இதற்குக் காரணம் அவர்கள் தம்மைப் பற்றியும், தம் குழந்தைகளைப் பற்றியும் பயம், பீதி கொள்வதேயாம். இத்தாலியில் குழந்தைகள் பிறப்பு 30 சதவிகிதம் குறைந்து விட்டது. இங்கிலாந்து மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குழந்தைகள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.



சனிக்கிழமை எண்ணெய் குளிப்பு ஏன்?
ஞாயிறன்று உழைக்க வேண்டியது ஏன்?

சனிக்கிழமை

சனி கிரஹத்தின் ஆதிக்கம் உள்ள தினம் இது. சோம்பேறித்தனத்தையும் களைப்பையும் உண்டாக்கும் நாள். தீவிர உடலுழைப்பு, அல்லது சிந்தனையில் ஈடுபடலாகாது. இது ஓய்வு நாள். எனவே நமது முன்னோர்கள், இந்த நாளை எண்ணெய் குளிப்புக்கு உகந்த நாளாக நிர்ணயித்துள்ளனர். தேக உஷ்ணத்தை குறைக்கவும் நரம்பு பிடிகளை தளர்த்தவும் எண்ணெய் குளிப்பு உதவும். சனிக்கிழமை காலை எண்ணெய் தேய்த்து குளிப்பது அனைவருக்கும் "சௌபாக்யத்தை" அளிக்கும் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

ஞாயிற்றுக்கிழமை

சூரியன் சக்தியின் உருவம். சுறுசுறுப்பான பணியை மேற்கொள்ளவும் மூளைக்கு வேலை கொடுக்கவும் உகந்த நாள். இந்தினத்தில் எண்ணெய் குளிப்பு கூடாது. ஏனெனில் நரம்புத் தளர்ச்சி ஏற்படக் கூடும். செயல் திறன் குறையும். மும்முரமாக உழைக்க வேண்டிய நாள் இது.
ஞாயறன்று எண்ணெய் ஸ்நானம் செய்தால் இருதய நோய் ஏற்படும் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

''ஆரோக்கியம்''

பெண்களுக்கு: வெள்ளியன்று எண்ணெய் ஸ்நானம் செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுக்கிரன் அனைத்து செல்வத்தையும் சந்துஷ்டியையும் பெண்களுக்கு வழங்குகிறது. மேலும் வெள்ளியன்று எண்ணெய் குளிப்பு பெண்மைத் தன்மைகளை வளர்க்கிறது.

பெண்களின் கூட்டம் அதிகமாகி இருந்தது. நல்ல வியாபார நேரம். அன்று ஏதோ விசேஷ நாள் வேறு. வழக்கத்தை விட அதிகக் கூட்டமாயிருந்தது அன்று.

அப்போது கடையருகே சண்பகம் வந்து கூசினாற்போல் ஒதுங்கித் தயங்கி நிற்பதைத் திருமலைதான் முதலில் பார்த்தான். அவனோடு பேசிக் கொண்டிருந்த பொன்னுச்சாமியும் அவளைப் பார்த்துவிட்டார். "இந்தா திரு! முதல்லே தங்கச்சிக்கு என்ன வேணும்னு கேளு! நாம அப்புறம் பேசிக்கலாம்" — பொன்னுச்சாமி அண்ணன் செல்லமாக அவனைத் 'திரு' என்று மட்டுமே கூப்பிடுவது வழக்கமாகியிருந்தது.

சண்பகத்துக்கு அவள் எதிர்பார்த்த தனிமை கிடைக்காததால் பொன்னுச்சாமியும், அவரோடு வந்திருக்கும் ஆளும் பேசிவிட்டுப் போகட்டும் என்று அவள் தயங்கினாற்போலத் தோன்றியது. திருமலை விடவில்லை. கடையிலிருந்து இறங்கி வந்து அவளை மலர்ந்த முகத்தோடு எதிர்கொண்டான்.

"என்ன சண்பகம்? உன்னைப் பார்த்து மாசக் கணக்கில் ஆகுதே? என்ன காரியமா வந்தே?"

"உங்ககிட்டத் தனியாக் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. அந்த அண்ணன் போனபெறவு மறுபடி வந்து பார்க்கிறேன்."

"அண்ணன் இருந்தா உனக்கென்ன வந்திச்சு? நீ சொல்ல வந்ததைச் சொல்லேன்"—

"இல்லே! நான் கோயில் பக்கமாகப் போயிட்டு மறுபடி வரேன்" — என்று வெட்கத்தோடு நழுவி ஒதுங்கி நகர்ந்து விட்டாள் சண்பகம்.

அவள் ஏதோ ஒரு முக்கிய வேலையாக வந்திருக்க வேண்டும் என்பது மட்டும் திருமலைக்குத் தோன்றியது. அது என்னவேலையாக இருக்குமென்றுதான் புரியவில்லை.

(தொடரும்)

நவீன சுயம்வரம்

● மேல் ஷாவனிஸம் பற்றிப் பேசும் பெண் மணிகள், தயவு செய்து இந்த நாடகத்தைப் பார்க்காதீர்கள்! ●

நவீன சுயம்வரம் நாடகத்தில் கதை கொஞ்சநஞ்சமில்லை. 'செமத்தியாக' இருக்கிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால் — 'பாஸ்' பாண்டியனின் கீழ் விற்பனைப் பிரதிநிதியாக, ஐந்நூற்றுச்சொச்ச ரூபாய் சம்பளத்தில் வேலை பார்க்கும் கிருஷ்ணு, அதிசாமர்த்தியசாலி. வாசாலகன். தனக்குத் தகுந்த கணவன் தேவை என்று விளம்பரம் செய்யும் சீதாவை, பேட்டியன்றே பேச்சால் கவர்ந்து, அவள் மனதில் இடம் பிடித்து விடுகிறான். (ரீல் ரீலாக, கோம சுவை அளப்பு!) சீதா யாருமல்ல. முதலாளி பாண்டியனின் சாட்சாத் மகள்! பாண்டியனே பக்கபலமாய் நின்று திருமணம் நடக்கிறது. நடந்தபின்தான், உண்மை தெரிகிறது சீதாவுக்கு. ஏற்கெனவே பொய் சொல்லுகிறவர்களைக் கண்டால் பொறுக்காதவள்: ஏமாற்றி விட்டானே என்று உறுமுகிறாள். ராசியானவள் சீதா என்று வந்த புதிதில் சொன்ன எல்லோரும், பிறகு அவளையே ஒதுக்க, பின்னாளில் வளர்ந்து விட்ட சாமர்த்தியக் கணவன் அவளுக்குத் தாங்கலாக நிற்க, தள்ளி வைத்த கணவனை, தான் பணிந்து ஏற்கிறாள் சீதா. (ஆரம்ப எச்சரிக்கை இதற்குத்தான்!)

நடிப்பில், பாண்டியனாக வரும் கணேஷுக்கும் சீதாவாக வரும் ஸ்ரீவேகாவுக்கும் தாராளமாகவே மார்க்குகள் தரலாம். கிருஷ்ணுவாக வரும் பிரசன்னுவுக்கு மேடையில் இத்தனை மேனரிஸம் தேவையில்லை.

கதை — வசன கர்த்தா ரமணியின் பேனா, பல இடங்களில் துள்ளி விளையாடியிருப்பதற்கு ரசிகர்கள் தரும் அப்ளாஸ்களே சாட்சி. ஆனால் ஒரு தமிழ் நாடக வசனத்தில், இத்தனை ஆங்கிலம் தேவையா? அதிலும் கிருஷ்ணு பேசுகிறபோது?

சமீபத்திய செய்தி: சிவகுமார்—லக்ஷ்மி நடிக்க சினிமாவாக ஐந்தாயிரம் அடி வரை வளர்ந்து விட்டதாம் இந்த நாடகம்.

—சாருகேசி



(மகளிர்க்கான பாலிடெக்னிக் படிப்புகள் பற்றிய தகவல்கள் தொடர்கின்றன.)

''ஏன் மிஸ், இஞ்சினியரிங் காமர்ஸ் தவிர இந்த பாலிடெக்னிக்கில் வேற கோர்ஸ், ஏதாவது இருக்கா?''

''காஸ்மெட்டாலஜி பத்தி...?''

''இன்னிக்கு அழகா இருக்கணும்னு ஆசைப் படாதவங்க யார் இருக்காங்க? விதவிதமா அலங்காரம் பண்ணிக்காதவங்க தான் யார்? இப்போதான் பியூட்டி கிளினிக்குகளுக்குப் போய் வருகிற பெண்கள் எண்ணிக்கை அதிகமாகிட்டே வருது!

''பத்தாம் கிளாஸ் ரிஸல்ட் வரும்போது பேப்பர்ல விளம்பரம்வரும். அதுல அப்ளிகேஷன் வாங்க எவ்வளவு பணம் அனுப்பணும்னுபோட்டிருப்பாங்க. அதன்படி அனுப்பி விண்ணப்பம் வாங்கிக்கலாம். ஒரு விஷயம் மறக்கக் கூடாது. போஸ்டல் ஆர்டரை அனுப்பி, விண்ணப்பம் வாங்கிற போஸ்டல் ஆர்டரோட தேதி, விளம்பர தேதிக்கு முன்னதாக இருக்கக் கூடாது.''

''பொதுவா மத்த பாலிடெக்னிக்குகளைப் பத்தி ஏதாவது...?''

அழகு நிலையம் நடத்த..

''இருக்கே! காஸ்ட்யூம் டிஸைனிங் அண்டு டிரஸ் மேக்கிங்னு ஒண்ணு. காஸ்மெடாலஜின்னு ஒண்ணு. டிப்ளமா கோர்ஸ் தான். இரண்டுமே! காஸ்ட்யூம் டிஸைனிங் — டிரஸ்மேக்கிங் மூணு வருஷப் படிப்பு. எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்திருக்கணும் இது படிக்க. மத்தபடி குறைந்த பட்ச மார்க் எவ்வளவு வாங்கணும்னு கண்டிஷன் ஏதுமில்லே.''

''டிரஸ் மேக்கிங்ல தையல்தானே சொல்லித் தருவாங்க?''

''தையல்தானேன்னு ரொம்ப ஸிம்பிளா சொல்லிட்டியே காயத்ரி! இங்க அதைப் படிப்படியா — சொல்லித் தருவாங்க. துணி வகைகள், என்று ஆரம்பித்து, A to Z சொல்லித் தருவாங்க. புதுப்புது காஸ்ட்யூம்ஸ், டிஸைன் செய்து, தைக்கிறது எப்படின்னு தெரிஞ்சா ரொம்ப நல்ல வேலை வாய்ப்பு இருக்கும்மா!

''சுயவேலை வாய்ப்பு தவிர, பெரிய பெரிய காஸ்ட்யூம் டிஸைனர்கிட்டயும் வேலை செய்யலாம். ஏற்றுமதி பண்ணுகிற கார்மெண்ட் ஃபாக்டரிலே வேலைக்குப் போகலாம். சினி ஃபீல்ட்ல கூடவாய்ப்பு இருக்கு.''



''இதுக்கு சினிமா ஃபீல்டுல, டெலிவிஷன் சென்டர்களில, பியூட்டி கிளினிக்குகளில என்று பல இடங்களில் வேலை கிடைக்கும். வசதி இருந்தா, தானே கூட சொந்தமா பியூட்டி கிளினிக் ஆரம்பிக்கலாம்.''

''சரி மிஸ் இந்த காஸ்மெட்டாலஜி கோர்ஸுக்கு என்ன படிச்சிருக்கணும்?''

''பி. யூ. ஸி முடிச்சிருக்கணும். அதாவது இப்போ ப்ளஸ் டூ''

''அது சரி எப்போ இதுக்கெல்லாம் அட்மிஷன் ஆரம்பிக்கும்?''

''பாலிடெக்னிக்குகளுக்கு இப்போ ஏக கிராக்கி. இடங்கள் ரொம்ப லிமிடெட்தான். இதுல ரிசர்வேஷன் வேற இருக்கு. நல்ல மார்க் வாங்கினாத்தான் இடம்கிடைக்கும். நிறைய மார்க் வாங்கிடுவே இல்லையா.''

''ஓ. ஷ்யூர்''

''விஷ் யூ ஆல் தி பெஸ்ட்''

எஸ். சந்திரமௌலி

ஆடை தயாரிக்க...



சிறிது நாள் இடைவெளிக்குப் பின் கோவைத் தம்பி, இளையராஜா, சுந்தரராஜன் காம்பினேஷன்.

அட்ரஸ் தேடி அம்பிகாவின் பின்னால் சிவகுமார் தொடரப் போய், ஆளாளுக்கு தர்ம அடிபோட்டு அவரைக் குதறி எடுத்து விடுகிறார்கள். தவறுபுரிந்து அம்பிகா வருந்துவதும், எழுத முடியாமல் கைக் கட்டு போட்டிருக்கிற சிவகுமாருக்கு உதவுவதும் அந்த உறவுக்கு இயல்பான ஆரம்பம். அப்புறம் வரும் ஒவ்வொரு காட்சியும் அம்பிகாவின் மேல் ஏராளமான மரியாதையைக் கிளப்பி விடுகிறது. மெதுவாய் அவருடைய கடந்த காலமும், இன்றைய விதவைக் கோலத்தின் அவசியமும் வெளிப்படுகிற காட்சிகள் தனியான சிறுகதை.

மனைவியின் வளமான குரலை சினிமாப் பின்னணிக்குப் பயன்படுத்தச் சொல்லும் அன்பான டாக்டர் கணவனாய் மோகன். மனைவியின் முதல் பாடல் இங்கே பதிவு ஆகிக்கொண்டிருக்க, அவனுடைய அன்புக் கட்டளைக்குப் பணிந்து அங்கே ஓர் உயிரைக் காப்பாற்றுகிற பணியில் டாக்டர் ஈடுபட்டிருக்க, அந்த நேரத்துப் பாடல் (பாடவா...உன்பாடலை...) நன்றாகவே மனசில் பதிகிறது. (அத்தனை தரம் ரிபீட் செய்தது கொஞ்சம் அலுப்புதான்)

விபத்தில் கணவன் இறந்ததும், அவனைப் பற்றிய இனிமையான நினைவுகளை நெஞ்சில் சுமந்துகொண்டு அவனுடைய பெற்றோர்களுடனேயே கிராமத்திற்கு வந்து தங்கி விடும் சியாமளா கௌரியின் வாழ்வில் அவனுடைய அபிமான எழுத்தாளன் (ர்) சி.ஆர்.எஸ். குறுக்கிடுவதும், இருவருடைய கோணங்களிலும் இடைப்பட்ட அந்த உறவு எப்படி உருக் கொள்கிறது என்பதும் பின் கதை.

வாசகி என்ற ஸ்தானத்தில் இருந்து தான் அலசும் கருத்துக்களை வாழ்க்கை என்று வருகிற போது ஏற்க முடியாத வெகு இயல்பான சியாமளா கௌரியின் பாத்திரப் படைப்பு, இந்தப் படத்தின் உயிர் நரம்பு. அம்பிகா அதன் பூரண பரிமாணங்களைப் புரிந்து கொண்டு செய்திருப்பது ஒரு சுகமான ஆறுதல்.

தர்ம சங்கடமான அந்த சி. ஆர். எஸ். பாத்திரத்திற்கு சிவகுமாரை விட்டால் சரியான ஆள் ஏது? கிளுகிளுப்பாக சேர்க்கப்பட்டிருக்கும் பாண்டியன். இளவரசி - தண்ணீரில் எண்ணெய்.

நான் பாடும் பாடல்

'கவுண்டன்' கவுண்டமணிக்கு நியாயமாய் நிறையக் கைத்தட்டல்கள் கிடைக்கின்றன. சரத்பாபு அவ்வப்போது குறுக்கிடுவது கடைசி வரை சுவையான எதிர்பார்ப்பைத் தூண்டுகிறது. ஏன், இரண்டொரு காட்சிகளில் கண்ணடிப் போட்ட பஸ் கண்டக்டராக வருகிற சுரேஷ் கூட நினைவில் இடம் பிடிக்கிறார்.

மற்றபடி கதை அமைப்பை எடுத்துக் கொண்டால், டைரக்டரின் சிரத்தை தெரிகிறது.

பாடல்களை எடுத்துக் கொண்டால் இளையராஜாவின் உழைப்பு தெரிகிறது.

'பாடும் வானம்பாடி' பாடல் எஸ். பி. பாலசுப்ரமணியத்தின் தேன் குரலில் வெகுநேரம் நெஞ்சில் இழைகிறது.

மற்ற நான்கில் இரண்டு ஆகா, இரண்டு ஓ. கே.

அழுத்தமான கதையை நேர்த்தியாய்ச் சொல்லியிருக்கிற விதத்திற்காக, பாடல்களை செருகவேண்டும் என்று இடைவேளை வரை அவசரப்பட்டமாதிரி பின்னால் அவசரப்படாததற்காக, மனதில் நிற்கிற பாத்திரங்களைப் படைத்ததற்காக என்று நிறைய விஷயங்களுக்காக சுந்தரராஜனைப் பாராட்டலாம்.





வெள்ளைப் புறா ஒன்று...

முன்னுரை: வெள்ளைப் புறா ஒன்று என்ற நல்ல தலைப்புடன் (நன்றி: பாடலாசிரியருக்கு) சமீபத்தில் வெளியாகி இருக்கும் திரைப் படத்தைப் பற்றியும், அதன் கதை நடிப்பு நடிகர்கள் பாடல்கள் இசை இயக்கம் சண்டைக்காட்சிகள், நகைச் சுவைக்காட்சிகள் ('போதும் நிறுத்தய்யா — ஒட்டு மொத்தமா சொன்னாப் போதாதா?')— மற்றும் — ஆகியவை பற்றியும் விமர்சிப்பதே ஜெயமன்மதனின் நோக்கம்:

பொருள்: இந்தப் பகுதியை பல சிறு பகுதிகளாகவும் பிரித்துப் பார்க்கலாம்.

1. கதை: ஒரு கடமை தவறாத இன்ஸ்பெக்டர், ஒரு கள்ளக் கடத்தல்காரனால் அநியாயமாகப் பலியாகிறார். அந்தக் கடத்தல் காரனை, இன்ஸ்பெக்டர் மனைவி எப்படிப் பழிவாங்குகிறார் (நோ... நோ... நீங்கள் நினைக்கிற மாதிரி இன்ஸ்பெக்டர் மனைவி துப்பாக்கி வீராங்கனை ஆகவில்லை — குடும்பப் பாங்காகவே பழிவாங்குவதுஎப்படி. அதுவும் கோடாலிப் பிள்ளையையும் பெண்ணையும் வைத்துக் கொண்டு- என்கிற மாதிரியான ட்ராக்கில் செல்லும் படம்) என்பதே கதையாகும்.

2. நடிப்பு: எல்லோருமே ஏனோதானோ. இதுசினிமாப் படம், இது சினிமாப்படம் என்று காட்சிக்குக் காட்சி நினைவு படுத்துகிறார்கள். BE BOLD - FACE THE WORLD என்று ஜெய்சங்கர் மாடுலேஷனே இல்லாமல் சொல்லும் வசனத்தை ஒரு எல். கே. ஜி. இன்னும் நன்றாகச் சொல்லும். இதில் சுஜாதா (அழுமூஞ்சி), சரத்பாபு (கம்பீரம் இல்லாத இன்ஸ்பெக்டர்) வி. கே. ராமசாமி (கொட்டகைச் சுவர் இடிந்து விழுகிற குரல்) ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

3. நகைச்சுவை: பூங்கொம்பாக மனோரமாவும், அவரது மகனாக வரும் லூஸ் மோகனும், பூங்கொம்பின் மருமகனாக குண்டு பிந்துகோஷும் நன்றாக இணைந்து நகைச்சுவை விருந்துவழங்குகிறார்கள். அதிலும் பிந்துகோஷ் சர்க்கஸ் பாணியில் காப்பிக் கோப்பைகளை அடுக்கிக் கொண்டு வருவதும், வணக்கம் சொல்வதும் படே ஜோர். லூஸ் மோகன் வசனம் பேசுகிற விதமும் ('ஒனக்கு முன்னால பிடி குடிச்சிருக்கேனு. ஒனக்கு முன்னால சாராயம் குடிச்சிருக்கேனு — இல்லை— ஏன்?— புரியுதா — அதான் மதர்ஸ் செண்டிமெண்ட்) மனோரமா அதற்கு ஈடாய் வசனம் பேசுகிற விதமும் படத்திற்குப் பலம்.

4. சண்டைக் காட்சிகள்: இடைவேளைக்குப் பின்னால் அறிமுகமாகி, ரயில்வே ட்ராக்கில் போகிற, வருகிற ரயில்களுக்கு இடையே விஜய்காந்த்சண்டைபோடும் இடம் டாப். இதுபோன்ற சில சண்டைக் காட்சிகளுக்காக ஜூடோ ரத்தினத்தைப் பாராட்டியே ஆக வேண்டும்.

5. பாடல்கள்: இரண்டு பாடல்கள் கேட்கிற மாதிரி.

6. இசை: மேற்கண்ட இரண்டு பாடல்களுக்குக் கேட்கிற மாதிரி உள்ளது.

7. இயக்கம்: கங்கை அமரன் இப்படத்தை டைரக்ட் செய்திருக்கிறார். படப்பிடிப்பைத் தொடங்குவதற்கு முன் வேறு சில படங்களைப் பார்த்துவிட்டு அந்தந்தப் படங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக் கூட்டுப் படம்.

முடிவுரை: ஒரு காலத்தில் ஏ. வி. எம். தயாரிப்பு என்றால் மக்களிடம் நிறைய எதிர்பார்ப்பு இருக்கும். தயாரிப்பாளர்களும் ஏமாற்ற மாட்டார்கள். இப்பொழுதும் எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்கிறது. எனவே நாசுக்காகச் சொல்ல வேண்டுமானால் முன்னுரையில் சொன்ன மாதிரி — தலைப்பு மிக நன்றாக இருக்கிறது.

—ஜெயமன்மதன்

வட்ட மேஜை

● மூவர் வளர்ந்த மணிக்கொடி (25.3.84 கல்கி) படித்தேன்.

என் கட்டுரை முழுமையான மதிப்பீட்டைச் செய்யத் தவறிவிட்டது என்றுதாங்கள் கூறும் விமர்சனத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், 'ஒரு பக்கச் சார்பு'



என்று கூறுவது எதனால்? எதை வைத்து அப்படியொரு முடிவுக்கு வந்தீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.

குற்றாலம் தேவதத்தா.

டாக்டர் தேவதத்தா தாம் ஒரு பக்கச் சார்புடைய கட்டுரையை விழாவில்படிக்கவில்லை என்பதை விளக்க 12 பக்கக் கடிதம் எழுதியுள்ளார். அதைப் படித்தபிறகும் மணிக்கொடி விழா பற்றிய கட்டுரை எழுதிய கம்பராமன் தமது அபிப்ராயத்தில் உறுதியாகஇருக்கிறார். -ஆர்.

● இளையராஜாவின் இசையைப் புகழ்கிற சாக்கில் ஜெனற்றடி பாடல்காட்சியை உமது விமரிசகர் பாராட்டிய விதத்திலிருந்து அவரது ரஸனை நன்றாகத் தெரிந்துவிட்டது. இந்த லட்சணத்தில் இரட்டை அர்த்தத்தையும் குளியல் காட்சியையும் தமிழ்ப் படவுலகம் எங்கே கைவிடப்போகிறது!

மதுரை-1 வி.சந்திரசேகரன்

● திரு. துமிலன் அவர்களுக்கு அஞ்சலிக் கட்டுரையில் ஆனந்தி துமிலனை எங்கள் நெஞ்சை விட்டு அகலா வண்ணம் செய்துவிட்டார்!

மே. மாம்பலம்

நெல்லை. சுவாதி.

● நா. பா. வின் மூலக்கனலுடன் வெளி வந்த கல்கி எங்கள் மனதில் ஆசைக் கனலை மூட்டி அறிவுக் கனலை வளர்த்தது!

விருத்தாசலம்-1

வி. கே. செல்வராஜ்.

● தலைநிமிர்ந்து பார்த்தால் இந்தியரின் சாதனை. தலைகுனிந்து பார்த்தால் இந்தியரின் வேதனை.

தங்களது தலையங்கம் சூப்பர்ப் சார்.

வேலூர்

டி. கே. பாஸ்கரன்.

● இம்மை மாறிமறுமை ஆயினும் என்னும் தலைப்பில் திரு. கிறிஸ்டோபர் திருமதி. கிறிஸ்டோபர் திரு. பிரசன்னா திருமதி. கௌசல்யா ஆகியோரின் உரையாடல் கட்டுரையைப் படித்து உள்ளம் உருகிவிட்டேன்.

ம. குன்னத்தூர்

கே.வி.ஜி. இராமசாமி

● அரசியல்வாதிகளின் எதிர்காலம்கைரேகையிலோ சோதிடத்திலோ வான சாஸ்திரத்திலோ இல்லை சார்! மக்கள் மனங்களில் ஏற்படும் மாற்றங்களில், நம்பிக்கைகளில், ஓட்டுப் பெட்டியில் வந்து விழும் ஓட்டுக்களில்தான் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

திண்டுக்கல் வே. சோமன்.

● இல்லறம் என்னும் நல்லறம் இலவச இணைப்பில் சிறு துளி பெரு வெள்ளம் என்னும் தலைப்பில் நல்ல பல திட்டங்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். ஜனதா பாலிஸிதாரர்விபத்தில் இறந்தால் மட்டுமின்றி விபத்தினால் உடல் ஊனம் அடைந்தால் கூட ஊனத்துக்கு ஏற்பத் தொகைகள் அளிக்கப்படும்.

சென்னை-15

என். நடராஜன்.

● ட.மெ. செகுமா அவர்களின் ''பழையன கழிதலும்'' முழுநாவல் படித்து முடித்ததும் முழுத் திருப்தியை எனக்கு அளித்தது. தலைப்பைப் போலவே 'வித்தியாசமான' அருமையான நாவல். பாராட்டுக்கள், ஆசிரியருக்கு.

மே. மாம்பலம்,

எஸ். மோகன்.



வெறுப்பை வளர்க்கலாமா?

● பெங்களூரில் தமிழக அரசுக்கு உடைமையான திருவள்ளுவர் — அண்ணா — பட்டுக்கோட்டை அழகிரி — சேரன் ஆகிய போக்குவரத்துக்கழகங்களின் அலுவலகங்கள் செயல்படுகின்றன.

இங்கு வேறு மொழியினர் குறிப்பாக ''கன்னடர்'' சென்று ''பஸ்'' குறித்து எதையாவது கேட்டால் முறையோடும், நிதானத்தோடும் பதில் சொல்வது இடையாது. இதனால் கன்னட நண்பர்களுக்கு தமிழக அரசு மீதே ஒரு வெறுப்பு ஏற்படுகிறது!

வேறு மாநிலங்களில்பணியாற்றுவோர் பக்குவப்பட்டவர்களாக — பொறுமைசாலிகளாக — மிகுந்த கவனத்துடன் செயல் படுபவர்களாகஇருந்திட வேண்டும்.

இல்லையேல் இருக்கும் பிரச்னைகளோடு இதுவும் கூட்டுத் தொகைப் பிரச்னையாக உருவெடுக்கும்.

பங்களூர். ப. மூர்த்தி.

(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது)



ஒரு புதிய அழைப்பு

ஒரு போர்வாள் உறங்குகிறது

நா. காமராசன்

சமாதானத்திற்கான நமது ஏக்கங்கள் மறைந்துவிட்டன. வாழ்வா? சாவா? என்பதை நிர்ணயம் செய்யப் போகிற யுத்த காண்டத்தில் நம் சகோதரர்கள் நிராயுதபாணிகளாக நின்று கொண்டிருக்கிறார்கள்.

நான் சித்தப் பிரமை கொண்டவனின் நிலையில் இருக்கிறேன். அந்தப் பத்திரிகைத் தாள்களைச் சுற்றி வந்த கதிர்கள் என் மூளையில் பாய்ந்துவிட்டன. எண்ணங்கள் தீப்பிழம்புகள் ஆகி விட்டன. நீரூற்றுக்களைக் கூட இந்த வெப்பத் தாக்கு பாதித்துவிடும்.

ஒரு கரத்தில் ''தம்மபதத்தையும் மறுகையில் துப்பாக்கியையும் ஏந்திக் கொண்டு அவர்கள் நமது தோழர்களை வேட்டையாடினார்கள். மனிதர்களின் உடல் மூட்டுக்கள் கழற்றப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு ஒரு இனப்படுகொலை நடந்தது. வயல் வெளிகளில் இளம் காற்றில் பயிர்கள் அசைந்தாடும் போது அவற்றோடு ரத்தக்கறை படிந்த தியாகப் போர் வீரர்களின் தலைகளும் அசைந்தாடுவதைப் போல மர்மமாகப் புலப்படும். வானம்பாடிகள் கூட வஞ்சினம் தீர்க்கும் வெறியோடு நீள் அதிர் குரலில் பாடும்.

இலங்கையைப் பற்றிய சோகமயமான நினைவுகளுக்கு எனது தூக்கமற்ற நெடிய இரவுகளை நான் காணிக்கை ஆக்கிக் கொண்டிருக்கிறேன்.

இப்படிச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை—

இந்தியாவில் இந்துக்களும் தமிழர்களும் தான் இளிச்சவாயர்களாக மதிக்கப்படுகிறார்கள். எதைச் சொன்னால் என்ன? இந்தியாவின் போர்வாள் இன்னும் சமாதான உறைக்குள்ளேயே உறங்கிக் கொண்டிருக்கிறது. உறங்கட்டும்... ஆனால் ஒரு எச்சரிக்கை -- இந்தியாவின் உறக்கம் தொடர்ந்தால் தமிழர்கள் விழித்தெழுவார்கள்.



மினி மினுப்புகள்



✕ தேர்தல் கூட்டு பின்னே
மோதிரம் மாட்டுதல் முன்னே

● 1984-ம் ஆண்டு சனவரி திங்களில் நடைபெறும் என்று அச்சிட்டு விற்கப் பட்டன டிக்கெட்டுகள். ஆனால் நிகழ்ச்சி நடந்தது ஏப்ரல் 19.

● ரூ. 25-லிருந்து 50, 100, 250... 1000வரை டிக்கெட்டுகள். டிக்கெட்டைக் கையில் வைத்துக் கொண்டு எந்தக் கேட்டுக்குப் போனாலும் கும்பல் கும்பல்தான். எந்த வழியில் உள்ளே போவது என்று தெரியாமல் திண்டாடினோர் ஏராளம்.

● 36 லட்சம் வசூல் என்று அறிவித்தார்கள். வசூலிக்கப்பட்டது 36லட்சம் என்றால் சரியாக இருக்கும்.

● ஒருவர்: ''சார் அம்பது ரூபா டிக்கெட் முப்பது ரூபா!'' ''ஏங்க முப்பது ரூபாய்க்கு விக்கறீங்க?'' அவருடன் பேசியதில் கிடைத்த தகவல்: அவரது கடை முதலாளியிடம் பணம் வசூலித்துக் கொண்டு டிக்கெட்டு கொடுத்துவிட்டுப் போய் விட்டார்கள். முதலாளி பையனிடம் டிக்கெட்டைக் கொடுத்து நிகழ்ச்சிக்குப் போகச் சொல்லி விட, பையன் ''இந்தக் கும்பலில் இடிபட்டு உள்ளே போகிறதை விட வந்த வரைக்கும் வித்துட்டுப் போயிடலாம்னு..''

● பிரம்மாண்டமான அரங்கம், 1000 ரூபாய் டிக்கெட் காரர்கள் கூட தூர இருந்து தான் பார்க்க முடிந்தது மேடையை. ''நட்சத்திரங்களாயிற்றே! தூர இருந்து தான் பார்க்க முடியும்!'' என ஒருவர் ஜோக்கடித்தார்.

● ஒரு சில புத்திசாலிகள் பைனாகுலர் சகிதம்வந்திருந்தனர். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்களிடம் அதற்கு ஏகக் கிராக்கி.

● எஸ். பி. பாலசுப்பிரமணியம், ஜானகி, வாணி ஜெயராம் இவர்கள் பாடிய போதெல்லாம் கிடைக்காத ஒன்று. ரசிகர்களுக்கு எல். ஆர். ஈஸ்வரி பாடிய போது கிடைத்தது. அதுஎன்ன? பாடிக் கொண்டே, காலை கையை ஆட்டி, கைத் தட்டி, டான்ஸ் ஆடினார் ஈஸ்வரி!

● ''எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலே. உங்களுக்கெல்லாம் வணக்கம்'' இது நிறைய நட்சத்திரங்களின்சொற்பொழிவு.

● அனுராதா வந்திருந்தார். அவரும் டான்ஸ் மாஸ்டர் சுந்தரமும் டான்ஸ் நிகழ்ச்சியை அளித்தனர். ஆமாம்! சிலுக்கு ஏன் வரவில்லே? இந்த ஆபாசமே போதும் என்று?

● எம். ஜி. ஆர். வரும் போது மணி 10.15. 'ராங் நெம்பர்' நாடகம் நடந்து கொண்டிருந்தது. அவர் நாடகத்தை ரசித்திருக்க முடியாது.(நாடகம் அப்படி) பார்த்தார். அவ்வளவுதான். மெல்லிசை தவிர வேறு எந்த நிகழ்ச்சிதான் வாழ்ந்தது?

● எம். ஜி. ஆர். வந்து, மேடை முன் போடப் பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்ததும், பின்னால் உட்கார்ந்திருந்த சிவாஜியை அழைத்து, கட்டித் தழுவி தமக்குப் பக்கத்தில் உட்காரவைத்தார். (அ. இ. மு. க.—இ. காங்கிரஸ் தேர்தல் கூட்டு முடிவாகிவிட்டது)

● கடைசியாக, நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் இரவு வீடு திரும்ப சென்னை நகரின் பல பகுதிகளுக்கும் பஸ் வசதியை அருமையாகச் செய்திருந்த பல்லவனுக்கு ஒரு தாங்க்ஸ்!

—ஜூலி

புகைப்படம்: சுபா

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran



"எனது ஆறு வயதுச் செல்வி பரத நாட்டியம் நன்கு ஆடுகிறாள். நானிலமே அவளது மேடையாம்."
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட் பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்புவதேன்?
போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் வெளிப்படையாகவே கூறுகிறார்கள்.
"என்னுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்தது அல்ல."
குழந்தைகளைக் கேளுங்கள்
பெற்றோர்களைக் கேளுங்கள்
உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்
அதில்... உற்சாகம் துள்ளும் சுவை மட்டுமல்ல, காட்பரீஸின் பிரபல பெயர் மட்டுமல்ல... அவற்றைவிட அதிகமோ அதிகம்!
அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.
காட்பரீஸ்
போர்ன்விடா
Cadbury's Bournvita
SAVE Rs.1.50
The Tastier Food Drink
Cadbury's Bournvita
The Tastier Food Drink
நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka